# சந்திரமண்டல பிரயாணத்துக்கு முன்னர் மே 18-ல் மற்றொரு சோதனை


Registered as a Newspaper in Ceylon வார மலர் ★ ★ விலை சதம் 20

ஈழநாடு

EELA NADU

மலர் 11 இலக பங்குனி13 முஹறம் 7 (26-3-69) புதன்கிழமை இதழ் 44



பாலக்காடு

RVG

பீடிகளையே

உபயோகியுங்கள்



முக்கிய அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தின் பெயரைச் சொல்லி வரும் எவருக்கும் நன்கொடைகள் எதுவும் கொடுக்கவேண்டாம் என்று அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்.


## அமெரிக்கா நடத்தும்

வாஷிங்டன் மார்ச் 25

இவ் வருடம் ஜூன் மாதத்தில் சந்திரனுக்கு மனிதனை அனுப்புவதற்கு முன்னுல் அமெரிக்கா மே மாதத்தில் பரீட்சார்த்தமாக ஒரு விண்வெளிப்பயணத்தை நடாத்தும் இரண்டுவிண்வெளிவீரர்கள் இந்தக் கப்பலில் பயணம்செய்வர்.

மே மாதம் 18-ம் திகதி பூமியை விட்டுக் கிளம்பும் அப்போலோ 9 போன்ற இந்த விண்வெளிக் கலம் சந்திரனை வலம் வரும். இரு நாட்கள் மட்டும் இந்தப் பயணம் நடைபெறுமெனத் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

ஜூன் மாதத்தில் நடக்கவிருக்கும் வரலாற்றுப் புகழ்மிக்க சாதனைக்கு ஒத்திகையாக மே மாதத்து விண்வெளிப்பயணம் அமையுமெனக் கூறப்படுகிறது.

## பரீட்சை நிலையங்களுக்கு பாதுகாப்பு

பருத்தித்துறை, செவ்.

அண்மையில் நடக்கவிருக்கும் க. பொ. த. (சாதாரண) பரீட்சை நிலையங்களுக்கும், வினுப் பத்திரப் பார்சல்கள் வைக்கப்பட்டிருக்கும் வீடுகளுக்கும் தேவையேற்படின் பொலிஸ் பாதுகாப்புகள் அளிக்கப்படவிருக்கின்றன. சகல மேற்பார்வையாளரும் தத்தமக்கு அண்மையிலுள்ள பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வடமாநிலக் கல்வியதிபதி திரு. எஸ். தணிகாசலம் அறிவித்துள்ளார்.

# அயூப் அதிகாரத்தை ராணுவ தளபதியிடம் ஒப்படைத்தார்

## பாகிஸ்தானில் ராணுவ சட்டம் பிரகடனம்

கராச்சி, மார்ச். 25

**பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் தமது அதிகாரங்களை ராணுவ தளபதியிடம் ஒப்படைத்தார். இதனைத் தொடர்ந்து பாகிஸ்தானில் ராணுவச்சட்டம் அமுலாக்கப்பட்டதென்பதை ராணுவ தளபதி ஜய்யாகான் அறிவித்தல் செய்தார்.**

தமது இந்த முடிவுபற்றி அயூப்கான் மக்களுக்கு வானெலி மூலம் விளக்குகையில் சில மாதகாலமாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் குழப்ப நிலைமை பாகிஸ்தானின் பொருளாதாரத்தை வெகுவாகப்பாதித்துவிட்டதாகவும் இதன்காரணமாகவே தாம் தமது அதிகாரங்களை ராணுவ தளபதி ஜய்யாகானிடம் ஒப்படைப்பதாகவும் தெரிவித்தார்.

தளபதி நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவதற்குத் துணையாக மூவர் அவரின் கீழ் இயங்குவர்.

## தமிழரசு வேட்பாளர் பற்றிய செய்தியில் உண்மையில்லை

### அமிர்தலிங்கம் அறிவிப்பு

நல்லூர், செவ்வாய்

**அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடவிருக்கும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களில் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக அடிபடும் செய்திகளிலோ, ஹேஸ்யங்களிலோ எவ்வித உண்மையுமில்லை என்று தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.**

ஊர்காவற்றுறை, மூதூர் ஆகிய இரு தொகுதிகளுக்கு மட்டும்வேட்பாளர்களைத் தெரிந்தெடுப்பதற்கு நியமனக் குழு நியமிக்கப்பட்டுள்ளதென்றும் மற்றத் தொகுதிகளில் வேட்பாளர்களை நியமிப்பதற்கு நியமனக்குழு நியமிக்கப்படவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கிருஷ்ணன் வெற்றி

கொழும்பு, புதன்

கொழும்பில் பாரதத்தைச் சேர்ந்த ராமநாதன் கிருஷ்ணனுக்கும் இலங்கை வீரர் பி. எஸ். குமாராவுக்குமிடையே நேற்று நடைபெற்ற டேவிஸ்கப் சிங்கிள் டென்னிஸ் போட்டில் ராமநாதன் கிருஷ்ணன் வெற்றி பெற்றுர்.

இரண்டாவதுபோட்டியில் பாரதத்தைச் சேர்ந்த எஸ்.



## அமெரிக்க நடனக் குழு இன்றுவருகிறது

கோட்டை, செவ்.

அமெரிக்காவின் பிரபல நடனக் கோஷ்டியினரான 'நியூயார்க் ஆர்ட் இயேட்

## ஜாதிக சம்பத சுவீப் முடிவுகள்

## 70 வயது பென்சனியர் சுருக்கிட்டு தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

மதுபோதையில் இரவு நேரம் வீட்டுக்கு வந்த 70 வயது பென்ஷனியர் அடுத்த நாள் காலையில் வீட்டு விருந்தையில் சுருக்கிட்டுத் தற்கொலையுண்டு கிடக்கக் காணப்பட்டார். இந்தச் சம்பவம் கச்சேரி நல்லூர் வீதியில் நடைபெற்றது.

சின்னத்தம்பி நாகலிங்கம் என்ற மரணமானவரின் மரணம் சம்பந்தமாக திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினுர். மரணமானவர் அன்று சிறிது பணத்தைத் தொலைத்துவிட்டுத் தன்னிடம் கேட்டதாகவும் ஆனல் அன்றிரவு தனது சகோதரி வீட்டில் சாப்பிட்டுவிட்டு வந்து வெளி விருந்தையில் படுத்ததாகவும் அடுத்தநாள் காலையில் கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்ததாகவும் மரணமானவரின் மகளான அன்னபூரணம் தெரிவித்தார்.

மரணமானவரின் மற்றொரு மகளான சரஸ்வதி இராசம்மா ஆகியோரும் சாட்சியமளித்தனர். உதவி சட்டவைத்திய அதிகாரி டாக்டர் செல்லத்துரை பிரேத பரிசோதனை நடத்தினுர். தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

(கா, நி.)

# கோரவிபத்தில் லொறி

## ஒருவர் ஸ்தலத்தில் மாண்டார்

திருகோணமலை செவ்வாய்

கொழும்பிலிருந்து சீனன் வாடியிலுள்ள திருகோணமலை தேயிலை நிர்வாக ஸ்தாபனத்திற்கு தேயிலை ஏற்றிக் கொண்டு வந் லொறி ஒன்று சீனன் வாடியை நெருங்கியதும் கோர விபத்துக்குள்ளாகி அந்த லொறியின் கிளீனர் ஸ்தலத்திலேயே மரணமானுர். திருமலை கொழும்பு வீதியில் 4-ம் கட்டையைச் சமீபித்தபோது பிரஸ்தாப லொறியின் பாகம்

லொறிச் சாரதி எந்தவித ஆபத்துமின்றி தப்பிவிட்டார் இது பற்றி பொலிஸார் புலன்விசாரணை செய்கின்றனர்.

## சிறுவன் பலி

உடுப்பிட்டி, செவ்

அச்சுவேலியைச் சேர்ந்த பதினைந்து வயதுச் சிறுவன் நாய்க் கடிக்குப் பலியானுர். இராமு இராஜதுரை என்னும் சிறுவனே மரணமானவராவார். இச்சிறுவன மந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாதிக சம்பத சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன்

குருநாகலையில் நேற்று இழுக்கப்பட்ட 4-வது ஜாதிக சம்பத சுவீப் சீட்டிழுப்பில் பரிசுபெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

**முதலாவது பரிசு**

12 S 000733 ரூ. 69,000

**இரண்டாவது பரிசு**

14 J 001303 ரூ. 41,400

**மூன்ருவது பரிசு**

03 R 001287 ரூ. 27,600

**நான்காவது பரிசு**

01 A 001249 ரூ. 13,800

ரூ. 6,900 கொண்ட நான்கு பரிசு பெறும் டிக்கட்டுகள்:

| | | |
|---|---|---|
| 13 | D | 000728 |
| 07 | N | 000779 |
| 03 | X | 001610 |
| 05 | U | 000318 |

ரூ. 2760 பெறும் 10 டிக்கட்டுகள்:

| | | |
|---|---|---|
| 09 | G | 000554 |
| 10 | U | 000274 |
| 03 | P | 000205 |
| 14 | L | 001937 |
| 02 | L | 000877 |
| 02 | Y | 001076 |
| 07 | M | 000170 |
| 02 | Z | 000295 |
| 03 | J | 000355 |
| 07 | K | 000923 |

ரூ. 1380 பெறும் 50 டிக்கட்டுகள்:

| | | |
|---|---|---|
| 07 | X | 001863 |
| 08 | C | 000061 |
| 10 | P | 001296 |
| 06 | L | 000625 |
| 06 | F | 001530 |
| 14 | K | 000390 |
| 04 | L | 000691 |
| 15 | O | 000439 |
| 02 | O | 000312 |
| 12 | K | 001408 |
| 03 | D | 001442 |
| 10 | G | 001566 |
| 02 | F | 001254 |
| 07 | H | 001462 |
| 08 | M | 001892 |
| 01 | G | 001522 |
| 02 | G | 000649 |
| 14 | X | 000022 |
| 05 | G | 000706 |
| 08 | W | 000084 |
| 03 | L | 001564 |
| 06 | W | 001458 |
| 09 | X | 000977 |
| 11 | R | 001814 |
| 15 | E | 000330 |
| 07 | O | 000624 |
| 03 | R | 000214 |
| 10 | Q | 001412 |
| 12 | H | 001802 |
| 06 | G | 001976 |
| 11 | M | 001379 |
| 14 | L | 001137 |
| 14 | C | 000360 |
| 02 | W | 000713 |
| 02 | V | 000731 |
| 10 | P | 000420 |
| 11 | F | 001825 |
| 04 | F | 000570 |
| 04 | L | 001811 |
| 07 | O | 000312 |
| 14 | K | 000657 |
| 07 | Q | 000170 |
| 09 | R | 001366 |
| 09 | J | 001983 |
| 14 | P | 001281 |
| 06 | G | 001910 |
| 10 | P | 001222 |
| 15 | Q | 000179 |
| 04 | M | 001667 |
| 11 | S | 001531 |

[இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை. மிகுதி வெளிவரும்.]

பி. எஸ். குமாராவுக்குமிடையே நேற்று நடைபெற்ற டேவிஸ்கப் சிங்கிள் டென்னிஸ் போட்டில் ராமநாதன் கிருஷ்ணன் வெற்றி பெற்ருர்.

இரண்டாவதுபோட்டியில் பாரதத்தைச் சேர்ந்த எஸ். பி. மிஸ்ரா இலங்கை வீரர் ரூபேர்ட் பேர்டினண்ட்ஸை வெற்றி பெற்ருர்.

## தமிழரசு கிளை கூட்டம்

கொக்குவில், செவ்.

உடுவிலில் நடைபெறும் தமிழ் அரசுக் கட்சி மகாநாட்டினை முன்னிட்டு கொக்குவில் தமிழரசுக் கட்சிக் கிளைக்கூட்டம் இன்று திரு. அ. நவரத்தினம் தலைமையில் கோண்டாவில் குமர கோட்டம் வாசிகசாலையில் நடைபெற இருக்கிறது. நல்லூர் எம். பி. டாக்டர் இ. எம். வி. நாகநாதன் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட பலர் உரையாற்றுவார்கள்.



ஆடலழகி லீலா நாராயணனின் ஒரு நடனத்தோற்றம் இது. ஏப்ரல் முதல் திகதி யாழ். திறந்த வெளியரங்கில் யாழ்ப்பாணம் கொழும்பு ஸ்ருடியோ ஸ்தாபனத்தாரின் முப்பதாண்டு விழாவையொட்டி ஜெயசக்தி மன்றத்தினர் நடத்தவிருக்கும் கலைவிழாவில் இந்தக் காட்சியும் இடம் பெறும்.

## தமிழ்த் திரைப்படப் பிரதிகள்

# தமிழ் கலை கலாசாரத்தை அழிக்க எடுத்த நடவடிக்கை

### உடுவில் எம். பி. கூறுகிருர்

யாழ்ப்பாணம், புதன்

''அரசாங்கம் வெளிநாட்டு செலாவணியைச் சாட்டாக வைத்து தமிழ்த் திரைப்படங்களுக்கு 3 பிரதி மட்டும் எடுக்கலாமெனத் தடைவிதித்திருப்பது தமிழ்க்கலையையும் கலாச்சாரத்தையும் அழிக்க எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். இதனை ஒவ்வொரு தமிழ் மகனும் எதிர்க்க வேண்டும்''

நேற்றிரவு யாழ்ப்பாண எம். ஜி. ஆர். ரசிகர்களால் நடாத்தப்பட்ட எம். ஜி. ஆர். -கருணாநிதி விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டம்ஆரம்பமாவதற்கு முன் எம். ஜி. ஆர். உருவமும், அறிஞர் அண்ணு, கருணாநிதி ஆகியோரின் படங்களும் 'ராஜா' தியேட்டரிலிருந்து பழைய பஸ் நிலையத்துக்கு மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், வழக்கறிஞர் மு. ஆலாலசுந்தரம், திரு. நூர்முகம்மது, எஸ் ஆர் பதி ஆகியோர் உட்பட இன்னும் பலர் பேசினுர்கள். (கா. நி)

# மனோவசியத்தால் ஆஸ்மா குணமாகும்

லண்டன், மார்ச், 29

ஹிப்னுடிஸம் என மனோவசிய சிகிச்சைமுறை மூலம் கடுமையான ஆஸ்மா நோயைக் குணப்படுத்த முடியுமென பிரபல பிரிட்டிஷ் வைத்தியர் ஒருவர் கூறுகிருர்.

தமது மனோவசிய கிகிச்சை முறை இந்த சுவாச வியாதியைப் போக்கடிப்பதில் பெரிதும் வெற்றியளித்துள்ளதாக லண்டன் இருதய வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் ஜி. பி. மேகாலோகம் தெரிவித்தார்.

ரோயல் வைத்திய சங்கத்தின் ஆராய்ச்சி அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துப் பேசிய அவர், தாம் 250 ஆஸ்மா நோயாளிகளை இரு பிரிவுகளாக வகுத்து சிகிச்சை நடத்தியதாகவும், மனோவசிய சிகிச்சை அளிக்கப்பட்ட முதல் பிரிவினரில் 59 விகிதத்தோர் பெரிதும் அபிவிருத்தி கண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## விசேஷ போனஸ் திட்டம்

கோட்டை செவ்வாய்

துறைமுகக் கூட்டுத்தாபனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களை ஊக்கப்படுத்துவதற்கு விசேஷ போனஸ் வழங்கப்படவிருக்கிறது. பொதிகளை கூடுதலாக ஏற்றி இறக்கும் தொழிலாளர்களுக்குஇந்தபோனஸ் வழங்கப்படும். இதன் மூலம் ஏற்றுமதி இறக்குமதி வேலைகளைத் துரிதப்படுத்தலாம் எனக் கூட்டுத்தாபனம் நம்புகிறது.

திருகோணமலை, காலி, கொழும்பு ஆகிய மூன்று துறைமுகங்களிலும் வேலை செய்யும் பதினையாயிரம் தொழிலாளர்கள் கூடுதலான வேதனத்தைப் பெறுவதற்கு இப் புதிய திட்டம் வழி வகுக்கிறது.

## அமெரிக்க நடனக் குழு இன்றுவருகிறது

கோட்டை, செவ்.

அமெரிக்காவின் பிரபல நடனக் கோஷ்டியினரான 'நியூயார்க் ஆர்ட் தியேட்டர்ஸ்' பலே குழுவினர் இம்மாதம் 26-ம் திகதி இலங்கை வருகின்றனர். 27-ம் திகதி இவர்கள் தமது முதலாவது நடன நிகழ்ச்சியை கொழும்பு மகளிர் கல்லூரியில் நடாத்துவர். பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் இலங்கை அமெரிக்கச் சங்கம் இந்த நடனக் குழுவை அழைத்துள்ளது. இவர்கள் இங்கிருந்து சிங்கப்பூர், பாங்கொக், ஹொங்ஹொங், மணிலா ஆகிய இடங்களுக்குச் செல்வர்.

## இன்று

கம்பஹா, புதன்

அகில இலங்கை ஆசிரிய சங்கத்தின் 9-வது வருடாந்த மகாநாடு இன்று கம்பஹாவில் நடைபெறவிருக்கிறது.

## புதிய பஸ் சேவை

அளவெட்டி, செவ்வாய்

பண்டத்தரிப்பு சில்லாலைப் பகுதியில் இருந்து யாழ் நகருக்குச் செல்லும் 200க்கு அதிகமான பாடசாலைப் பிள்ளைகளின் வசதியை முன்னிட்டு சில்லாலை-யாழ் பஸ்சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சில்லாலைக் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. என். ஜேம்ஸ் தலைமையில் நடைபெற்ற இப் பஸ்சேவை ஆரம்ப விழாவில் வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் கலந்து கொண்டு சேவையை ஆரம்பித்து வைத்தார்.

## பூகம்பம்

லண்டன், மாாச், 25

துருக்கியில் ஏற்பட்ட பூகம்பத்தில் 200 வீடுகள் நாசமாகின. கடலோரப் பிராந்தியத்தில் இந்தப் பூகம்பம் இடம் பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

## கார் உற்பத்தி

கொழும்பு, செவ்

நடுத்தரமான கார்களை இலங்கையிலேயே உற்பத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன வெளி நாட்டுக் கம்பனிகளின் உதவியுடன் இந்தக் கார்களைத் தயாரிக்க நடவடிக்கை மேற் கொள்ளப் படுவதாகத் தெரிகிறது.

ஒன்று சீனன் வாடியை நெருங்கியதும் கோர விபத்துக்குள்ளாகி அந்த லொறியின் கிளீனர் ஸ்தலத்திலேயே மரணமானுர். திருமலை கொழும்பு வீதியில் 4-ம் கட்டையைச் சமீபித்தபோது பிரஸ்தாப லொறியின் பாகம் ஒன்று உடைந்ததினுல் லொறி ஒரு பக்கத்துக்குச் சாய்ந்து அப்படியே தரையில் சாய்ந்தது. அந்த வேளையில் லொறி சாய்ந்த பக்கத்தில் நின்றிருந்த 'கிளீனர்' தவறி நிலத்தில் விழவே அதிக பாரத்துடன் இருந்த லொறி கிளீனர் மீது சரிந்து அப்படியே நசுக்கிவிட்டது. ஸ்தலத்திலேவே அவர் மரணமானுர் எம்லின் என்ற கிளீனரே. 55 வயது மரணமானவராவர்.

## சிறுவன் பலி

உடுப்பிட்டி, செவ்

அச்சுவேலியைச் சேர்ந்த பதினைந்து வயதுச் சிறுவன் நாய்க் கடிக்குப் பலியானுர். இராமு இராஜதுரை என்னும் சிறுவனே மரணமானவராவார். இச்சிறுவன மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியிலேயே மரணமானுர். பருத்தித்துறைப் பகுதித் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் மரணவிசாரணை நடாத்தினுர்.

நாய் கடித்ததால் ஏற்பட்ட ''ஹைடிரோப்பியா'' என்னும் ஒருவகை நோயால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

## நமது நோக்கு

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில், அல்வாய் வடக்கு வீரபத்திரர் ஆலயம் இவற்றின் கதவுகள் பூட்டப்பட்டு வருடாந்த திருவிழாவும் நிறுத்தப்பட்டுள்ளன. அக்கோவில்களுக்கு பெருநஷ்டம். இந்துக்கள், தமிழர்கள், இவர்களது எதிரிகளைத்தவிர மற்றவர்களனைவருக்கும் இந்த நிலைமை மிக மனவேதனை அளிப்பதாகும்.

கொழும்பிலிருந்து பலபத்திரிகைப் புகைப்படக்காரர்களும், விசேஷ நிருபர்களும் அங்கு வந்து படம்பிடித்துச் சென்றுள்ளனராம். கொழும்பில் மட்டுமன்றி உலகிலே பல நாடுகளிலும், மூடப்பட்டுள்ள இக்கோவில்கள், முட்கம்பி வேலிகள் இப்படங்களையும் பத்திரிகைகளில் வெளியிடுவர். புனிதமான கோவில் தீர்த்தக் கிணற்றிலே (எழுதவே பேனு கூசுகிறது) அசுத்தங்களைப் போட்டுள்ள பாவச் செயல்களையும் விளம்பரப் படுத்தவும் போகின்ருர்கள். ஈழத்து இந்து சமூகத்தின் ''இந்தப் புகழ்'' உலகமனைத்தும் பரவப்போகின்றது.

கோவில்களில் பூசைநடத்துவது, திருவிழாககள் செய்வது இவற்றின் நோக்கமென்ன? ஊர்மக்களிடையே அன்பும் ஒற்றுமையும் வளர்ந்து, ஊரும் நாடும் சுபீட்சமாக இருக்கவேண்டுமென்பதுதான். ஆலயப்பிரவேச விஷயத்தில் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். ஆனுல் கோவில் காரணமாக ஊரில் ஒற்றுமையும் அமைதியும் குலையுமாயின், அந்தக் கோவிலில் பூசையும் திருவிழாவும் நடப்பதில் என்ன பயன்? அவ்வித கோவில் மூடப்படுவதே சிறந்ததென்பது இறைவனின் திருவுள்ளம் போலும்.

காலச்சக்கரம் வெகுவேகமாகச் சுழல்கின்றது. இந்தச் சுழற்சியே சமூகத்திலும், நாட்டிலும் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்படுவதைப் பார்க்கின்ருேம். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்பர் ஆன்ருேர். ஏற்பட்டுவரும் மாறுதல்களை எதிர்த்துமனித நீதிக்குமாருக போடும் முட்டுக்கட்டைகள் நீடித்திருக்க முடியாதென்பதற்கு எவ்வளவோ உதாரணங்களைக் கூறலாம்.

கோவில்களை மூடுவதாலோ, முட்கம்பி வேலிகளை அடைப்பதாலோ பிரச்னை தீர்ந்துவிடாது. இதற்கு மாருக சமூகத்தில் வெறுப்புகளும் பிளவுகளும் அதிகரித்து, ஊருக்கும் சமூகத்துக்குமே பெரும் கேடாக முடியும். கோவில்பூசையும், திருவிழாவும் ஒழுங்காக நடைபெருவிடில் ஊருக்கே பெரும் தீங்கு ஏற்படுமென்பது ஆஸ்திகர்களின் நம்பிக்கை. ஆகவே ஊரின், சமூகத்தின் மேலான நன்மையை முன்னிட்டு, இதில் சம்பந்தப்பட்ட பல தலைவர்களும் கூடி நிலைமையைப் பற்றி நிதானமாகக் கலந்து யோசித்து, சுமுகமான ஒரு முடிவை கூடிய சீக்கிரத்தில் செய்வதுதான் விவேகமாகும். பொலிஸ் உதவியையோ, அரசாங்கத்தின் ஆதரவையோ நாடுவதை விட, கருணைமிக்க இறைவனில் பூரண நம்பிக்கை வைத்து, அன்பு வழியிலே இதற்கு நல்ல தீர்வுகாண வேண்டும். அப்படிச்செய்தாலே இங்கு தமிழ்ச்சமூகத்துக்கும் அரசியல் முதலிய துறைகளிலும் விமோசனம் பிறக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ஒற்றுமைப்பாட்டுக்கு கலைப்பரிவர்த்தனை ஒரு சிறந்த மார்க்கமாகும்

## உணர்வில் ஒருமைப்பாடு வேண்டும்

இக்கட்டுரையாளரான தமிழ்நாடு மேல் சபை உறுப்பினர் அவ்வை தி. க. ஷண்முகம் அவர்களின் கருத்து எல்லா நாட்டுக்குமே பொருந்துவதாகும்.

மகாத்மா காந்தியடிகள் நமக்குச் சில உயரிய திட்டங்களை வகுத்துத் தந்தார். அப்பெருமான் கண்ட அகிம்சைப் போரினல் நாம் சுதந்திரம் பெற்ருேம். நமக்குமட்டுமல்ல ஆசியாக் கண்டத்தில் பல நாடுகளின் விடுதலைக்கும் அந்த மகானின் அகிம்சைப் போர் தான் வழி வகுத்துக் கொடுத்தது. பெற்ற அச் சுதந்திரத்தைப் பேணிக்காப்பதிலும் அக்கருணை வள்ளம் காட்டிய அறவழிகளை நாம் பின்பற்றவேண்டும். அவ்வாறு பின்பற்றினல்தான் நம் வாழ்வு சிறக்கும். பாரதத்தில் பல்வேறு மாநிலங்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக, உள்ள உணர்வோடு ஒருமைப்பாடு பெற்று வாழும்.

பது உறுதி. தாய்மொழிப்பற்று ஒருமைப்பாட்டுஉணர்வுக்கு மேன்மேலும் ஆக்கம் தருவதாக அமையுமே தவிர தீமை புரிவதாக அமையாது.

மகாகவி பாரதி தம் தாய்மொழியாகிய தமிழிலேயே மிகுந்த பற்றுடையவர் தாம்: ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணேம்'' என்று பாடியவர் தாம். ''தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்றதாயென்று கும்பிடடீ பாப்பா' என்று கூறியவர் தாம். ''சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே இதைத் தொழுது படித்திடடீ பாப்பா'' என்று பாடியவர்தாம். அதனுலேயே அவருடைய பாரத தேசீய உணர்வுக்கு நாம் வாராஞல் அவருடைய அறியாமையை எண்ணி அனுதாபப் படுவதைத் தவிர நாம் வேறென்ன செய்ய முடியும்?

பலபலவாம் தீர்மானம்
படிக்கவேண்டா
பகட்டாகப் பேசி மட்டும்
பயன் வராதே
உலகினுக்கு வேண்டுவது
ஒன்றேயாகும்
உத்தமஞர் காந்தி வழி
உபதேசந்தான்

என்று காந்தியக் கவிஞர் எவ்வளவு அழுத்தமாகக் கூறுகிருர்! காந்தியடிகளின் தத்துவங்களை வாய் கிழியப் பேசிக்கொண்டிருக்கும்பெரு மக்கள் இதனைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

தாய்மொழியான தமிழைத் தம் உயிரே போல் போற்றிப் பாடிய மையமாகக் குறிப்பிடுகின்றார்.

இன்னும் சான்றுகள் வேண்டுமா? மகாகவி வான்மீகி முனிவரின் ''இராமாயணம்'' தமிழ்க் கம்பனின் மகத்தான கவிதைச் சிறப்பால் தமிழர்கள் உள்ளத்தில் அழியாத இடம் பெற்றுள்ளது. வேத வியாசரின் 'மகா பாரதம்' வில்லிப்புத்தூராரின் பெரும் புலமையால் தமிழகமெங்கும் ஒளி வீசி நிற்கின்றது. வடபாரதத்தின் நளனும் தமயந்தியும் தமிழ்ப் புகழேந்தியின் நாவிலே 'நளவெண்பாவாக' வும், அதிவீரராம பாண்டியனின் வாக்கிலே நைடதமாகவும் விளையாடி நிற்கின்றார்கள். இவ்வாறு எத்தனையோ வடமொழிக் காப்பியங்களெல்லாம் நம் அருந்தமிழ் மொழியிலே வண்ணம் பெற்றுப் புதிய பொலிவுடன் விளங்குகின்றன.

இதேபோன்று நமது அரும் பெருஞ் செல்வங்களான நெஞ்சையள்ளும் 'சிலப்பதிகாரம்', மனம் கவரும் 'மணிமேகலை' போன்ற காப்பியங்கள் வடபாரதத்திலே இடம் பெற்றதுண்டா? காரணம் யாது? எண்ணிப் பார்க்க வேண்டும். ஒருமைப் பாட்டுணர்வுக்கு பரம்பரை பரம்பரையாக வழி காட்டுபவர்கள் தமிழர்கள் தாம் என்பதை உறுதிபடுத்துகின்றன அல்லவா?

பாரத மக்களிடையே ஒருமைப்பாடு நிலவ வேண்டும்; அந்த ஒருமைப்பாடு அவர்களுடைய உள்ளத்திலே நிலவும் ஒருமைப்பாடாக உணர்விலே நிலவும் ஒருமைப்பாடாக அமையவேண்டும் என ஆசைப்படுகின்ருேம். இந்த ஒருமைப்பாட்டினை உருவாக்க நாம் என்னசெய்ய வேண்டும்? இதுவே இன்றைய பிரச்னை.

கலைத்துறையிலும் சமயத் துறையிலும் ...

மாநிலங்களுக்கு இடையே வேற்றுமைகள் வளர்கின்றன. ஒற்றுமையைப்பற்றிப் பேசுகிருேம்; ருஷியா, அமெரிக்கா முதலிய மேல் நாடுகளுக்கெல்லாம் கலைத்தூதுக் குழுக்களை இந்த ஒற்றுமையை உருவாக்கும் நோக்கோடுதான் அனுப்புகிருேம்; பாரதத்திற்கு அப்பாலுள்ள நாடுகளுடன் ஒற்றுமையை விரும்பும் நாம் பாரதத்திற்குள்ளேயே இலங்கை, மலேசியா முதலிய அருகிலுள்ள நாடுகளுடனேயே பண்பட்ட கலைக் குழுக்களை அனுப்பி ஒருமைப்பாட்டினை உருவாக்கும் முயற்சியில் இன்னும் வெற்றி பெறவில்லை. இந்த உண்மையை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

ஏறத்தாழ பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன் புதுதில்லியில் நாடக கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அப்போது நம் பாரதத்தின் மாநிலங்களுக்கிடையே பண்பட்ட கலைக் குழுக்களை பரிவர்த்தனை செய்துகொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றி நான் வலியுறுத்தினேன்.

ஒவ்வொரு மாநிலங்களிலுமுள்ள சங்கீத நாடகச்சங்கங்களின்மூலம் இந்தக்கலைப் பரிமாற்றம் ஓரளவு நடந்தது. ஆனல் பண்பட்ட நல்லவர்களைக் கொண்டு திட்டமிட்டுச் செயலாற்ருத காரணத்தால் இம்முயற்சி வெற்றிகரமாக நடைபெறவில்லை. 'பயிற்சிப் பயணத் திட்டம்' என்னும் பெயரால் ஒரு நல்ல திட்டத்தை அரசினர் ஏற்பாடு செய்தனர். இத் திட்டத்தின்படி நாங்கள் ஒருமுறை வங்காளத் தலைநகரமாகிய கல்கத்தாவுக்குச் சென்ருேம். அங்குள்ள கலைஞர்களோடு நன்கு உறவாடிப் பழகினேம். அப்பயணம் பற்றி மத்திய அரசினரிடம் அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தோம். ஆனல், தொடர்ந்து அந்த நல்ல காரியத்தைச் செய்வதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது! அத்திட்டம் இப்போது இல்லை. மாநிலங்களுக்கிடையே கலைஞர்களை அனுப்பி நல்லெண்ண உணர்வினை வளர்க்கும் இத்திட்டம் என்ன காரணத்திஞலோ மத்திய அரசினரால் கைவிடப்பட்டது.

இவ்வாறு கலைக் குழுக்களின் பரிமாற்றம் நல்லமுறையில் உருவாகாத காரணத்தால் இன்று பாரதம் சீர்குலைந்து சிதறிக் கிடக்கிறது.

(5ம் பக்கம் பார்க்க)

அவ்வை தி. க. ஷண்முகம்

அதற்கு மாருக, மாநிலங்களுக்கு ஒரு கொள்கையாக நம் அடிப்படைக் கொள்கைகள் சிதறுண்டு போகுமாஞல் ஆண்டவனாலும் இந்த ஒருமைப்பாட்டை உருவாக்க இயலாது.

காந்தியடிகள் கண்டகருத்துக்கள் நமக்குப் புதியவை அல்ல. அவை பாரதப் பண்பாட்டின் அடிப்படைக் கருத்துக்கள் தாம். அவற்றை நாம் இன்னும் சரியான முறையில் உருவாக்கவில்லை. அடிகளின் லட்சியங்களை ஒவ்வொன்ருகக் கைவிட்டுக் கொண்டே வருகிருேம். மாநிலத்திற்கு மாநிலம் மதுவிலக்குத் திட்டம் வெவ்வேறு முறையில் செயற்படுத்தப்பெற்று வருகின்றன. மக்களின் உணர்வு சீர் குலைந்து வருகின்றது.

தாய்மொழியுணர்வு தான் ஒருமைப்பாட்டைச் சிதைக்கின்றது என்ற பொருள் ...

மாசு கற்பித்துவிட முடியுமா? சிந்தித்துப் பாருங்கள். ''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே'' என்று பாடிய அவரே ''சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத் தோணிகளோட்டி விளையாடி வருவோம்'' என்று பாடிஞரல்லவா? ''செல்வம் நிறைந்த இந்துஸ்தானம் அதைத் தினமும் புகழ்ந்திடடீ பாப்பா'' என்றும் ''சேதமில்லாத இந்துஸ்தானம் இதைத் தெய்வமென்று கும்பிடடீ பாப்பா'' என்றும் அந்த மகாகவி தானே பாடியிருக்கின்ருர்? தாய்மொழிப்பற்று ஒருமைப்பாட்டு உணர்வுக்கு எங்கே ஊறு செய்திருக்கிறது.?

'பரதேசி என்று வந்தோர்
யாராஞலும்
பரிவோடே உபசரித்துப்
பங்கும் தந்த ...

மனேன்மணீயம் சுந்தரஞர் பிறமொழிகளைத் தூற்றவில்லை. 'களிதெலுங்குகவின் மலையாளம்' என்று அடைமொழி கொடுத்து சிறப்பித்துத்தான் பாடியுள்ளார்.

சமயத் துறையிலே தமிழர்களாகிய நாம் வடதிசையினை ஒருமையுணர்வோடு என்றென்றும் போற்றி வந்திருபதை வரலாறு நமக்கு உணர்த்துகின்றது. கற்பரசி கண்ணகிக்குச் சிலையெடுக்க தென்கோடியிலிருந்துசேரன் செங்குட்டுவன் இமயத்தை நாடிஞன் என்பது வரலாறு. மானத்தைக் கருதியோ, தவற்றைக் கருதியோ உண்ணு நோன்பினை மேற்கொள்ளும் தமிழர் வடக்கு நோக்கியிருத்தல் வழக்கம். அதனுல் வடக்கு 'இருத்தல்' என்ற சொல் நம் இலக்கிய ஏடுகளிலே கலைச்சொல்லாக இடம் பெற்றிருக்கும் மாண்பினைக் காண்கின் ருேம். இறந்தவர்களைக் ...

# உண்ணிலாவிய துயரம்

இராமாயண இரசிகமணி

ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

(நல்லை ஆதீன கர்த்தர்)

## கம்பர் கவி விருந்து — 7

விஸ்வாமித்திரர், ''நால்வரினும்'', என்றதும் வேல் குளித்த புண்ணிலே புரை ஓடியது. ''கரிய'' என்றதும் புரை பெரிய துவாரமாயிற்று. ''செம்மல்'' என்று ராமனைச் சுட்டியதும், புரையோடிய புண்ணில் கனல் நுழைந்தது. ஆஹா! என்ன அவஸ்தை! விஸ்வாமித்திரன் என்ன சாமர்த்தியமாகப் பேசிவிட்டான். நால்வரினும் ''பெரிய'' என்று கூருமல் ''கரிய' என்றுநிறத்தைக் கூறுவானேன். கறுப்பு என்ருல் வெறுப்பும், சிவப்பு என்ருல் உவப்பும், உண்டாகும் எறு கருதிஞனே? எவ்வள்வு பெரியராஜ ரிஷியாயிருந்தாலும் கொடிய அரக்கர்களோடு போர் செய்ய, உயிரைவிடமேலாக நேசிக்கும் குழந்தையை அனுப்பு என்ருல் அந்த அருமைத்தந்தையின் உள்ளந்தான் எவ்வளவு துயருறும் இதைத்தான் உள்ளத்தே தோன்றிய துயரம் உயிரைப்பிடித்து வெளியே தள்ளுகிறதாம்.

உள்நிலாவிய துயரம்
பிடித்(து) உந்தஆருயிர்
நின்(று) ஊசலாட

என்கிருன் கவிஞன். ஊஞ்சலைத் தள்ளத்தள்ள, மீண்டும் திரும்பி முன்னுள்ள இடத்திற்கு வருவதுபோல் துயரம் தள்ளத்தள்ள உயிரும் முன்னிருந்த இடத்திற்கு வருகின்றதாம். ஒரே அடியாய் உயிர் நீங்கிஞல் இவ்வளவு அவஸ்தை இல்லையே! குருடன் ஒருவன், கண்பெற்றுப் பின் இழந்து அவஸ்தைப்படுவதை விடப் பிறவியெல்லாம் குருடாயிருந்துவிடலாமல்லவா? அதுபோல் தசரதனும் பிறவியெல்லாம் மலடாயிருந்திருப்பது மேலென்று எண்ணுகின்ருன். பிள்ளையையும் அனுப்பாமல் இருக்க வேண்டும் மஹரிஷிக்கும் கோபம்வராது தடுக்க வேண்டும் என்ன சமாதானம்கூறுவது. சக்கரவர்த்திக்குத் திடீரென ஒரு யுக்தி உள்ளத்தில் உதயமாகிவிட்டது. முதல்முதல் ''ஸ்வாமி ராமனுக்கு அவ்வளவு ஆயுதத்தேர்ச்சி இல்லையே, குருகுலவாசம் பூர்த்தியாகாத நிலையில்' அவன் சிறியன் ஆகிய தன்மையாலும் ஆயுதப் பயிற்சியில் பரிபூரணமாகத் தேறவில்லையே'' என்று ஆரம்பிக்கின்ருன்.

''படையூற்ற மிலன்-
சிறியன்''

கூறுவதுடன் புறப்படவும் தயாராகிவிட்டான். 'எழுக' என்ருன். என்ன பேச்சுப் பிரவாகம்! அசுரராஞலென்ன, அமரராஞலென்ன அமரரிலும் இந்திரன் நான்முகன் சிவனேதான் இடையூறுசெய்தாலும் என்ன? என்று ஒரே ஆவேசப் பேச்சாக வருகின்றது. முனிவனையும் ஆலோசிக்கவிடாமலே, பெருவேள்விக்குஎழுக'' உடனே எழுந்தருளுங்கள் என்று கூறுகின்ருன். அப்படி அவசரப்படுத்தி, ''கரியசெம்மலை'' மறக்கடித்து காரியம் சாதிக்கப் பாக்கின்ருன். ஆஞல்,

இப்படிப்பட்ட சிறுவன் போர்ப்பயிற்சிகொண்ட அரக்கர்களைக் கொன்றுஎப்படி யாகத்தைக் காப்பாற்றமுடியும் என்று கேட்டுவிட்டு ''ஆஞல் அந்த யாகத்தை காக்க, உமது கட்டளையை ஏற்றுஅரக்கர்களைக்கொன்று வெற்றி பெறுவதற்கு நான் இருக்கின்றேன்'' என்கின்ருன். சம்பராசுரனை வென்றவன் தசரதன் என்று முனிவனுக்குத் தெரியாதா? எனவே உறுதியான குரலில்

இடையூறுகளுக்கெல்லாம் இடையூருய்நானேவந்துகாக்கின்றேன் என்று பதட்டத்துடன் கூறுகிருன்.

தொடையூற்றின் தேன்
துளிக்கும்
நறுந்தாரான் ஒரு
வண்ணம் துயரம் நீங்கி,
''படையூற்றம் இலன்;
சிறியன்
இவன். பெரியோய்!
பணிஇதுவேல் பனி
நீர்க் கங்கை
புடையூற்றும்சடையானும்
புரந்தரனும், நான்முக
னும், புகுந்துசெய்யும்
இடையூற்றுக்(கு) இடை
யூருய்
யான்காப்பேன்'' பெரு
வேள்விக்(கு) எழுக
என்ருன்

### விஸ்வாமித்திர கோபம்

''எழுக'' என்றதும் எழுந்தேவிட்டான். சாதாரண எழுச்சியா, அது கோப எழுச்சி, குலகுரு வசிஷ்டர் சாந்தப்படுத்துகிருர், ''தசரதா தனுர்வேதத்தின் தந்தை விஸ்வாமித்திரர். அவராக உன் மகனை அழைக்கின்ருர். குழந்தை ராமனுக்கு தனுர்வேதம் தானே வருகின்றது, அனுப்புவாய்'' என்ருர். தசரதன் ராமனை மாத்திரம் அழைத்தான். ஆஞல் தம்பியும் பின்தொடர்ந்து வந்துவிடுகின்ருன். சிறுபராயம் முதல் ஆறு, சோலை, குளம், குட்டை முதலியவற்றில் விளையாடும் போதும் ராமனைப் பிரியாது இருந்தானே. அந்தத்தம்பி லக்ஷ்மணன்தான் வருகின்ருன்

### அபராதம் செலுத்தும் மன்னன்

லட்சுமணனும்ராமனுடன் போவது நல்லதுதானே. 'ஒருவனுக்கு' என்று கருதும் சக்கரவர்த்தி, முதலில் மறுத்ததற்கு அபராதம் செலுத்துவதுபோல் ராமனேடு லட்சுமணனையும் சேர்த்து ஒப்படைக்கின்ருன் முனிவரிடம்.

தந்தைநீ, தனித்
தாயும் நீ இவர்க்கு
எந்தை தந்தனன்
இயைந்தசெய்கென்ருன்

நல்தந்தை, என்கிருன், பிள்ளைகளில் எல்லாம், ராமனே சிறந்த பிள்ளை, செல்லப் பிள்ளை. தசரதன் கண்களில்! அந்தப் பிள்ளையை லட்சுமணனேடு முனிவனுக்குக் காட்டுகிருன். ''நான் பிரியத்தைச் செய்ய விரும்பினேன்; நீரோ உண்மையான இன்பத்தைச் செய்ய விரும்புபவர். ஆகவே நீதான் நல்தந்தை'' என்றும் மேலும் சிறு குழந்தைகள் தவருக நடக்கக்கூடிய பருவம்; தவறுதல்கள் கண்டிக்கப்படாவிட்டால் குழந்தைகள் கெடுவது இயற்கை. ஆகவே தசரதன் பிள்ளைகள் தானே என்று கருதிவிடாமல் இன்று முதல் மகரிஷியாகிய உங்

(5ம் பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிறோம். மாநிலத்திற்கு மாநிலம் மதுவிலக்குத் திட்டம் வெவ்வேறு முறையில் செயற்படுத்தப்பெற்று வருகின்றன. மக்களின் உணர்வு சீர் குலைந்து வருகின்றது.

தாய்மொழியுணர்வு தான் ஒருமைப்பாட்டைச் சிதைக்கின்றது என்ற பொருள்படப் பல பெரியவர்கள் பேசுகின்றனர். இந்தக் கூற்று மிகவும் தவறானது என்பதை பணிவோடு குறிப்பிட விரும்புகிறேன். ஒருவருக்கு அவருடைய தாய் மொழியிலே உண்மையான பற்று இருக்குமானால் அது ஒருபோதும் பிறமொழிகளுக்கு ஊறுவிளைவிக்காதென்

தானே பாடியிருக்கின்றார்? தாய்மொழிப்பற்று ஒருமைப்பாட்டு உணர்வுக்கு எங்கே ஊறு செய்திருக்கிறது.?

'பரதேசி என்று வந்தோர்
யாரானாலும்
பரிவோடே உபசரித்துப்
பங்கும் தந்த
ஒருதேசம் உலகத்தில்
இருக்குமானால்
உண்மையது தமிழ் நாடு
ஒன்றேயாகும்.'

இது தேசீயக்கவி நாமக்கல் கவிஞர் இராமலிங்கனாரின் வாக்கு. கவிஞரின் இந்த உணர்வினை ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிப்பதென்று யாரேனும் கருது

உண்ணா நோன்பினை மேற்கொள்ளும் தமிழர் வடக்கு நோக்கியிருத்தல் வழக்கம். அதனால் வடக்கு 'இருத்தல்' என்ற சொல் நம் இலக்கிய ஏடுகளிலே கலைச்சொல்லாக இடம் பெற்றிருக்கும் மாண்பினைக் காண்கின்றோம். இறந்தவர்களைக் கூட அவர்களின் ஆவிமுத்தி பெறவேண்டும் என்பதற்காக வடக்கில் தலை வைத்துக் கிடத்துவது நம் மரபு. இமயத்துடன் தமிழர்க்கிருக்கும் இணைப்பினைச் சொல்லவந்த இளங்கோவடிகளார் 'முடிமன்னர்மூவரும் காத்தோம்பும் தெய்வ வடபேரிமயமலை' என்றுஅரு

மைப்பாடாக அமையவேண்டும் என ஆசைப்படுகின்றோம். இந்த ஒருமைப்பாட்டினை உருவாக்க நாம் என்னசெய்ய வேண்டும்? இதுவே இன்றைய பிரச்னை.

கலைத்துறையிலும் சமயத்துறையிலும் ஈடுபட்ட கலைஞர்கள்தாம் இந்த ஒருமைப்பாட்டினை உருவாக்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள். கலாசக்தியின் மூலம் தான் இந்த ஒருமைப்பாடு ஏற்படவேண்டும். இந்த உண்மையை நன்குஉணர்ந்து அதற்கேற்ற வாய்ப்பினையும் வசதியினையும் செய்துதர வேண்டியது அரசினரின் கடமையாகும்.

இவ்வாறு கலைக் குழுக்களின் பரிமாற்றம் நல்லமுறையில் உருவாகாத காரணத்தால் இன்று பாரதம் சீர் குலைந்து சிதறிக் கிடக்கிறது.

(5ம் பக்கம் பார்க்க)

தப் பயிற்சியில் பரிபூரணமாகத் தேறவில்லையே'' என்று ஆரம்பிக்கின்றான்.

''படையூற்ற மிலன்-
சிறியன்''

அவசரப்படுத்தி, ''கரியசெம்மலை'' மறக்கடித்து காரியம் சாதிக்கப் பார்க்கின்றான். ஆனால்,

விட்டால் குழந்தைகள் கெடுவது இயற்கை, ஆகவே தசரதன் பிள்ளைகள் தானே என்று கருதிவிடாமல் இன்று முதல் மகரிஷியாகிய உங்

(5ம் பக்கம்பார்க்க)

ஐந்தாங்குரவர்
ஆறுமுகநாவலர்—9

அறநெறிக்காவலர்
முதலியார் சி. முத்துத்தம்பி

ஒரு கண்ணோட்டம்:

# நாவலர் தோன்றுவதற்கு முன் சைவமும் தமிழும்

காலதேச வர்த்தமானத்தை உணர்ந்தாலன்றி ஒரு பொருளைச் சரிவர முடிவு செய்துவிடமுடியாது. காலதத்துவமொரு அருவப் பொருள். அதை உள்ளபடி கூறுபடுத்தமுடியாது. அப்படியிருந்தும் மக்கள் காலதத்துவத்தை மூன்றாகப் பிரிப்பார்கள். அவை 1 இறந்தகாலம், 2. நிகழ்காலம், 3. எதிர்காலமாம். நிகழ்காலம் பெரும்பாலும் இறந்த காலத்தின் விளைவு. எனின், எதிர்காலம் நிகழ்காலத்தின் விளைவாகலாம். நாவலர்பெருமான் சைவ சமயத்திற்கும், தமிழ் மொழிக்கும் ஆற்றிய அளப்பரிய தொண்டுகளைச் சீர்தூக்கி உணர்வதற்கு, அவர் பணியாற்றிய காலத்தையும், ஒருவாறு அவருக்கு முந்திய காலத்தையும் நாம் சிறிதளவு ஆராயத்தான் வேண்டும்.

''காலத்தினாற் செய்த
நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது''

என்பது பொய்யாமொழி. ஆனால் நாவலர் பெருமான் செய்த நன்றியோ, சிறிதல்ல. அது ஞாலத்தினும் பெரிது. அப்படியாயிருந்தால், அந்த நன்றிக்கு எதையும் ஒப்பிடமுடியாது. நாங்கள் அடிக்கடி 'நல்லைநகர் ஆறுமுகநாவலர் வந்திலரேல்' என்று பெரும்புலவர் சி. வை. தாமோதரம்பிள்ளை கூறியதுபோல, அடிக்கடி, நாத்தழும்பேறக் கூவுவது அல்லாமல் கைமாறு வேறொன்றும் செய்யமுடியாது.

எங்களில் அநேகர், எங்களுக்கொருகாலத்தில்தமிழரசாங்கமிருந்த தென்பதை அடியோடு மறந்துவிட்டார்கள். ஒரு காலத்தில் நல்லூர் தமிழரசர்களின் இராசதானியாக விளங்கியது. கடைசியரசன் செகராசசேகரனென்னும் பேர் படைத்த சங்கிலி அரசனாவான். 'சங்கிலியன்தோப்பு' எனும் பேர்படைத்த இடம் இப்போதும் இங்கு இருப்பது யாவருக்கும் தெரியும். யாழ்ப்பாணத்தில் ஆனைப்பந்தியை எடுத்துக்கொண்டால், ஆனைப்பந்தியில்வசிப்பவர்களுக்கே அந்த இடத்திற்கு இந்தப்பேர் ஏன் வந்தது என்பது தெரியாது. தமிழ் அரசர்களின் ஆனை கட்டிய இடம்தான் ஆனைப்பந்தியாகும். ஆனைப்பந்திக்கு அணித்தாயுள்ளவீரமாகாளி அம்மன் கோவில் தமிழரசர் காலத்தில் ஏற்பட்டதென்பதை அநேகர் அறியார். இராசாவின் தோட்டமென்ற இடத்திலுள்ளவர்களுக்கு அது எந்த இராசாக்களின் தோட்டமென்று தெரியாது. நல்லூரிலுள்ள காணிகளின் பெயர் 'இளைய குமாரமாளிகை', 'மூத்த குமாரமாளிகை' யென்பதை அக்காணிகளின் உறுதிகளில் பரக்கக் காணலாம். தமிழரசர்கள், ஆரியச் சக்கரவர்த்திகளென்ற பெயருடன் யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்த காலத்தில் சைவமும், தமிழும், தமிழ் மக்களும், சேர, சோழ, பாண்டிய மூவேந்தர் காலத்தில் எங்ஙனம் பரதகண்ட தமிழ்நாடு செழிப்புற்று ஓங்கிவளர்ந்ததோ அப்படியே ஈழத் தமிழ் நாடுமிருந்ததென்பதை உறுதியிட்டுக் கூறலாம்.

இன்றைக்கும் பரதகண்டத் தமிழ் நாட்டுத் தெற்கெல்லையிலிருந்து, ஈழத்துத் தமிழ் நாட்டு வட எல்லை, சில இடங்களில் இருபத்தைந்து கல் தொலைவுதானுமில்லை,

சில ஆண்டுகளுக்கு முன், ஈழத்து இளம் வீரர்கள் இருவர், இக்கரையிலிருந்து பாரதக் கரையை நீந்திக் கடந்தார்கள்.

இலங்கை மூன்று இராசதானியாகப் பிரிந்திருந்தது. அவை:- (1) கண்டி, (2) கொழும்புக் கோட்டை, (3) யாழ்ப்பாணம், யாழ்ப்பாணத்தரசர், சில காலம் சிங்கள அரசர்களுக்குத் திறைகொடுத்தும், பல காலம் திறை கொடுக்காமலும் அரசாங்கத்தை நடத்தி வந்தார்கள். வன்னியர்கள் தங்கள் பகுதிகளைப் பெரும்பாலும் சுயேச்சையாக ஆண்டுவந்தார்கள். முல்லைத்தீவில் ஒரு பகுதிக்கு 'அடங்காப்பற்று' என்றபேர் இன்றும்வழங்கிவருகிறது. கயிலை வன்னியன் முதலிய வன்னியர்களின் பேர் சரித்திரத்தில் இடம்பெற்றிருக்கிறது. தமிழரசர்கள்குளம்தொட்டு வளம்பெருக்கினார்கள். வாவிகள் சோலைகள் அமைத்தார்கள். சட்டநாதர் கோவில் நல்லூர்கந்தசுவாமி கோவில், கயிலாயநாதர் கோவில் முதலிய தேவாலயங்களை அமைத்துத்திறம்பட சைவசித்தாந்த சமயத்தை வளர்த்தார்கள். தமிழ்ச் சங்கம் நிறுவி முத்தமிழையும் வளர்த்தார்கள். இரகுவம்சம் முதலிய சிறந்த நூல்கள் தமிழரசர் காலத்திலேதான் யாக்கப்பட்டன. புலவர்களுக்கு பொருள் அளித்துக் காப்பாற்றினார்கள். மக்களைக் கண்ணை இமை காப்பதுபோலக் காத்துவந்தார்கள். ஆனால் மனிதரிடத்தில்என்றும் உள்ளதைப்போலவே அன்றும் அரசகுடும்பங்களில் பேராசை, சதி, சூழ்ச்சி, நம்பிக்கைத்துரோகம், ஒற்றுமைக்குறைவு முதலியனநிலவின. அவையே தமிழினத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாகின. இன்றும் இந்நிலை மாறவில்லையே. இது யானையானது தனது கையினாலேயே தன்மீது மண்ணை அள்ளிப் போட்டதுபோன்றதாகும்.

போர்த்துக்கீசரென்னும் பறங்கியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது தமிழரசர்களின் மதியீனத்தினால் தான்.

(தொடரும்)

# திருப்புகலூர்ப் பெருமான் மீது அப்பர் அடிகள் விண்ணப்பம்

க. வை. ஆ. சர்மா

பகைமையையே பண்பாகப்பூண்டவர்கள் முப்புரத்து அவுணர்கள். அவர்கள் கொண்ட தீயசெயலுக்குக் கருவியாக அமைந்த முப்புரங்களும் வெந்து நுண்ணிய சாம்பராகும்படி இளமுச் சிரித்து அருளிய தேவாதிதேவா! திருப்புகலூர் திருவே! மெய்யறிவே இல்லாத சிறியேனது இந்த உடலினுள் ஐம்புலன்கள் என்னும் ஐந்து முரடர்வசிக்கிறார்கள், அவர்களோ எனது ஐம்பொறிகளையும் தம்வசப்படுத்திக்கொண்டு, நாள்தோறும் தங்கள்தங்கள் தீயவழிக்கு என்னை இழுத்து ஈடுபடுத்த முயலுகிறார்கள். அதனால், மிகவும் வாட்டம் அடைந்துவருந்தி, செய்வது இது, செய்யத்தகாதது இது என அறியாமல் திகைக்கின்றேன். இந்த ஐவரையும் வெல்லுவதற்கு, பெருமானே, ஒருவழி காட்டியருளுக. (1)

சிவந்த இரேகை, கருமை, கூர்மை, ஒளி, அழகு இவையெல்லாம்ஒருங்கேகொண்ட கட்பார்வையை உடையவர் மகளிர். அவர்கள் மீது கொண்ட மயக்கமாகியவலையிலே தமியேன் சிக்குண்டு தவிக்கின்றேன். அதனால், ஒரு கையில் அக்கினி, ஒரு கையில் சூலப்படை இவற்றைத் தாங்கும் சிவபிரானை நினைக்கின்றிலேன். ஆனால், என்றோ ஒருநாள் சேடம் எனப்படும் சனி மிகுந்து இந்த மிடற்றை வந்துஅடைப்பது நிச்சயம். அப்போது ஆன்மாவாகிய தமியேன் செய்வது அறியமாட்டேன். திருப்புகலூர்ப்பெருமானே! தேவரீரே வழிகாட்டியருள வேண்டும். (2)

இந்த உடம்பாகிய சிறு குடிசையில் தொண்ணூற்றூறு தத்துவங்கள் பொதியப்பட்டு இருக்கின்றன. அதிகாரம் பூண்ட தலைவர்களைப் போலப் புலன்கள் எனப்படும் ஐந்துபேர், வலிய வந்து இந்தக் குடிசையில் புகுந்துவிட்டார்கள். அவ்வாறு வந்தவர்கள், இந்த உடலாகியவீட்டுக்குஆன்மா என்று அதிகாரி ஒருவன் இருக்கின்றானே, அவனை அவன் வசமாக இயங்கவிடமாட்டார்கள். அந்த ஐவரும் தனித்தனியாக அவனை நெருக்கி அதைத்தா, இதைவிடு, அதைச்செய், இதைச் செய்யாதே என்று துன்புறுத்திக்கொண்டே இருக்கின்றார்கள், அதனால், ஆன்மாவாகிய யான் உய்யும் வழி அறியாது திகைக்கின்றேன். செவ்விதாக அமைந்த திருமேனி கொண்டு விளங்கும் திருப்புகலூர்ப்பெருமானே! வழிகாட்டியருளுக. (3)

அறிவேயில்லாதது, அழுக்கே மயமானது, எந்தக் கணத்திலும் அழியக் கூடியது இந்த உடம்பு. பொய்யாகிய இந்த உடலுக்குப் பெயர் மெய் யானும்இதனை மெய்யென்று நம்பி முறையற்ற வழிகளெல்லாம் சென்றுவிட்டேன். நீதியே உருவான பெருமானே! எந்த நீதியையும் அறியுமாறறியேன். தேவாதிதேவா! அழிவில்லா அமுதமாகிய தேவரீரைத்தமியேன் மனத்தில் அழுந்தத் தியானித்தறியேன். திருப்புகலூர்ப் பிரானே! தமியேனுக்கு ஒரு வழியைக்காட்டியருளுக. (4)

மெய்யன்பர் தம் பாடலோசை எக்காலமும் பொலிவது திருக்கடவூர் வீரட்டம் என்னும் திருத்தலமாம். அங்குக் கோவில் கொண்ட பிரானார் தம் திருவடிகளை ஒருபோதும் நினையாதவன், வண்டுகள் மொய்க்கும் கரிய கூந்தலினையுடைய மகளிரிடத்தே அன்பு கொண்டு தகுதியற்ற மனத்திலே தெளிவுபெறாதவன். திருப்புகலூர்ப்பெருமானே! ஏழையேன் செய்யத்தக்கது யாதோ? தெரிந்தருளுக. (5)

இலவுபோன்ற அழகிய மகளிரிடத்தே காணும் இன்பமே இன்பம்; அதனை எக்காலமும் அனுபவிப்பேன் என, ஏமாந்து எண்ணிய நீசனாகிய தமியேன் ஆதியாம் பரம்பொருளே! தேவரீரை என்னுள்ளத்தில் தியானிக்கமாட்டேன்; திருப்புகலூர்ப் பிரானே! உம் திருவடியைப் போற்றித் துதியாத தமியேன் என்ன செய்வேன்? அருள்புரிக. (6)

ஐம்புலன்களையும் அடக்கிப் பாதுகாக்கும்ஆற்றலோ தமியேனிடத்து இல்லை. மேலான ஞானம் உதிப்பதற்கு ஏற்ற கல்வியைத் தானும் கற்கும் வாய்ப்புப் பெற்றிலேன். மனத்துக்கு அடிமைப்பட்ட தமியேன் சத்திய நெறியை இழந்து தூய்மையற்றவனானேன். சிவபக்தி மான்களுள் மேன்மை வாய்ந்தவன்அருச்சுனன். அவனுக்கு அருள் புரிந்தபரனே! மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கு சிறந்தமைந்த திருப்புகலூர்ப்பிரானே! தமியேனுக்கு ஏற்றவாறு அருள் புரிக. (7)

விடாய் தீர்ப்பது நீர். வெதுவெதுப்பை உதவுவது தீ, ஆதாரமான இடம் அருளுவது நிலம்; மூச்சுக்காற்றாக உலவி உதவுவது வாயு; இவை யெல்லாவற்றிற்கும் நிலைக்களமாகி விளங்குவது சூன்னியமான பரவெளி; வெங்கதிர் பரப்பி விளக்கம் செய்வதுசூரியன்; தண்கதிர் பரப்பி ஆக்கம் அளிப்பதுசந்திரன். இவற்றையெல்லாம் வழிநடத்தும் அதிகாரி பரமாத்மா. இப்படியான எட்டு மூர்த்தமான பரம்பொருளே! திருப்புகலூர்ப் பிரானே! தேவர்கள் தேடியும் காணவொண்ணாத தேவாதிதேவா! உமது திருவிளையாட்டின் நுண்மையைத் தமியேன் நுகரவழி காட்டியருளுக, (8)

மெய்யென்று பெயர் பூண்ட இந்தப் பொய்யான உடலுக்குள் உயிர் என்ற ஒரு சிறுவிளக்குக்கொளுவப் பட்டிருக்கிறது. அந்த விளக்கை வேண்டிய அளவுக்கு உயரும்படி தூண்டி, அதன் ஒளி கொண்டு உய்தி பெறலாம் என உவக்கின்றேன், ஆனால், எனது அந்த உவப்பையெல்லாம் அழிக்கும்ஆற்றல் படைத்த ஐந்துகள்வரையும்(ஐம்புலன்களையும்) இந்த உடலாகிய சிறுகுடிலுக்குள்குடியிருத்தியுள்ளீர். அந்த ஐவரும் மிகக்கொடியவர். அவர்களை வெல்லும் உபாயத்தை அறியாது திகைக்கின்றேன். திருப்புகலூர் பெருமானே! எனக்கு ஒருவழி காட்டியருளுக. (9)

கோவர்த்தன மலையைக் குடையாகக் கவித்துக் கோபாலன் என்ற பெருமை பெற்றார் திருமால். அரிய வேதங்களையெல்லாம் வகுத்து ஆதியானார் பிரமா. ஆனால், அவ்விருவருமே அகந்தைகொண்டு தேடியும் அறியவொண்ணாத சோதி திருக்கைலையிற் கோயில் கொண்டு விளங்கியது. அந்தக் கைலைமலையையே பெயர்த்துவர முயன்றான் இலங்கை வேந்தனான இராவணன். அவனது அகந்தை தீர வேண்டி, உடல் நெரியுண்டு இருபது கண்களினின்றும் குருதி பெருகும்படி திருவடியின் பெருவிரலைச் சிறிது அழுத்திய திருப்புகலூர்ப் பிரானே! தமியேனுக்கு அருள்வழி காட்டுக. (10)

[''பகைத்திட்ட புரங்கள் மூன்றும்'' என்னும் திருப்பதிக விளக்கம்.]

# காலம்தான் மாருதோ

காலையில் இரண்டு மணித்தியாலங்களாக சோனுமாரியாகப் பொழிந்த மழை இப்பொழுதுதான் விட்டிருந்தது. வானத்தில் சற்றுத் தெளிவு இருந்தாலும் ஆங்காங்கே புகைமூட்டங்கள் படர்ந்திருந்தன; மெல்லிய காற்று வீசியது; தூரத்திலிருந்து காற்றுடன் உறவுபூண்டு இனிமையான நாதஸ்தவர ஒலி காதுகளில் கேட்கின்றது. சூழ்நிலை உடலுக்கும் உள்ளத்துக்கும் இதமூட்டும் உணர்வுதான்!

ஆனாலும்...

ஊர் பெரிய தனக்காரர் சங்கரப்பிள்ளையின் மனதில் உற்சாகமோ, உவகையோ ஏற்படவில்லை.

குளித்து, மாறுகரை பட்டு வேட்டி சால்வை அணிந்து நெற்றியில் விபூதி தரித்திருக்கின்றார். தங்கப்பிரேம் போட்ட மூக்குக்கண்ணடி வேறு. ஆசார சீலராக வெளியே புறப்பட்டுவிட்டார். ஊர்நடுவே கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் தில்லைப்பரமேஸ்வரி கோவிலில்தைப்பூசஉற்சவம் ரொம்பவும் விமரிசையாக நடக்கும். ஊரே விழாக் கோலம் பூண்டிருக்கிறது.

வீட்டுவாசலைவிட்டு வீதியில் இறங்கிய சங்கரப்பிள்ளை, நடையில் சற்றுத் தயக்கம் மேலிட தம்மையறியாமல் நின்றார்.

''வெளியில் வந்து இன்றுடன் ஒருமாதமாகிவிட்டதே!''-மெதுவாக முணுமுணுத்துக்கொண்டார். பின் ஏதோ நினைத்தவராய் விடுவிடென்று கோவிலை நோக்கி நடக்கத்தொடங்கினார்.

வழியில் ஒரு சந்தி கூடுமிடத்தில் இடது பக்கமாய் அமைந்திருந்தது வற்றுக் குளம். அக்குளத்திற்கு எப்படித்தான் அப்பெயர் வந்ததோ தெரியாது. ஆனால் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இந்த மூன்று மாதங்களிலும்தான் அக்குளத்தில் ஊர்வெள்ளம் எல்லாம் சேர்ந்து குளமென்ற பெயருடன் காணப்படும். மற்றக் காலங்களில் நீர் இருந்ததின் அடையாளமாய்பிளவுபட்ட சேற்றுப் பாளங்களே காட்சி அளிக்கும்.

இன்று காலையில் பெய்த பெருமழையின் காரணமாக மழைத்தண்ணீர் தேங்கி நின்றது. சங்கரப்பிள்ளை குளத்தைப் பார்த்தபடியே கரையாக நடக்கின்றார்.

''ஐயா கோவிலுக்குப் போறுப்போலை!'' - குரல் கேட்டுத் திரும்பினார் அவர்.

கோவில்பக்கமிருந்துவந்து கொண்டிருந்த வேலுப்பிள்ளைதான் கேட்டான். அவனைவேலுப்பிள்ளை என்று யாரும்அழைப்பதில்லை. தாய் தகப்பன்என்ன ஆசையோடு அப்பெயரைச் சூட்டினர்களோ? ஆனல் ஊரில் உயர் ஜாதியினர் என்று தமக்கு அடையாள முத்திரை குத்திக்கொண்டவர்களின் 'பெரியதன்மையால்' அவனின் பெயர் வேலன் என்று குறுகிவிட்டது. ஆனல் அரசாங்கம் வழங்கும் கூப்பன் புத்தகத்தில்மட்டும் தான் என்றும்வேலுப்பிள்ளை என்ற பூரணநாமம ஒலிக்கின்றது.

இவ்வளவுக்கும் காரணம் அவன் தாழ்ந்த ஜாதியில் பிறந்துவிட்ட குற்றம்தான். ஆனல் வேலுப்பிள்ளை தன் பெயர் சுருக்கத்தைப்பற்றிக் கவலைப்படுபவன் அல்ல. அதைவிடஅவனதுநாளாந்த வாழ்க்கைஎவ்வளவோ பிரச்னைகள்!

சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளையை ஒரு நோட்டம் விட்டார். தோய்த்துக்கட்டிய வெள்ளைவேட்டி. நல்ல தும்பைப் பூவைப்போல் தூய்மையான வெள்ளைச் சால்வையை உடலில்போட்டிருந்தான். நெற்றியில் விபூதிக் கீறும், சந்தனப்பொட்டும்; வலதுகாதில் ஒரு வில்வம் இலை.

சங்கரப்பிள்ளையின் பார்வையில் ஒருவித வெறுப்புத் தொனித்தது. வேலுப்பிள்ளை கேட்ட கேள்விக்கு வாயால் பதில் கூருமல், தலையை மட்டும்இலேசாகஆட்டினர். அதுதான் அவரது பதில்!

வேலுப்பிள்ளை முகத்தில் தோன்றியசிரிப்பு மாருமலே நடையைத் தொடர்ந்தான்.

''இவ்வளவு நடந்தும் இவருக்குரியவரட்டுக்கௌரவம் இன்னும் தணியவில்லையே!'' -அவனின் மெல்லிய முணுமுணுப்பு காற்றுடன் கலந்தது.

அவனைக் கடந்துசென்ற சங்கரப்பிள்ளையோ, விறுவிறென்று நடக்கத்தொடங்கினர். வேலுப்பிள்ளையைப் பார்த்ததும் என்ன வோ பேயைக் கண்டவர்போல் அவரதுமுகம்மாறியிருந்தது.

'நளப்பயல் என்ன திமிரோடு என்னேடு கதைக்கின்றுன்! முந்தி தோளால் சால்வையை எடுக்கிறவன் இண்டைக்குவடிவாய் மூடிக்கொண்டு போருன்!' -சினத்துடன் தனக்குள் சொல்லிக்கொண்டார்.

வேலுப்பிள்ளை முணுமுணுத்தது சரிதான்!

''என்னமாதிரி மரியாதையாயிருந்தவங்கள்! இந்த மூதேவியும் அந்தப்பாழாய் போனவனும் சேர்ந்து

ஆரம்பிக்குமுன்னர் ஒரு கோப்பியும் குடித்து, ஒரு முழு வெற்றிலையையும் வாய்க்குள் திணித்துக் கொண்டான். அவன் செல்லும் இடத்திலே தன் வசதிகளைக்கவனித்துக்கொள்ளும் இயல்புகொண்டவன்.

''ஐயா அப்படியென்றால் அந்தக் கரவெட்டிப் பொடியனைச் செய்தாலென்ன?''

-கனகு தன் சேட் பாக்கட்டில் இருந்த சில கடுதாசிக் கற்றைகளை வெளியே எடுத்தபடி கேட்டான்.

''இஞ்சை பார் கனகு, ஊரிலை எனக்கு இருக்கிற நடப்புத் தெரியும்தானே! இனி என்னுடைய மகளும் பார்க்கிற உத்தியோகத்தின் தன்மை தெரியும்தானே! அதுக்குஏற்றமாதிரிப்பார்.''

-முகத்தில் ஒரு புன்சிரிப்புத்தவழ, நாற்காலியில்நன்றுகச்சாய்ந்து உட்கார்ந்து கொண்டார். தன் குலப் பெருமை, தன் மகளின் உத்தியோகம் இவைகளைப் பற்றிப் பேசத் தொடங்கினல் அவரின் முகத்தில் ஒரு அசாதாரணஒளி ஒன்று படரும்?

''அது தெரியும் ஐயா, ஏன் இதுக்கு என்ன குறை? பொடியன் எஞ்சினியர் வேலை. நல்ல சம்பளம்.''

''கனகு, நான் அந்தப்பகுதியில் செம்பும் தண்ணீரும் தூக்குவன் எண்டு நினைச்சியே! திருப்பித் திருப்பிச்

சிறுகதை

சொல்லுறன்! எங்களுக்குத் தோதான பகுதியாய் கொண்டு வா பார்ப்பம்.''

''அப்படியென்றால் இன்னெரு இடமிருக்கு! நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கடை உடையார்பகுதியைச் சேர்ந்தஆட்கள்தான் பொடியன். டாக்குத்தர் வேலை! எல்லாத்துக்கும் நான் நாளைக்கு வாறன்!''- சலிப்புடன்கனகு எழுந்து சென்றான்.

அவன் இன்றுடன் பத்து முறைக்கு மேல் வந்துவிட்டான். அவன்பேசிக்கொண்டு வரும் கல்யாணப்பேச்சு எல்லாவற்றுக்கும்-'அந்த இடம் சரியில்லை, அது கொஞ்சம் இளக்கமான இடம்' என்று உங்களுக்குக் கடிதம்எழுதுகின்றேன். அப்பொழுது எல்லாவற்றையும் நீங்கள் அறிந்து கொள்ளலாம்!'' -திலகம் சிரித்தபடி உள்ளே சென்றாள்.

சங்கரப்பிள்ளை தலையில் கையை வைத்தபடி கதிரையில் இருந்துவிட்டார்.

''கடவுளே இந்தப் பெட்டைக்குச்செல்லம்கொடுத்து வளர்த்தது எவ்வளவுபிழை! எவனைத்தான் மனதில் நினைச்சு வைச்சிருக்கிருளோ?''-அவர் மனம் சிந்தனையில் ஈடுபட்டது. ஒரு கிழமைக்குப்பின் திலகவதியின் கடிதம் வந்தது.

கடிதத்தைப் படித்த சங்கரப்பிள்ளைக்கு உலகமே தலையில் கவிழ்ந்ததுபோல் இருந்தது. தேகம் எல்லாம் பதறியது.

''பாக்கியம்! இஞ்சை வந்து பாரடி உன்ரைமோள் செய்திருக்கிற வேலையை!''

- அவர் போட்டகூச்சலில் அவரின் மனைவி பாக்கியம் நடுநடுங்கிவிட்டாள்.

''நான் மனதார விரும்பும் சோதிநாதனை பதிவுத் திருமணம் செய்துவிட்டேன்! உங்கள் அனுமதி பெருமல் இதைச் செய்துவிட்டேன். நீங்கள் நிச்சயம் மறுப்பீர்கள் என்று தெரிந்தும், என் இதயம் கவர்ந்தவரை மணந்துவிட்டேன் உங்கள் ஆசிகளை அளியுங்கள்!''-திலகத்தின் கடிதத்தைப் படித்த பாக்கியம் குமுறி அழுதாள். சங்கரப்பிள்ளை உயிரே போய்விட்ட மாதிரி துடித்தார்.

அவரின் மகள் தன் இஷ்டப்படி பதிவுத்திருமணம் செய்ததும் அவருக்குப்பிழையாகத் தோன்றவில்லை. ஆனல்அவள்தேர்ந்தெடுத்த கணவன் சோதிநாதனே...?

இவ்வூரில் கள் இறக்கிவிற்கும் சமூகத்தைச் சேர்ந்த கணபதியின் மகன்தான் சோதிநாதன். பல்கலைக்கழகத்தில் திலகவதியும் சோதிநாதனும் கூடப்படித்தவர்கள். அவர்களின் நட்பு காதலாக மாறியது. காதலுக்கு ஜாதி குறுக்கே நிற்கவில்லை!

ஆனல்- உயர்ஜாதி என்று அழைத்துக்கொள்ளும்ஊர்ப் பெரிய தனக்காரர் சங்கரப்பிள்ளைக்கு இக்காதல் விஷயம் எங்கே தெரியப்போகிறது! ''முந்தியே சொன்னேன் இவளுக்குப் படிப்பு வேணுமெண்டு! நீ தானே படிக்கட்டும், படிக்கட்டும் என்று செல்லம் கொடுத்தாய்! இப்ப பாத்தியேநடந்த அலங்கோலத்தை...!'' -சங்கரப்பிள்ளையின் கோப

— து. வைத்திலிங்கம் —

## ஆழி அவன் தாழ்கள்; வாழி!

மெல் லெனவே தவழ்ந் தங்கு
விளை யாடி வரு கின்றுள்
விழுந் தெழும்பிக்
கல்ல துவும் மலை யதுவும்
காட துவும் தாண்டி யந்தக்
கானற் செல்வி
துள்ளி யெழு மோசை யது
சல சலெனச் சதங் கையது
ஆர்ப்ப போன்று
வல்ல நெடும் வழி யதுவே
வரு கின்றுள்; அலைந் தலைந்து

# ஈ - எறும்பு - தேனீ - இவற்றில் எது நாம் ?

ஈ எங்கிருந்தோ வந்தது. அழையாத விருந்தாளியாக வந்தது. சொந்தம் பாராட்டி நெற்றியில் உட்கார்ந்தது. ஆனல் எனக்கோ பொறுக்கவில்லை. தலையை அசைத்தேன். அஞ்சி அகன்றது. எனினும் விர்ரென்று வெளியே போகவில்லை. உண்கலத்தில் உட்கார்ந்தது. கைவீசிக் கலைத்தேன். எவ்வளவு நேரம் மானமின்றி இருக்கும். மானம் பீறிட்டுக் கொண்டது போலும், பறந்து வெளியே போய் விட்டது.

''மன்னவனும் நீயோ
வளநாடும் உன்னதோ
உன்னையறிந்தோ தமிழை
ஓதினேன் என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத
வேந்துண்டோ? உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத
கொம்பு''

என்று அன்றொருநாள் ஒரு தமிழ்ப் புலவன் பாடினன் அல்லவா? அதைப்போல ''உன்னை நம்பியா பிறந்தேன்? என்று கேட்பது போலப்பறந்துவிட்டது. பின் எதை, யாரை, நம்பி என்ற கேள்வி எழுவதற்குள் அது பதிலும் கூறிவிட்டது. சொல்லால் அல்ல, செயலால். அதோ தொழுவத்தில் இருக்கும் சாணத்தில் உட்கார்ந்து விட்டது. சோறு இல்லையேல், சாணம், அல்லது இன்னென்று. ஆம், எதிலும் வாழத் தெரிந்தது ஈ; எப்படியும் வாழத் தெரிந்தது ஈ.

எறும்பு; சிறிய எறும்பு. இருக்கும் இடம் தெரியாத சின்னஞ்சிறுஎறும்புசிற்றெறும்பு அதோ ஒன்று வருகிறது. அதன்பின் மற்றொன்று. அப்பால் ஒன்று. அதற்கும் அப்பால் ஒன்று. இப்படி எத்தனை வருகின்றன.

— அ. நரேந்திரன் —

ஆனல் எப்படியோ வருவதில்லை. மூட்டையில் இருந்து கொட்டிய நெல்லிக்காய்கள் போல் வருவதில்லை. ஒன்றின்மேல் ஒன்று மோதி உருண்டோடும் அம்முறை நமக்குக் குடும்பச் சொத்தாகிவிட்டது. (விசேடமாக இலங்கைத் தமிழர்களுக்கு) அது நம் தனி உரிமையாகியும் விட்டது. எறும்பு இதைப் பின்பற்றுமா? பற்ருது, முடியாது. ஆகவே ஒன்றின்பின் ஒன்ருக அழகாக, வரிசையாக வருகிறது. தொடர்பு அருமல் வருகிறது.

இச் சிற்றெறும்புப் படை எங்கே வருகிறது. ஈயைப் போல் நம் நெற்றியில் வந்திருக்கவா? இல்லை. அதோ உற்றுக்கவனி! உணவுத் தானியம் இருக்குமிடம் தேடிச் செல்கிறது. கிடைத்த தானியத்தை ஒவ்வொன்ருக இழுக்கிறது. பொந்துக்குள் கொண்டு போய்ச் சேர்க்கிறது. சளைக்காமல் பொறுமையாக ஒவ்வொன்ருகச் சேர்க்கிறது. ஏன் மனிதனைப்போல் சேர்த்துவைத்துப் பார்த்து மகிழவா அல்லது அவனைப் போல் தேவைக்கு மேலும் போட்டிக்குச் சேர்க்கிறதா? இல்லை. உண்ணவே சேர்க்கிறது. எப்போது உண்ண; எவ்வளவு காலம் உண்ண, இன்று மட்டுமல்ல. நாளைக்கும் உண்ண. வெளியே தலை நீட்ட முடியாத மழைக் காலம் எல்லாம் உண்ண, பொந்துக்குள் அடங்கியிருந்து உண்ண. பின்னர் பல மாதங்களுக்குத் தேவையானதை இன்றே உழைத்துத் திரட்டுகிறது. ஒவ்வொன்ருகத் திரட்டுகிறது. பலநாள் திரட்டுகிறது.

சோலை, பசுஞ்சோலை. மயிலாடும் சோலை. வண்ண மலர்கள் பல கண்ணைக் கவரும் சோலை.

நெஞ்சையள்ளும் அச்சோலையில் ''விர்ர்'' என்ற ஓசை கவனத்தைக் கவர்கிறது. ஆ! அது எங்கிருந்துவருகிறது! அதோ வரும் தேனீயின் பண் அது. எவ்வளவு இனிமையாக இசைக்கிறது. பறந்துவரும் தேனீ, பக்கத்தில் வருமா? எப்படிவரும்? நாம்தாம் அதற்கு பகைவர்களாவோமோ! சரி, பறந்து வரும் தேனீ பக்கத்தில் உள்ள வண்ண மலர்களில் அமருமா? அமரவில்லை. காகிதப் பூ அல்லவே இது. உயிர்ப்பூவாகிய இதையும் தள்ளி ஒதுக்கிவிட்டுச் செல்கிறதே! கிடக்கட்டும். அதோ அண்டையிலிருந்து கமகமவென மணம் அழைப்புவிடும் அம்மலர்களோடு உறவுகொள்ளலாமே! அதையும் அப்பாற் தள்ளிவிட்டுச் செல்கிறதே! இத்தனை நிறத்தையும் மணத்தையும் விட்டுவிட்டு எங்கோ பறந்து செல்கிறதே! இதற்கு வேறு வேலை இல்லையா! பறந்து பார்த்து வருதல் இதற்கு வெறும் பொழுது போக்கா!

அதோ ஒரு மலரில் உட்காருகிறது. எதிரே உள்ள வண்ணமலர்களையும், நறுமணம் வீசும் மலர்களையும் விட்டு குறிக்கப்பட்ட அம்மலரில் உட்காருவானேன்? அம்மலருக்கு கண்ணைப்பறிக்கும் நிறமோ, மூக்கைத் துளைக்கும் மணமோ இல்லை. இவை இல்லையென்றல்

# நட்பின் முறிவு

- சுப்புடு -

'ஆனந்த பவனம்'
நல்லூர்
10-3-67

பேரன்பு மிக்க நண்பர்
நடராசாவுக்கு

வணக்கங்கள் பல. தங்கள் நலனை அறிய மிகவும் ஆவல். இவ்விடம் யாபேரும் க்ஷேமம்.

கமத்து வேலைகள் யாவும் முடிந்து இப்பொழுதுதான் சிறிது ஆறுதலாயிருக்கிறேன். பலருக்கும்போல இம்

வீட்டில் அனைவருக்கும் வணக்கம்.

இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள,
சி. சுப்பிரமணியம்.

குறிப்பு:
பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்
சி. சு.

0 0 0

நல்லூர்,
10-3.68

அன்புள்ள நடராசாவுக்கு,
வணக்கம். இதற்கு முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந் தெழும்பிக்
கல்ல துவும் மலை யதுவும்
காட துவும் தாண்டி யந்தக்
கானற் செல்வி
துள்ளி யெழு மோசை யது
சல சலெனச் சதங் கையது
ஆர்ப்ப போன்று
வல்ல நெடும் வழி யதுவே
வரு கின்ருள்; அலைந் தலைந்து
வாழ்வு தேடி;

அன்னை யவள் இயற்கை யென்பாள்
மடியி னிலே தவழ்ந் தங்கு
இன்பமூட்டி,
மெல் லெனவே நடை பயின்று
மேவிடு நன் மலைக ளெல்லாந்
தவழ்ந் திறங்கிப்
புல் வெளியும் பசுந் தரையும்
பூம் பொழிலும் களனி களும்
போந்து போந்து
தொல்லை தரு வாழ்வினிலே
துயர் களைந்து சுகம் நாடிச்
செல்வாள் போன்று;

சொல்லு மெழிற் குமரி யவள்
சுகம் நாடிச் செல் கின்ருள்
துணையும் நாடிச்
செல்லும் வழி வரு கின்ற
கஞ்ச லையுங் குப்பை யையும்
கூட்டித் தள்ளி
கல்வி பெருங் கேள்வி யது
கற்று ணர்ந்த நல்லவர் தம்
மனமும் போலப்
புன்ன கை யோ டோடி யவள்
அடை கின்ருள்; ஆழி அவன்
தாள்கள்; வாழி!

—இளம்பரணன்

...கொண்டு போறுன்!'' -சினத்துடன் தனக்குள் சொல்லிக் கொண்டார்.

வேலுப்பிள்ளை முணு முணுத்தது சரிதான்!

''என்னமாதிரி மரியாதையாயிருந்தவங்கள்! இந்த மூதேவியும் அந்தப்பாழாய் போனவனும் சேர்ந்து கெடுத்துவிட்டார்களே!''

-தனக்குள் சொல்லிக் கொண்டார். எதையோ நினைத்துக்கொண்ட அவர் இருந்தாற்போல் அவரது முகம் முழுவதும் வியர்வை முத்துக்கள் தோன்றின.

மிதமிஞ்சிய மனக்கோபத்தின் விளைவு அது!

அவர் மனம் தறிகெட்ட குதிரையாகி...அது நடந்து ஒரு மாதமாகி விட்டது. நினைக்கவே அவர் மனம், தேகம் எல்லாம் பதறியது. ஆனாலும், மாத்திரை கசப்பானாலும் விழுங்கித்தானே தீரவேண்டும்.

அன்று...

கொழும்பில் அரசாங்க நிர்வாகசேவையில் புதிதாகச் சேர்ந்த அவரது ஒரே மகள் திலகவதி லீவில் ஊருருக்கு வந்திருந்தாள். அவளுக்குத் திருமணம்செய்விக்க சங்கரப்பிள்ளை முயற்சி செய்துகொண்டிருந்த நேரமது.

காலை தரகு கனகு வந்திருந்தான். தன் பேச்சை முன்றுக்கு ... டான். அவன்பேசிக்கொண்டு வரும் கல்யாணப்பேச்சு எல்லாவற்றுக்கும்-'அந்த இடம் சரியில்லை, அது கொஞ்சம் இளக்கமான இடம்' என்று

## — து. வைத்திலிங்கம் —

கூறி சங்கரப்பிள்ளை நிராகரித்துவிட்டார்.

கனகு சென்றதும் அவரது மகள் திலகவதி வெளியே வந்தாள்.

''அப்பா உங்களோடு ஒரு விஷயம் பேசவேண்டும்!''

''என்ன திலகம்! வடிவாய் பேசன்!''

திலகவதி அரசாங்க உத்தியோகம்பார்க்கத்தொடங்கிய பின் அவர் தன் மகளிடம் ஒரு பவ்வியம் தொனிக்கும்படி பேசுவார்

''எல்லாம் என் கல்யாண விஷயமாய்த்தான்! நீங்கள் வீண் அலைச்சல்படவேண்டாம்! என் கணவரைநானே தெரிந்து கொண்டு விட்டேன்!''-முகத்தில் ஒருவித சலனமுமில்லாமல் திலகவதி கூறினுள். படித்து உத்தியோகம் பார்ப்பவள் இதற்கெல்லாம் தயங்கிஞல் ......?

''திலகம்! நீ... நீ என்ன சொல்லுருய் மோனை?''-சங்கரப்பிள்ளை அவசரமாய் இருந்த இடத்தைவிட்டு எழுந்தார்.

''அப்பா கல்யாணம் என்னைப்பொறுத்த விஷயம்! என் கணவரை நானே தெரிந்து எடுத்துவிட்டேன் என்பதற்காகக் கோபிக்காதீர்கள்!''

-திலகவதியின் வார்த்தையைக்கேட்ட அவர் ஒன்றும் கூறமுடியாமல் திக்குமுக்காடினுர். செல்லமாக, தன் இஷ்டப்படி வளர்ந்த ஒரே ஒரு மகள்! போதாததற்கு அரசாங்கத்தில் பெரிய பதவி வகிக்கின்ருள். பெரியபெரிய விஷயங்களையெல்லாம் அநாயாசமாய் அலசிக்கதைக்கும் சங்கரப்பிள்ளை ஒன்றும்பேச முடியாமல் நின்ருர். சுய நிலைக்கு வர சில கணங்கள் பிடித்தன.

''திலகம் நீ சொல்லுறது எனக்கு விளங்குது. பொடியன் ஆர், என்ன சாதி- என்ன உத்தியோகம்? அதைச் சொல்லு முதலில்...!

''அப்பா அவர் என்னைப் போல்தான் நிர்வாகசேவையில் இருக்கின்ருர்.''

''அதுசரி, என்ன சாதி, ஆர் பகுதி எண்டதைச் சொல்லு முதலில்! பின் எல்லாவற்றையும் யோசிப்பம்.''

''அப்பா நீங்கள் ஒன்றும் யோசிக்காதீர்கள்! இன்று நான் கொழும்புக்குப் போகின்றேன். ஒரு கிழமைக்குள்

படிக்கட்டும், படிக்கட்டும் என்று செல்லம் கொடுத்தாய்! இப்ப பாத்தியேநடந்த அலங்கோலத்தை...!''-சங்கரப்பிள்ளையின் கோபமானவார்த்தையைக்கேட்ட பாக்கியம் தலைகுனிந்து நின்ருள். அவள்தான் என்ன செய்யமுடியும்? கணவன், மகளின் படிப்புப்போதும் என்று கூறி திலகவதியின் படிப்பை நிறுத்த முயற்சி செய்தபோது மகளின் பிடிவாதத்தைக்கண்டு, தன்கணவருடன் வாதாடி, மகளைக் கல்லூரியில் சேர்த்தவளாயிற்றே!

ஆனல் இக்காலப்பெண்களின் குணத்தை எங்கே கண்டாள்?

'கல்யாணம் செய்துவிட்டேன். உங்கள் ஆசிகளை அளியுங்கள்'- என்று மகள் எழுதுவாள் என்று எதிர்பார்த்தாளா என்ன?

இனி என்ன செய்கிறது?

கறந்தபால் முலைக்கேருது!

மகள் திலகவதியோ உத்தியோகத்தில் இருக்கிருள். தன் இஷ்டப்படி சோதிநாதனை மணந்துவிட்டாள். பத்திரிகையிலும்போட்டோவுடன் செய்தி வந்தாயிற்று!

ஊரெல்லாம் செய்தி காட்டுத்தீபோல் பரவிவிட்டது. வெளியே தலைகாட்டவே சங்கரப்பிள்ளை தயங்கிஞர்.

இன்று கோவிலில் தைப்பூச உற்சவமானபடியால் சாமி தரிசனத்திற்காக புறப்பட்டிருக்கின்ருர். வழியில் சந்தித்த வேலுப்பிள்ளை-சோதிநாதனுக்கு மாமன் முறையானவன்- பழைய எண்ணங்களைத் தூண்டிவிட்டான்.

அம்பாள் சர்வ அலங்கார பூஜிதையாக வீதிஉலாவரத் தொடங்கிவிட்டாள். முல்லை, மல்லிகைமலர்மாலைகளின் சுகந்தம் சுற்றி நிற்போரைத் தம்வசம்இழக்கச் செய்தது! நாதஸ்வரவித்துவான் கந்தசாமிப்பிள்ளைமல்லாரியை வெகுஉற்சாகமாக வாசிக்கின்ருன்.

''தம்பி முருகேசு நீ முன் பக்கம் நிண்டுகொள்!''

''இராசண்ணை இஞ்சாலை வா! வலது பக்கம் தோளைக் கொடு!'' - சுவாமி வலம் வரும் சிங்கவாகனத்தைத் தூக்குவதற்கு ஆயத்தமாகிவிட்டனர் பக்தர்கள்

ஒருவித உற்சாகத்துடன் உத்தரவுகளைப் பிறப்பித்துக்

(4ம் பக்கம் பார்க்க)

நடராசாவுக்கு

வணக்கங்கள் பல. தங்கள் நலனை அறிய மிகவும் ஆவல். இவ்விடம் யாபேரும் க்ஷேமம்.

கமத்து வேலைகள் யாவும் முடிந்து இப்பொழுதுதான் சிறிது ஆறுதலாயிருக்கிறேன். பலருக்கும்போல இம்முறை எனக்கும் வேளாண்மை ஏமாற்றிவிட்டது. நஷ்டம்தான், என்ன செய்வது? எல்லாம் ஈசன் செயல். சிறு போகத்துக்கு எள்ளு விதைத்திருக்கிறேன்.

தங்களுக்கு உத்தியோக உயர்வு கிடைத்ததாகக் கேள்விப்பட்டு அளவிலா மகிழ்ச்சி அடைந்தேன். ஆண்டவன் மேலும் பல நன்மைகளைத் தருவாஞக!

நிற்க, தற்சமயம் எனது நிதி நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லாதபடியால், இரண்டு மாதங்களுக்கு முன் என்னிடம் கைமாற்ருக வாங்கிய ரூபாய் நூறையும் கூடிய சீக்கிரத்தில் அனுப்பிவைக்குமாறு மிகவும் தயவாகவும் தாழ்மையாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். அவசரப்படுத்துகிறேன் என்று குறை நினைக்கவேண்டாம்.

தங்கள் அன்புத் துணைவியாருக்கும் அருமைக் கண்மணி வசந்தனுக்கும் எனது வாழ்த்துகள் உரித்தாகுக.

பதிலை எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் அன்பிற்குரிய,
சி. சுப்பிரமணியம்.

குறிப்பு:
பிள்ளையார் கோயில் வருகிற திங்கட்கிழமை கொடியேறுகிறது. திருவிழாவுக்கு வருவீர்களா?

சி. சு.

0 0 0

'ஆனந்த பவனம்'
நல்லூர்,
10-6-67

அன்பு மிக்க நண்பர்
நடராசாவுக்கு.

வணக்கம். இவ்விடம் சுகம். தங்கள் சுகத்தை அறிய ஆவல்.

மூன்று மாதங்களுக்குமுன் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். தங்களிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. உவ்விடம் தங்களுக்கும் பலவிதமான ...ரைச்சல் இருக்கிறது போலும். எதற்கும் ஆண்டவனை நினைத்து வணங்கிக் கொள்ளவும்.

வயலில் உழவு, விதைப்பு தொடங்கிவிட்டது. கையில் பணம் அவசியம் தேவைப்படுகிறது தயவு செய்து அந்த நூறு ரூபாயையும் உடனே அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:
பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்

சி. சு.

0 0 0

நல்லூர்,
10-3.68

அன்புள்ள நடராசாவுக்கு,
வணக்கம். இதற்கு முன் இரண்டு கடிதங்கள் போட்டேன். உன்னிடமிருந்து ஒரு மறுமொழியும் கிடைக்கவில்லை. உன்னுடைய அவசர தேவைக்காக நான் ஒரு வருடத்துக்கு முன் தந்துதவிய ரூபாய் நூறு எப்பொழுது திரும்பிவரப்போகிறது? எனக்கு இவ்விடம் பெரிய முட்டுப்பாடாயிருக்கிறது. இதை தந்திபோலப் பாவித்து அடுத்த தபாலில் என்னுடைய பணம் முழுவதையும் அனுப்பிவைக்கவும்.
நன்றி.

இப்படிக்கு,
அன்புள்ள,
சி. சு.

0 0 0

பொ. நடராசா,
பொது வேலைப்பகுதி,
கொழும்பு.

எனது கடன் நூறு ரூபாயையும் தந்தியில் அனுப்பவும்.

சுப்பிரமணியம்.

0 0 0

நல்லூர்,
10-3-69

நடராசா அறிவது,
இவ்வளவு கண்மூடித்தனமாய் இருப்பாயென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. உன்னுடைய அந்தரத்துக்கு நூறு ரூபாய் அவசரம் தேவை என்று மன்ருடிஞய், நண்பனுச்சே என்று என் மனைவியின் காப்பை அடைவு வைத்து உடனே உதவினேன், அதற்கு நீ செய்த கைம்மாறு இவ்வளவுதான்.

நான் எழுதிய கடிதங்கள் ஒன்றுக்கும் நீ பதில் போடவில்லை. கடைசியாக ஆற்ருமல் தந்தியும் அடித்துப் பார்த்தேன். அதையும் அசட்டை செய்துவிட்டாய். நீ காசு அனுப்பாவிட்டாலும் பரவாயில்லை. கடிதங்களும் தந்தியும் கிடைத்ததென்று ஒரு சொல்லாவது எழுதிஞயா? இவ்வளவுதான் உனது யோக்கியம்!

ஒரு நூறு ரூபாய்க்காக ஒருவனுடைய சிநேகத்தை இழக்கிருேமே என்று நீ கணமேனும் சிந்தித்துப் பார்க்கவில்லை. என்னுடைய பணம் இனி திரும்பி வரும் என்று நான் நம்பவில்லை. உனக்கு இனிமேல் கடிதம் எழுதி எனது நேரத்தை வீணுக்கப் போவதில்லை.

இது எனக்கு நல்ல படிப்பினை.

இப்படிக்கு,
நம்பி மோசம்போன,
சி. சுப்பிரமணியம்.

காருகிறது. எதிரே உள்ள வண்ணமலர்களையும், நறுமணம் வீசும் மலர்களையும் விட்டு குறிக்கப்பட்ட அம்மலரில் உட்காருவானேன்? அம்மலருக்கு கண்ணைப்பறிக்கும் நிறமோ, மூக்கைத் துளைக்கும் மணமோ இல்லை. இவை இல்லையென்ருல் வேறு எது உண்டு? தேடிப்போன தேன் உண்டு. அதற்காகத்தான் தேனீ அதைத் தேடிற்று. கண்டதும்கொண்டது; தேனை உண்டது. திரட்டிக்கொண்டு திரும்புகிறது. இத்தேனீமட்டுமா திரட்டுகிறது; இல்லை. இதற்கு எத்தனையோ அண்ணன் தம்பிகள். அத்தனையும் தேடுகின்றன; தேன் மலரைத் தேடுகின்றன. வெறும் வண்ணமும் மயக்கும் மணமும் மட்டும் உள்ளவற்றை ஒதுக்குகின்றன. தேடிக் கண்ட தேன் மலர்களிலிருந்து தேனைச் சேர்க்கின்றன. சேர்த்துக்கொண்டு தனித்தனியே செல்லவில்லை, எல்லாம் ஒன்று சேர்ந்து கூடு கட்டின. பெரும் தேன் கூடு.

தேன் வெறும் இனிப்புப் பொருளா? இல்லை. உயிரூட்டும் மருந்து. பச்சைக் குழந்தையும்தள்ளாததாத்தாவும் உண்ணக் கூடிய மருந்து. தேடவேண்டிய மருந்து. தேனின் இழுப்பு வண்ணத்தின் கவர்ச்சியிலும், மணத்தின் மயக்கத்திலும் வலிய

(4-ம் பக்கம் பார்க்க)

# கோரிக்கை

— பண்ணுமத்தான் —

முண்டி முகிழ்ந் தவியும்
மனவோசைக் கனவுக்குள்
மௌனம் புதையு முன்னர்
ஒரு வார்த்தை
-முன்பாகச்
சொல்லிவிடு.

முறுவல் பிளந் திறுகி
முகம் கோணி முனியாமல்
மூச்சிறுகிப் போ முன்னர்
ஒரு வார்த்தை
-முடியுமென்ருல்
கூறிவிடு.

அண்டி அருகணையும்
ஆசை அதிர் வெடிப்புள்
அமுங்குண்டுப் போ முன்னர்
ஒரு வார்த்தை
-ஆமென்ருல்
உரைத்து விடு.


# மஸி-பெர்குசன் 135

## ட்ராக்டர்கள்

உடனடி விநியோகத்திற்கு

## இப்பொழுது கிடைக்கும்

ஏற்கனவே எங்களிடமோ அல்லது எங்கள் விற்பனையாளர்கள், கிளை ஸ்தாபனங்கள் ஆகியவற்றிடம் ஓடர் செய்த வாடிக்கையாளர்களும், சிறுபோக வேளாண்மைக்கு மஸி--பெர்குசன் ட்ராக்டர்கள் தேவைப்படுபவர்களும் எம்முடன்உடனடியாகத் தொடர்பு கொண்டு ட்ராக்டர்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

**பிரவுண் அன்ட் கம்பனி லிமிட்டெட்,**
விவசாயப் பிரிவு,
தேவநம்பியதிஸ்ஸ ரேட்,
கொழும்பு-10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு நின்றார் கோவில் மனேஜர் சுந்தரம்.

''சங்கரப்பிள்ளை நீங்கள் தூக்கவேண்டாம்! அதுநாங்கள் பார்த்துக் கொள்ளுவோம்!''

அவசரம் அவசரமாக சுந்தரம் இதைக்கூறினுர். எல்லோரது கண்களும் சங்கரப்பிள்ளையை நோக்கின. சுவாமிக்கு அருகில், வாகனத்தை தூக்குவதற்குஆயத்தமாய் நின்றிருந்தார்அவர். கோவில் மனேஜர் சுந்தரம், சங்கரப்பிள்ளையை சுவாமியைத் தூக்கவேண்டாமென்று கூறியதின் காரணத்தை பலர் அறிவார்கள். சங்கரப்பிள்ளையும்அறிவார். ஆனுல்,எதிர்ப்பு இந்தஇடத்தில் இன்னருபத்தில் ஆரம்பமாகும் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லையே! இதை மட்டுமல்ல இதற்கு முன்னேடியாக நடந்த தொன்றையும் அவர் எதிர்பார்க்கவில்லையே!

சங்கரப்பிள்ளை சிலையென நின்றார்! அவர் நினைத்தால் சுவாமியைத் தூக்குபவர்களோடு சேர்ந்து ஒரு தோள் கொடுத்திருப்பார். சுந்தரம் கோவிலுக்கு மனேஜர்ஒளிய சங்கரப்பிள்ளையின் மனேஜர் அல்லவே! ஆனுலும் சங்கரப்பிள்ளையின் உடல் அசையவே இல்லை.

அவர் சிலையாக நின்றது என்னவோ உண்மைதான். ஆனுல் சுவாமி உள்வீதி வலம் வந்து வெளிவீதி உலாவுக்கும் ஆரம்பமாகி 'வெளி வாசலை நோக்கி நகர்ந்தது.

உள்வாசலில் நின்ற சங்கரப்பிள்ளையை எல்லோரும் ஏதோ ஒரு விஞேதப்பொருளைப் பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டு சென்றனர். பார்ப்பது மட்டும் போதாதா? ஏதோ தம்முள் ரகசியமாகக் கதைத்துக் கொண்டும் சென்றனர். அதையும் அவர் கவனிக்கத் தவறவில்லை!

''இந்த முப்பது வருஷமாய், ஒவ்வொரு திருவிழாவுக்கும் சுவாமி வீதி உலா வரும்போது, நான்தானே வாகனக் கொம்புகளைப் பிடித்துக் கொண்டு போவேன்! ஆனுல்... ஆனுல்...!''

-நினைக்கவே அவர் உடல் படபடத்தது.

''கனகு!''

-தம்மைக் கடந்துபோன கனகுவை அழைத்தார். அழைத்த சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்த கனகு, தன் முகத்தைக் கோணலாக்கிவிட்டுக்கொண்டான்.

''கொஞ்சம் நில்லுங்கோ வாறன்!'' - அவன் நிற்கா...

ஆத்திரத்தில் அவர்தேகம் எல்லாம் பதறியது. ஆனுலும் அவர் என்ன செய்ய முடியும்? காரணம்அவருக்கே தெரியும். ஆனுல் தம்மை உதாசீனமாய் பார்த்துவிட்டுப் போகின்றவர்களோடு தம்முடைய ஸ்தானத்தை நிலைநாட்டுவதற்காக வாதாடத்தயார்தான். ஆனுலும் யார் கேட்கப் போகின்றுர்கள்?

நிர்வாணமானவர்கள் நிறைந்தஊரில், கௌபீனம் தரித்தவன் பைத்தியக்காரன் என்பார்கள்! அந்நிலையில்தானே சங்கரப்பிள்ளை இப்பொழுது இருந்தார்!

பக்தர்கள் கூட்டம் அலை மோதியது. ''தள்ளி நில்லுங்கோ! விலகி நில்லுங்கோ!'' -தரகு கனகு தன் சால்வையை, உதறி உதறி கூட்டத்தை ஒதுக்கினுன். ஒரு பக்கமாக நின்ற சங்கரப்பிள்ளையும் ஒதுங்கிய கூட்டத்தோடு தானும் ஒதுங்கினுர்.

சுவாமியை வெளியே தூக்கிவந்து விட்டார்கள். வாசலில் வைத்து குருக்கள் கர்ப்பூர ஆராத்தி காட்டினுர்.

''ஆச்சிக்கு அரோகரா!'', -குரல்கள் காற்றில் கலந்தன.

''அப்பா கொஞ்சம்தள்ளி நில்லுங்கோ! சாமி தெரியுதில்லை!''

-சங்கரப்பிள்ளையின் முதுகில் மெல்லிய கை ஒன்று உரசிய ஸ்பரிசஉணர்ச்சியை அடைந்தார். மெதுவாகத் திரும்பிப்பார்த்தார். அங்கு...

இவ்வூர் தாழ்ந்த ஜாதி என்று வர்ணிக்கப்படும் 'பாக்கியத்தைப்' பெற்ற சமூகத்தினர் நின்றுகொண்டிருந்தனர். உயர்ஜாதிக்காரர்களால் ஒதுக்கப்பட்டவர்கள் அவர்கள்!

அவர்களோடு, ஊர்ப் பெரியதனக்காரர் சங்கரப்பிள்ளையும்...! சேர்ந்து நிற்கவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டதே!- இப்படி நினைத்தவரின் உடல் கூசியது.

தான் ஒதுங்க ஒதுங்க, தானறியாமலே அங்குஒதுக்கப்பட்டதை மெதுவாக நினைத்தார்!

இருந்தாற்போல மனதில் ஏதோ ஒரு மின்வெட்டு...!

''என் மகள் கீழ்சாதியைச் சேர்ந்த சோதிநாதனை கல்யாணம் செய்த குற்றத்துக்காகத்தானே என்னை உதாசீனப்படுத்தி மரியாதைகெடுக்கின்றுர்கள்! இவர்களுக்கு ஒரு பாடம் கற்பித்தாலென்ன?'' - சங்கரப்பிள்ளையின் மனம் தனக்குள் பேசிக்கொண்டது.

ஒரு காரணத்தை வைத்து...

என் வாழ்வில் ஒரு நாள்—(8)

# 'எங்களைப் பார்த்தாவது பழகலாமே!'

என்னை நீங்கள் இப்படி தடுத்து நிறுத்திக் கதைகேட்பது முறையல்ல. ஏனென்ருல் மற்ற ஜந்துக்களைப் போல நான் அரைக்கணமேனும் ஓய்வெடுத்திருப்பதில்லை. ஏன் உங்கள் இனத்தவர்களில் பலர்கூட வேலைவெட்டிக்குப்போகாமல் சும்மா வீட்டில் இருந்து மற்றவர்கள் தயவில் வயிறு வளர்க்கிருர்கள். நாங்கள் அப்படியல்ல. எங்கள் ஜாதியில் ஒருவனுவது சோம்பித் திரிவது கிடையாது. எல்லோரும் தமக்கிடப்பட்ட கடமைகளை அன்றைக்கன்று முடித்தேதீரவேண்டும். அல்லாவிட்டால் நமது சமுதாயம் சீர்குலைந்துபோகும்.

சொன்னது:
தேனீ

சரி, போனுல் போகிறது. நீங்கள் வாய்விட்டுக்கேட்டுவிட்டீர்கள். ஆகையால் உங்களை மனங்கோணப் பண்ண விரும்பாமல் என் கதையைச்சொல்லுகிறேன். என்னுடைய வேலை தாமதமாகும்தான். பரவாயில்லை, இன்னும் கொஞ்சம் உன்னிப்பாக 'ஓவர்டைம்' செய்துவிட்டால் போகிறது.

நான் வைகறைப்பொழுதில் காகம் கரையுமுன்னே எழுந்துவிடுவேன். அந்தச்சமயத்தில்தான்பெரும்பாலான மரங்களிலும் செடிகளிலும் மலர்கள் மொட்டவிழ்த்து விரியும் நேரம். அவற்றின் சுகந்தம் என்னை வசீகரித்துவிடும். சிலமலர்களின்வண்ணமும் என்னைக்கவர்ந்து அவைபால் இழுக்கும். என்னுடன் கூட எங்கள் கூட்டில்வழும் சுமார் 2",000 சகாக்களும் புறப்பட்டுத்திக்குத் திக்காக செல்வதுண்டு.

வெள்ளென முன்பே நான் புறப்பட்டுப் போவது ஏன் என்று தெரியுமா? என்னைப் போலவே வண்டினங்களும், வண்ணத்திப் பூச்சிகளும் பலாக்கொட்டைக் குருவி என்று நீங்கள் அழைக்கும் சிறிய பறவைகளும் மலர்களில் ஊறும் தேனைக்குடிக்க போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள். ஆகையால் அவர்கள் வெளியே கிளம்புவதற்கு முன் நான் போய் சேர்ந்துவிடவேண்டும்.

வியாக்கிரபாதர் என்று ஒரு முனிவர் இருந்தாராம். நாங்கள் மலர்களை அசுத்தப் படுத்துவதற்கு முன்புதான் அவற்றைப் பறித்துவிட வேண்டுமென்பதற்காக, மரத்தில் ஏறுவதற்கு புலி நகங்களும் அவற்றின் முனையில் கண்களும், வேண்டுமென்று சிவபெருமானிடம் வரம்கேட்டாராம். அவர் நினைத்தபடி நாங்கள் மலர்களை எச்சில்படுத்துகிருேம் என்று நினைக்கிறீர்கள். அந்தச் சிவபெருமானே மலர்களை எமக்காகவும் எம்மை மலர்களுக்காகவும் படைத்திருக்கிருர் மலர்கள் இல்லாவிட்டால் நாங்கள் இல்லை, நாங்கள் இல்லாவிட்டால் மலர்கள் இல்லை. அவற்றிலிருக்கும் தேனை நாங்கள் உண்கிருேம். அப்படி உண்ணும்போது அவற்றிலுள்ள மகரந்தப் பொடி எங்கள் கால்களில் ஒட்டிக்கொள்கிறது. இன்ெருரு பூவில் நாம் தேன் சேர்க்கும்போது அந்த மகரந்தப் பொடி அந்தப் பூவில் சேர்ந்துவிடும். இப்படி நாம் செய்யாவிட்டால் பூத்த பூக்கள் காய்க்காது மரங்கள் மலடாகிவிடும். வேறு ஜந்துக்களும் எம்மைப்போல மகரந்தப்பொடியை பரிவர்த்தனை செய்வது உண்மைதான். ஆனுல் அவை பல மலர்களின் தேனையும் அருந்தி பல மகரந்தப் பொடிகளை கலந்துவிடுகின்றன. நாங்களோ தேனூற்று எந்த மலரில் அதிகமாக இருக்கிறதோ அதையே தேடிப்போய் தேனுண்போம். அந்த ஜாதி மலரை விட்டு இன்னென்றுக்கு தாவுவதில்லை. ஒரே மலரின் பொடியை அந்த இனத்து மலருடனேயேசேர்ப்போம். தாவர இனவிருத்திக்கு இது மிகவும் உதவியாக அமைகிறது. ஆகையினுல்தான் மலர்களும் எங்களை நம்பியே இருக்கின்றன என்று சொன்னேன்.

அதோ பார்த்தீர்களா அந்தக்கிழட்டு மாமரத்தை! அதன் அடியில் ஒரு பெரிய வெடிப்புத்தெரிகிறதல்லவா அதுதான் எங்கள் நகரத்து வாசல். என்ன ஆச்சரியப் படுகிறீர்கள்? நகரம் என்று சொன்னதற்காகவா? சுமார்

எழுதியது:
வி. என். பி.

ஒரு லட்சத்துக்குமேற்பட்டவர்கள் வசிக்கும் அந்த இடத்தை வீடு என்று சொல்வது? வெளிப்பார்வைக்கு எங்கள் நகரம் முழுவதையும் நீங்கள் பார்ப்பது முடியாத காரியம். அந்த மரத்துக்கு அருகில் போனீர்களானுல் உள்ளே ஒரு பெரிய தொழிற்சாலை இருப்பதுபோல 'ஹும்ம்ம்' என்ற இரைச்சலை கேட்கலாம். நாங்கள் எல்லோரும் சுறுசுறுப்பாக வேலைசெய்வதில் ஈடுபட்டிருக்கிருேம் என்று அர்த்தம். வாசலில் கைவைக்கப் போனீர்களோ ஆபத்து வருவது நிச்சயம். ஏனென்ருல் ஒவ்வொருகணமும் அதில் காவலாளிகள் நின்று கொண்டே இருப்பார்கள். தெரிந்தோ தெரியாமலோ உள்ளேநுழையப் பார்ப்பவர்களை அவர்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

# இலக்கிய இருபது

— தமிழ்நாடன் —

(முற்றொடர்ச்சி)

குருவிச்சை யென்னப் பிறரின்
குருதி யுறிஞ்சியதைத்
தருவிச்சை இன்பத் தமிழிற்
புரியேன் பிறர்நெசவில்
பெருஇச்சை கூரப் பிழைபடு
சாயக் கவிபுனையேன்
உறுதச்சை யுள்ளும் கரிமுக
னேநீ கரியன்றே.

அரிச்சந் திரன்மாங் கலியக்
கவிதை அது அவலம்!
கருச்சந் தமுரு வசனக்
கடையல் விலைப்படுமோ?
தெருச்சந் திகளவை தேர்ந்தோர்
எவரும் நுகர்கனியாய்
வரக்கந் தமலர் அடிபணி
வேனே வரந்தருவாய்.

கற்பனை யில்லைக் கருத்திலை
யேற்ற நளினமில்லை
ஒப்பனை யில்லை யுயிருட்டும்
உண்மை யதுவுமில்லை
விற்பனை யில்லை அதிசயம்
இல்லை வெறுவினையைத்
தப்பெனக் காணுர் தமிழ்ப்பணி
தீராத் தலைப்பிணியே.

அடியெடுத் துக்கொடுத் தாயிலை
ஐய மணிமணியாய்ப்
படியெடுத் துக்கொடுத் தாயிலை
பாவ இருவினையேன்
மடிகெடுத் தாண்டநல் மாமணி
யேசெந் தமிழ்க்கவிதைப்
பிடியெடுத் துக்கொடுத் தாயிது
வேயென் பெருந்தவமே.

என்படைப் பென்பன ஆஃகா
வரப்பிர சாதமென
அன்புட னுய்வுரை யாற்றுவர்
என்பதற் காகமற்ருேர்
தன்படைப் பிற்தர மற்றன
காளான் சிருஷ்டிகளை
யென்படை காட்டினும் என்தரம்
போயினும் யான்மதியேன்.

நோயுளங் கக்கிய எச்சிலை
நோஞ்சற் பதங்களிலே
ஆய்வுரை கூறுமப் பாவி
யிலக்கிய மொன்றரற்றின்
பேயுரை யென்றும் பிதற்றுரை
என்றுங் கருதலன்றி
வாயுரை யென்று வழுத்தவென்
புத்தி வறியதுவோ.

'கால வடா'யெனக் 'காலவள்
தாயைக் கடும்புணர்ச்சிப்
பால்விடு மேதையர் பாவம்
மிகப்பெறும் பேதையரே
நூல்தரு சூத்திர நுண்பொருள்
ஓர்கிலர் கூர்மதிதம்
பாலில வாகிய நீசந்
தமிழிற் படுவதுவோ.

கள்ளக் கடத்த லிலக்கிய
நுண்பொதி பத்திரிகை
வள்ளத் திலேவரும் போதே
தகுந்தநற் சூடுகொடுத்(து)
எள்ளத் தனையுந் நரம்பிற்
சுணையற்ற எத்தர்மதிப்
பொள்ளலை அம்பல மாக்கலும்
லக்கியப் புண்ணியமே.

தருப்பையிற் கூர்த்த தலையினர்
உள்ளப் புணர்ச்சியிலே
கருப்பை சிறந்து கருவிற்
திருவுறக் காலநங்கை
விருப்பினைப் பூர்த்தி புரிவாள்
இலக்கியப் பெண்அவளிற்
கருக்கொள வேண்டுமோர் காவியச்
செல்வம் கணபதியே!

பன்றிகள் போற்பல குட்டிகள்
வேண்டேன் களிறுதரும்
கன்றென வொன்றே யமையுங்
கவிதைக் கனியமுதாய்
நின்று பிடித்தெந் நிலையினர்க்
கும், சுவை நல்குவதாய்த்
தென்றற் சுகந்தரு பேறருள்
தெய்வ மணிவிளக்கே.

(முற்றும்)

(வழிபடு தெய்வமாம் தச்சை விநாயகனைப் பாட்டுடைத் தலைவனுகக்கொண்டு பாடப்பெற்றவை.)

# அன்பு மழை பொழியும் தலைவனே முதன்மையானவன்

— திருமதி பேரின்பநாயகி சுப்பிரமணியம் —

ஒரு பெண் தன் வாழ்நாளில் மூன்றிலொரு காலத்தைத் தன்தாய் தந்தையருடன் கழிக்கிருள்.

''அன்பும்அறனும்உடைத் தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது''

கணவனுனவன் தன்மனைவி...

யைப் புலப்படுத்துகிருர் வள்ளுவப் பெருந்தகை.

ஒரு பெண் எரியும் மெழுகு திரிக்குச் சமமானவள். திரியானது எரியும்போது எவ்வளவு பிரகாசம் கொடுத்து தன்னைச் சூழ்ந்துள்ளவருக்கு தன்னுல் இயன்ற உதவியைச் செய்து அவர்களை மகிழ்...

['பெண் ஆணுடன்சரி நிகர் சமானமாக வாழ வேண்டுமா'என்ற கருத்தரங்கு இவ்வாரத்துடன் முடிவடைகிறது. கருத்து செறிவுள்ள கட்டுரைகளை அனுப்பி கருத்தரங்கை சிறப்பித்த வாசகர்க...

# மகப்பேறு இல்லையென மனவருத்தமா?

ஜெர்மனியில் தென் பவேரியாவில் பிராஸ்டிரப் என்னும் கிராமத்தினருகே ஓர் அதிசய ஊற்று இருக்கிறது. இந்த ஊற்றுத் தண்ணீரின் வியக்கத்தக்க சக்திகளைப்பற்றி, குடியானவர்கள் பல நூற்றுண்டுகளாகப் பேசி வந்திருக்கிருர்கள். ...

...ருர்கள். நோயாளிகள் அணி அணியாக ''படையெடுக்கிருர்கள்.'' அதிசய ஊற்றுத் தண்ணீரில், நோய்களை குணமாக்கும் ஆற்றல் அடங்கியிருப்பதாகச் சொல்லப் படுகிறது. ரத்த ஓட்டத்தை செம்மைப்படுத்துகிறது; நரம்புகள் இயக்கிகளைச் சரிப்படுத்தி, கல்லீரல், சிறுநீரகம் ஆகியவற்றை ஒழுங்காக இயங்கச் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-தம்மைக் கடந்துபோன கனகுவை அழைத்தார். அழைத்த சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்த கனகு, தன் முகத்தைக் கோணலாக்கிவிட்டுக்கொண்டான்.

''கொஞ்சம் நில்லுங்கோ வாறன்!'' - அவன் நிற்காமலே போய்விட்டான்.

''அவர் கெட்டகேட்டுக்கு அதிகாரம்பண்ணியல்லவோ கூப்பிடுகிறார்!''-அவன் முணுமுணுத்துக்கொண்டு சென்றான்.

''ஐயா!''

தம்மைக் கடந்து போன கோவில் குருக்களை நோக்கி சங்கரப்பிள்ளை அழைத்தார். ஆனால் குருக்களோ தம்மை அழைக்கும் சத்தம்கேட்டுத் திரும்பியவர் நிமிர்ந்து சங்கரப்பிள்ளையை நோக்கித் தலையாட்டிவிட்டுச்சென்றார்

சங்கரப்பிள்ளைக்கு முகத்தில் ஈயாடவில்லை. வழக்கமாக இக்குருக்கள் சங்கரப்பிள்ளையைக் கண்டால் நின்று, சில வார்த்தைகள் பேசாமல்போகமாட்டாரே; ஆனால் இன்றோ ஏதோ கூடாத பொருள் ஒன்றைப் பார்ப்பது போலல்லவா நோக்கிவிட்டுச் செல்கின்றார்.

சங்கரப்பிள்ளைக்கு உடலெல்லாம் தகித்தது. கோவில் மனேஜர் சுந்தரம், தரகு கனகு, கோவில் குருக்கள்- இவர்கள் எல்லோரும் சேர்ந்து தம்மை அவமானப் படுத்திவிட்டார்கள் என்று நினைத்து நினைத்து தம்முள் குமைந்தார். இந்த ஊரே திரண்டுநின்று தன்னை அவமானப்படுத்தியமாதிரி எண்ணினார்.

யாணம் செய்த குற்றத்துக்காகத்தானே என்னை உதாசீனப்படுத்தி மரியாதைகெடுக்கின்றார்கள்! இவர்களுக்கு ஒரு பாடம் கற்பித்தாலென்ன?'' - சங்கரப்பிள்ளையின் மனம் தனக்குள் பேசிக்கொண்டது.

ஒரு காரணத்தை வைத்து தன்னை ஒதுக்குகிறார்கள். ஆனால் இதோ இவருக்குப் பின்னால்நிற்கிறார்களே அவர்கள் ஒதுக்கப்படுவதற்கு என்ன பாபம்செய்தார்கள்?

தம்மையறியாமல் ஒரு முறை தனக்குப்பின்னால் நின்றவர்களை நோக்கினார். அதில் அருவருப்பு இல்லை! மமதை இல்லை!

ஆனால் இரக்கம் நிறைந்திருந்தது.

அந்த ஒரே ஒரு கணம், கோவில் மனேஜர் சுந்தரம் கோவில் குருக்கள், தரகு கனகு - இவர்கள் யாவரும் அவரின் உள்ளத்திலிருந்து மறைந்தார்கள். என்ன நினைத்தாரோ, சடாரென்று திரும்பினார்! தன்னை விலகி நிற்கும்படி கேட்ட சிறுவனை நோக்கினார்.

''தம்பி சாமியைவடிவாய் பார்!'' - கூறிக்கொண்டே குனிந்து, அச்சிறுவனைத் தூக்கினார். ஒரு வைராக்கியத்தில் சங்கரப்பிள்ளையின் முகம் ஒளிவிட்டது. ஏதோ ஒன்றைப் பழிவாங்கிவிட்டது போன்ற திருப்தி!

சிறுவன் உற்சாகமாய் சுவாமியைக் கண்கொட்டாது பார்த்தான்.

அதே நேரம்......

பல உயர்ஜாதிக்காரர்களுடைய கண்களும் சங்கரப்பிள்ளையை வெளித்து நோக்கின!

(பாவும் சர்டனை)

''லேடன்'' LEYDEN

தயாரிப்புகள்

★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ றெறி சேட்
★ றெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

74A, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

போன்: 330

— திருமதி பேரின்பநாயகி சுப்பிரமணியம் —

ஒரு பெண் தன் வாழ்நாளில் மூன்றிலொரு காலத்தைத் தன்தாய் தந்தையருடன் கழிக்கிறாள். மிகுதி வாழ்நாளைத் தன் கரம் பற்றிய கணவனுடன் கழிக்கிறாள். மணமாகிய மறுகணமே அவளது பெயர் விலாசம் முதற்கொண்டு அவளின் சகல உரிமைகளையும் தன் கணவனுக்கே அர்ப்பணித்து அவனுக்கே உரியவளாகிறாள். கணவனே கண்கண்ட தெய்வமாக-அவனது இன்பதுன்பங்களைத் தனதாக எண்ணி அவனுக்கு இடைவிடாத தொண்டு செய்து அவன் மகிழ்வில் தானும் ஊறித்திளைக்கிறாள்.

பெண் ஆணுக்கு 'அடக்கம்' என்று கூறியவுடன் 'அடிமை' என்று எண்ணிவிடக்கூடாது. பெண் கொடி போன்றவள். காற்றில் அலை

## கருத்தரங்கம்

யும் கொடிபோல் ஆகிவிடாமல், ஊழல் நிறைந்த இச் சமுதாயத்தில் இருந்து அவளைக்காப்பாற்றி, அவள்சுதந்திரமாகப் பரவிப் படரக் கொழுகொம்பாக இருப்பது ஆண்களே! பெண்களுக்கு இயற்கை அரண்களாக உள்ளன அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் அரும் பெரும் தூண்கள். பெண்ணை நெருங்கினால் தான் இத்தூண்கள் மற்றவர்கண்களுக்குப்புலப்படும். ஆனால் எட்ட நின்று பார்த்தாலும்கூடப் புலப்படும். பெரிய அரணாக அவளது கரம்பற்றிய காவலன் தென்படுவான். அவளைத்துணிந்து இப்பூவுலகில் நடமாடவைப்பது அவளது துணைவனே.

தன் மனைவி எவ்வளவுக்கெவ்வளவு அறிவாலும், ஆற்றலாலும், பண்பாலும், பண்பாட்டாலும் மேம்பட்டுத் திகழுகிறாளோ, அவ்வளவுக்கவ்வளவு கணவன் பெருமை கொள்வான். இல்வாழ்க்கையில் கணவனுக்கே தெரியாத பல அரிய சாதனைகளைப் பெண் புரிகிறாள். உதாரணமாக குழந்தை வளர்ப்பு, சமயற்கலை, அறம் செய்தல், விருந்தோம்பல், முதலியன. தான் என்ன சாதனையை நிலைநாட்டினாலும், அதற்குப் பரிசாக அவளது கணவன் அவள் திறமையை பாராட்டும்போது அவள் அடையும் இன்பநிலையை எழுதுகோலால் அளக்கமுடியுமா!

''அன்பும்அறனும் உடைத்
தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது''

கணவனானவன் தன்மனைவி மீது அன்புமழை பொழிந்து அவளது இன்பமே தனதாக எண்ணிஅவளைச்சீரும்சிறப்பு

## குடும்பச் சுடர்

மாகப் பேணிப் போற்றி வாழ்கிறான். அவனது பிறவிப் பயனாகிய இல்லறமாகிய நல்லறத்தை செவ்வனே செய்யவும், நல்லமக்களைப் பெறுதவர் அடையும் நரகத்தை அடையாமல் இருக்கவும் பெருந்துணை புரிபவள் பெண்தானே! அதனாற்றான்

'கருமணியிற் பாவாய் நீ
போதாயாம் வீழும்
திருநுதற்கில்லை இடம்''

என்று பெண்ணின் பெருமையைப் புலப்படுத்துகிறார் வள்ளுவப் பெருந்தகை.

ஒரு பெண் எரியும் மெழுகுதிரிக்குச் சமமானவள். திரியானது எரியும்போது எவ்வளவு பிரகாசம் கொடுத்து தன்னைச் சூழ்ந்துள்ளவருக்கு தன்னால் இயன்ற உதவியைச் செய்து அவர்களை மகிழ்வித்து அதில் தானும் இரண்டறக் கலந்து, ஈற்றில் தன்னையே அர்ப்பணிக்கிறது. அதுபோல பெண்ணும் தனது கணவனுக்கு வாழ்வில் உறுதுணையாய் இருந்து மதியுக மந்திரியாய்- ஆசை நாயகியாய் - தன் மக்களுக்கு அன்புத் தாயாய்- தன்னைச் சூழ்ந்துள்ளவர்களுக்கு ஆருயிர்த் தோழியாய்- அருமைச் சகோதரியாய் வாழ்கிறாள். தன்னால் கூடியமட்டும் மற்றவர்களின் துயர் நீக்கி, இனியன கூறி ஆறுதல் கொடுக்கிறாள். ஒரு கற்புள்ள பெண்ணே தன்னையும் தன் நாயகனையும் தமது வருங்கால சமுதாயத்தையும் நல்ல முறையில் பேணி நற்பண்பு புகட்டி நல்வழியில் வாழ வழிவகுக்கிறாள். அதனால் அவள் தன் வீட்டிற்கு மட்டுமல்ல, நாட்டிற்கும் பெரிய சேவை செய்தவளாகிறாள்.

''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற் காத்துச் சோர்
விலாள் பெண்''

இவ்வாறு எழுதற்கரிய பெருமையுடையவள் பெண். ஆனால் பெண் ஆணுக்கு அடக்கம். எந்த ஒரு விஷயத்திற்கும் தலைவன் ஒருவனே! அதேபோல வீட்டிற்கும் ஒருவனே 'தலைவன்'. இது தெரியாமல்தான் இன்று உலகம் திகைக்கிறது. ''நாம் ஏன் ஆணுக்கு அடங்கி வாழவேண்டும்; ''நாமும் உழைக்கிறோம் அவரும் உழைக்கிறார்'' அல்லது ''நான் மட்டும் உழைத்து அவருக்குத் தண்டச் சோறு போடவா'' என்று எத்தனையோ பெண்கள் கூச்சலிடுவது எமது காதுகளில் கேட்கிறது இந்நிலை அறவே ஒழியவேண்டும். பெண் எப்படியான தொழில் செய்தாலும் அல்லது எந்நிலையில் இருந்தாலும் பரவாயில்லை. ஆணுக்குரிய ''தலைவன்'' ஸ்தானத்தை அவனுக்கே பெருமையுடன் அளித்துக் கௌரவித்து அவனது நிழலின்கீழ் தானும் தமது பெறற்கரிய செல்வங்களாம் நல்மக்களையும் இருத்திப் பெருமையடையவேண்டும். பெண்ணுக்கு இதனிலும் மேலான பேறு வேறுண்டோ!

''தெய்வந் தொழா அள்
கொழு நற்றொழு
தெழுவாள்
பெய்யெனப் பெய்யும்
மழை''

['பெண் ஆணுடன்சரிநிகர் சமானமாக வாழ வேண்டுமா'என்ற கருத்தரங்கு இவ்வாரத்துடன் முடிவடைகிறது. கருத்துசெறிவுள்ள கட்டுரைகளை அனுப்பி கருத்தரங்கை சிறப்பித்த வாசகர்களுக்கு நன்றி.]

# கணவனை இழந்த அன்றே மறுமணம்

## ஆபிரிக்க நாட்டு வழக்கம்

கணவனை இழந்த பெண்கள் தமிழ் சமூகத்தினரிடையே மறுமணம் புரிதல் மிகவரிது. இன்று மிகச் சிலர் மறுவிவாகம் செய்தபொழுதும் பெரும்பாலானோர் மறுமணத்தை விரும்புவதுமில்லை. சமூகமும் அவ்வாறு இருத்தலையே விரும்புகிறது. பண்டைக்காலத்தில் கணவன் இறந்த அன்றே அவன் எரியில் அவளையும் உடன்கட்டையேறச் செய்யும் வழக்கம் இருந்தது. இதற்குப் பின்னர் கணவன் இறந்ததும் ஒரு பெண்ணை மொட்டை அடித்து வெள்ளையாடை கொடுத்து அணியச் செய்துவிடுவார்கள். இன்று கணவனை இழந்த பெண்கள் பலர் வெள்ளையாடையணிகிறார்கள். ஆனால் முன்னைய கடும்கட்டுப்பாடுகள் பல நீங்கியுள்ளன. எமது கலாச்சாரம் இவ்வாறிருக்க ஆபிரிக்க மக்களில் 'குவாட்' என்னும் இனத்தவரிடையே அதிசயிக்கத்தக்க ஒரு பழக்கம் நிலவிவருகிறது. கணவனை இழந்த மனைவிக்கு அன்றைய தினமே மறுமணமும் செய்துவிடுகிறார்கள். இந்த இனத்து மக்கள் ஒரு பெண்ணின் கணவன் இறந்ததும் அவனது உடலை வீட்டுக்குப் பக்கத்தில் புதைக்கும் வழக்கம் அவர்களிடையே இருந்துவருகிறது. புதைக்கப்பட்ட பின்னர் மனைவி அப்புதைகுழியை விழித்திருந்து இரவு முழுவதும் காவல் புரிவதோடு மேளத்தைத்தட்டி இசை எழுப்பிக் கொண்டிருக்கவும் வேண்டும். இதனால் அயலவர்களின் தூக்கம் கெடுகிறது. தனக்கொரு கணவன் கிடைக்கும்வரை அவள் இவ்வாறே மேளம் அடிக்கவேண்டும். இதனால் பாதிக்கப்படும் அயலவர்கள் உடனே அவளுக்கு ஒரு கணவனைத்தேடிப் பிடித்து விவாகம் செய்துவைத்துவிடுவார்கள்.

…மனியில் தென் பவேரியாவில் பிராஸ்டிரப் என்னும் கிராமத்தினருகே ஓர் அதிசய ஊற்று இருக்கிறது. இந்த ஊற்றுத் தண்ணீரின் வியக்கத்தக்க சக்திகளைப்பற்றி, குடியானவர்கள் பல நூற்றாண்டுகளாகப் பேசி வந்திருக்கிறார்கள். இப்போது டாக்டர்கள், அதனை உறுதி செய்திருக்கி…றுத் தண்ணீரில், நோய்களை குணமாக்கும் ஆற்றல் அடங்கியிருப்பதாகச் சொல்லப் படுகிறது. ரத்த ஓட்டத்தை செம்மைப்படுத்துகிறது; நரம்புகள் இயக்கிகளைச் சரிப்படுத்தி, கல்லீரல், சிறுநீரகம் ஆகியவற்றை ஒழுங்காக இயங்கச் செய்கிறது.

(5ம் பக்கம் பார்க்க)

# ஈ — எறும்பு— தேனீ—

(3-ம்பக்கத்தொடர்ச்சி)

தாக, முக்கியமானதாக இருந்தது. ஏன்?

ஈ, எறும்பு, தேனீ! இம்மூன்றில் எதுவும் நமக்குப் புதிதல்ல. நாம் பல முறை பார்த்தவையே! அவற்றிலிருந்து நாம் அறியக்கூடியவை என்ன இருக்கின்றன என்றுதானே கேட்கிறீர்கள்? இதோ இனிமேல் கற்பதற்குப் பெரிய பாடம் இருக்கிறது.

சோறு, அழுக்கு இரண்டும் ஒன்றுதான் ஈக்கு. எதையும் உண்டு வாழ்ந்துவிடும் ஈ; எதிலும் வாழ்ந்துவிடும் ஈ. ஆகவே என்றும், எங்கும் எல்லோராலும் வெறுக்கப்படுவது, விரட்டப்படுவது. ஈயைப்போல நாமும் நல்லது தீயது அறியாமல் கண்ட எதையும் உண்டு, எப்படியும் உண்டு, எதையும் கற்று வாழலாமா?

சின்னஞ் சிறிய சிற்றெறும்பு. அதற்கு எத்துணைச் சுறுசுறுப்பு. ஆராய்ச்சிஅற்ற சுறுசுறுப்பா? குறிக்கோள் அற்ற சுறுசுறுப்பா? பதறும் சுறுசுறுப்பா? முறையற்ற சுறுசுறுப்பா? இல்லவே இல்லை.

சின்னச் சின்ன எறும்பே
சிங்காரச் சிற்றெறும்பே
உன்னைப் போல நானுமே
உழைத்திடவே வேணுமே

என்ற சிறுவர் பாடல் சிந்தனையைத் தூண்டும்பாடல்; பொருளற்ற பாடல் அல்ல.

சுறுசுறுப்பிற்கு எடுத்துக்காட்டாக உள்ள இச் சிற்றெறும்பு அழுக்கைத்தேடிச் சேர்ப்பதில்லை. உயரியபண்டங்களுக்கு ஏய்க்காவிட்டாலும் உணவுப்பொருள்களை விடுவதில்லை. நாளை நடப்பதை யார் அறிவார் என்று சோம்பிக் கிடப்பதில்லை. வாழ்க்கைக்கு இன்றியமையாததைத்தான்சேர்க்கிறது. இவ்வளவு முன்யோசனையும், சுறுசுறுப்பும், தன்னிறைவும், பொறுமையும், ஒழுங்கும் கூட்டுணர்ச்சியும் இருப்பதால் அல்லவா, இவ்வளவு சிறிய எறும்பினம் இவ்வளவு காலம் உயிர் வாழமுடிகிறது!

சுறுசுறுப்பும், தொலைநோக்கும் குறிக்கோளும், பொறுமையும், ஒழுங்கும், கூட்டுணர்ச்சியும் இருந்தால் தான் நீயும், நானும், நம் இனமும் வாழையடி வாழையாக வாழமுடியும்.

தேனீ தேடுவது தேன். உயரிய, அரிய பொருள். அது அழுக்கை அண்டாது. சோற்றைச் சேராது; கம்பை, வரகை நாடாது. எப்பருவத்தினருக்கும், எந்நிலையினருக்கும் உயிர் ஊட்டும் மருந்தாகும். அரும் பொருளைத் தேடிப்புறப்படுகிறது தேனீ. உயரிய குறிக்கோளோடு புறப்பட்ட தேனீ, மலரின் மணத்தில் சொக்கி, நிறத்தில் மயங்கி இருந்தால் தேனை இழந்திருக்கும். மூக்கின் அடிமையாகாது, கண்வழி செல்லாது, நேர்வழி சென்றதால் தேடிய நற்பொருள் கிட்டிற்று.

மக்களுக்கு வாழ்நாளெல்லாம் உயிரூட்டும் மருந்தாக பயன்படவேண்டியதுகல்வி. ''கேடில் விழுச் செல்வமாம்'' கல்வி எவ்வளவு தொலைவில் இருந்தாலும் விடாதே. மறைந்திருந்தாலும் விடாதே. தேடிப்பெறு. தோற்றத்தில் ஏமாறாதே. எதிரே எளிதில் கிடைப்பதால் எதையும் கற்காதே. வலிய வந்து மணம் பரப்புவதால் மயங்கிவிடாதே. குணம்நாடி; தேன் தேடிப் பெறு. தேன்போல் உயிரூட்டும், மருந்தாகும் நூல்களைத் தேடி ஆய்ந்துஎடுத்துப்படி. படிக்கும்போது பாகுபோல் இனிப்பினும், நினைக்கும் போது நோக வைக்கும் ஏடுகளை ஏறிட்டுப்பார்க்காதே. அறிவுத்தேன் எங்கிருந்தாலும், எப்படியிருந்தாலும் நாடித் தேடிக்கொண்டுவா. சொட்டுச் சொட்டாய்க் கொண்டுவா. பல மலர்களிலிருந்தும் கொண்டுவா. கொண்டு வந்த தேன்துளிகளைத் தனித்தனியாகப் பதுக்கிவைக்காதே. உனக்காக மட்டும் மறைத்து வைக்காதே. பொதுத்தேன் கூட்டிலே சேர்த்துவிடு. பெரும் அறிவுக்கூட்டிலே சேர்த்துவிடு. இதுவே தேனீ புகட்டும் பாடம். எனவே ஈ, எறும்பு, தேனீ இவற்றில் எதுவாகப்போகிறோம் நாம்?

## எங்களை ......

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈனஇரக்கமின்றி குத்திக் கொன்றுவிடுவார்கள். உங்கள் கையை பொந்துக்குள் விடுவீர்களானால் அவர்கள் கொட்டுகிற கொட்டிலே வலி தாங்க முடியாமல் குளறுவீர்கள். உங்கள் கை பந்துபோலவீங்கிவிடும்.

நாங்கள் பாடுபட்டு நாளுக்குநாள், நிமிடத்துக்கு நிமிடம்சொட்டுசொட்டாக சேர்த்துவைக்கும் தேனைத் திருடி உண்பதற்கு பலசத்துராதிகள் இருக்கிறார்கள். எங்கள் குலத்து வண்டினங்களே சில சமயம் எங்கள் நகரத்தின் மீது படையெடுத்து வந்து தேனை அபகரிக்க முயலுவதுண்டு. நாங்கள் விட்டுக்கொடுப்போமா? ஆகாயத்தில் கொடியயுத்தம் நடைபெறும். இருபகுதியிலும் ஆயிரக்கணக்கில் உயிர்ச்சேதம் உண்டாகும். ஈற்றில் எப்படியாவது எதிரிபடைகளை புறமுதுகிட்டு ஓடும்படி செய்துவிடுவோம். ஆனால் நீங்கள் சற்றேனும் யுத்த நீதிகளை பொருட்படுத்தாமல் நெருப்பு, புகைமுதலியவற்றால் எங்களைதுன்புறுத்தி கலைத்துவிட்டு எங்கள்தேனை கொள்ளையடிக்கும் போது நாங்கள் சக்தியற்றவர்களாகி விடுகிறோம். ஆனால் நீங்கள் செய்வது வெறும் கோழைத்தனம்.

உங்களைப் போல நாங்கள் குடும்பம் குடும்பமாக தனிக்குடித்தனம்நடத்துவதில்லை. எங்கள் நகரத்தில் வாழும் அத்தனை லட்சம் பேருமே ஒரு குடும்பத்தவர்கள். எல்லோருக்கும் தலைவியாயிருப்பவள் எங்கள் ராணி. அவள்தான் எங்கள் பராசக்தி தெய்வம். எங்கள் எல்லோரையும் படைத்து உருவாக்கினவள் அவளல்லவா? ஆமாம், எங்கள் நகரத்தில் வாழும் அத்தனை தேனீக்களும் அவள் இடும் முட்டைகளிலிருந்தே உற்பத்தியானவர்கள். அவளுக்கு எவ்வித தீங்கும் நேராமல் நாங்கள் பரமபந்தோபஸ்தாகஅவளை கட்டிக்காத்து வருகிறோம். அவள் கூட்டைவிட்டு வெளியே வருவதில்லை. நாங்கள் சேர்த்துக் கொடுக்கும் தேனை நிறையகுடித்துவிட்டு முட்டையிடுவதுதான் அவளுக்கு வேலை. அவளுக்குத் தொண்டு செய்வதற்கு சொந்த மெய்ப்பாதுகாவலர் இருக்கின்றனர். அவளிடும் முட்டைகளைக்கவனித்து போஷாக்கு அளிப்பதற்கு தாதிமார் இருக்கின்றனர். வேறுசிலருடைய வேலைவதைகளுக்குமெழுகுசெய்வது ஒன்றுதான். தொழிலாளர்களாகிய நாங்கள் மலர்களிலிருந்து கொண்டு போய்க் கொடுக்கும் மகரந்தப் பொடியிலிருந்து தான்இந்த

---

## கம்பர் கவிவிருந்து

(2ம் பக்கத்தொடர்ச்சி)

கள் பிள்ளைகள் என்றும் தந்தையின் நிலையில் கண்டிக்க வேண்டிய தருணம் கண்டிக்கவேண்டிய நற்தந்தை நீ என்றும் கூறுகிறான். உடனே விஸ்வாமித்ரமகரிஷி மிகவும் கோபக்காரரர் என்ற எண்ணம் உண்டாகின்றது. ஆஹா தண்டிக்கும்கால் கடும் கோபத்தால் கொடும் சாபம் போடுவாரோ என அஞ்சித் தாயும் நீ என்று கூடச் சொல்லாது, ''தனித்தாயும்'' நீ என்கிறான் தாயிலும் கணவனில்லாத இடத்து தனித்தாயாயுள்ளவளுடைய பொறுப்புக்கூடவல்லவா? தந்தையின் நிலையில் கண்டிப்பவளும், தாயின் நிலையில் அணைப்பவளும் அதாவது அடிக்கின்ற கையும் அணைக்கின்ற கையும் ஒன்றல்லவா; தந்தையடித்தால் நோக அடிப்பான், தாயடித்தால் மென்மையாக விழும். ஆகவே குழந்தைகள் தற்செயலாகத் தவறு செய்தாலும், தாயுள்ளத்தோடு தண்டிக்கவேண்டும் என்பதைக் குறிப்பாலுணர்த்துகின்றான் தசரதன்.

மைந்தர்கள் கிடைத்த சந்தோஷத்தில் விஸ்வாமித்ர கோபம் அடங்கிவிடுகின்றது. ''குழந்தைகளே! யாம் போய் யாகத்தை முடிப்போம்'' என்று புறப்படுகிறான். உடனே ஆயுதபாணியாக ராமன் புறப்படுகின்றான்.

குன்றம் போன்(று) உயர்
தோளில் கொற்றவில்
ஒன்று தாங்கினான்
உலகம் தாங்கினான்

வெற்றியைத் தரக்கூடிய உடைவாளை இடையிலேகட்டிக்கொண்டான், அம்புக்கூட்டை தோளிலே மாட்டிக்கொண்டான். எடுக்க எடுக்க குறையாதாம் அந்த அம்புக்கூடு.

''என்றும் தேய்வுறுத் தூணி'' என்கின்றான் ''வில் ஒன்று தாங்கினான்'' எதற்காக உலகம் தாங்கவே வில்லைத் தாங்கினானும். சத்தியத்தையும் தர்மத்தையும் காப்பாற்றவே குறிதவறா அம்புகளையும் எடுத்துக் கொண்டானும். தம்பியும் ராமனைப்போலவே வில்லும் வாளியும் எடுத்துப் புறப்படுகிறான் என்பதை எவ்வளவு சொற் செட்டோடு கவிஞன் ''அன்னதம்பியும்'' என்று கூறிவிடுகிறான் அந்தத் தம்பியும் தாமைமாக

---

# ஈழத் தமிழர் இறும்பூதெய்தத் தோன்றிய சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை

[நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்பணியினைத் தொடர்ந்திட மேலைப்புலோலி தந்த செந்தமிழ் வித்தகர் சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளையின் நினைவு தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை வெளிவருகிறது.]

'சொல்லவல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது'

எந்நாளும் நிலைநிற்கும் பொய்யாமொழிப் புலவரின் மணியான இக்குறளிற்கு இலக்கியமாக வாழ்ந்தவரே யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி சதாவதானம் ஸ்ரீலஸ்ரீ நா. கதிரவேற்பிள்ளையாவர். பெருஞ் சொற்கொண்டலின் நினைவுதினத்தில் அவருடைய செயற்கருஞ் செயலைப்போற்றுதல்மட்டும்விழுமிய பலனை நமக்குத் தரமாட்டாது.

'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற சம்பந்தமூர்த்திநாயனார் வரலாறு ஆகிய நூல்கள் ஆசிரியரின் கருத்துக்களை தெளிவாகத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றன. நைடதஆராய்ச்சியுரை பிள்ளையவர்களின் பரந்துசெறிந்த புலமையை வெளிப்படுத்துகிறது. நாவலர்பதிப்பித்த பேரகராதியின் சிறப்பை பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை ஆகியோர் பலப்பட புகழ்ந்துள்ளனர்.

சைவசித்தாந்த மகாசரபம், சதாவதானம் முதலிய சிறப்புப்பெயர்களைப் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்தார்.

பிள்ளையவர்களின் காலம் மதப் பூசல்வளர்ந்த காலம். இவர் சைவத்தின் பெருமையை வாதங்கள்வாயிலாக நாவன்மையால் நிலைநிறுத்திப் பெரும்புகழீட்டினார்.

எளிய, இனிய, தெள்ளிய தேன்தமிழ்ப் பேச்சாலும், எழுத்தாலும், செயலாலும் புதிய தமிழகம் படைத்த தமிழ்த் தென்றல் பேரறிஞர் திரு. வி. க. யாழ் பேச்சுக்களிலும் தமிழ்மணம் கமழும். கலைமகள் நடம்புரிவள. மாணாக்கர் ஐயப்பாடுகள் பல நீங்கும். கதிரைவேலரின் சொல்மாரி வெள்ளத்தில் இலக்கியம், இலக்கணம், தர்க்கம், சாத்திரம் முதலியன தேங்கும். அத்தேக்கம் மாணாக்கர்க்குக் கலைவிருந்தாகும். கதிரைவேலர் பலதிற வாதக் கடல் கண்டு திறந்து மாணாக்கர்க்கு நல்முறையில் பாடஞ் சொல்லல் உளங்கொண்ட வேளையில் எங்கள் துரதிர்ஷ்டம் அவரை நீலகிரிக்கு ஏகச் செய்தது. யான் உற்ற துயரை ஈண்டு எழுத்தால் எழுதுதல் இயலவில்லை. கதிரைவேற்பிள்ளைக்கு யான் பாட்டாற் கடிதம் எழுதுவேன். அவர் மகிழ்ந்து மகிழ்ந்து பாட்டிலேயே பதில் விடுத்து ஊக்கமூட்டுவார். எனக்குக் கல்விக்கண் திறந்த ஆசிரியர் நீலகிரியில் வெஞ்சுரத்தாற் பீடிக்கப்பட்டார்; தொடர்ந்து இறைவன் திருவடி நிழல் அடைந்தார் என்ற செய்தி சென்னைக்கு எட்டியது. யான் துன்பக் கடலில் வீழ்ந்தேன். அக்கடலினின்றும் ஏறப் பன்னெடு நாட்களாயின'' எனத் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. எழுதிய இவ்வாசகம் பிள்ளையவர்கள்மீது அவர் கொண்ட குருபக்தியையும் அன்பையும் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகிறது.

— திருமதி பூரணம் ஏனுதிநாதன் —

உயர்குறிக்கோளுடன் அவர் சைவப் பெருங்குடி மக்கள் எழுபிறப்பும் ஏமாப்படையும் வண்ணம் இனிய செழுமையான -நூல்களை ஆக்கித் தந்துள்ளார். இச்சான்றோரின் நூல்கள்எதிர்காலத்தை வளமாக்கும். இன்றைய மாணவ பரம்பரையினர் படித்து அக்கருத்துக்களால் சதாவதானியின் உருவத்தை உள்ளத்தில்தீட்டும் வண்ணம் செய்தல்வேண்டும். சிவ க்ஷேத்திராலய மகோற்சவ விளக்கம், ஏகாதசிப் புராண அரும்பதவுரை' திருஞான

இளம்பராயத்திலே இணையற்ற தொண்டாற்றிய மேலைப்புலோலி தந்த மேன்மைமிகு புதல்வர் நீண்ட நாள் வாழ்ந்து தமிழன்னையை மேலும் சிறப்பிக்காமை தமிழர் செய்த துர்அதிஷ்டமேயாகும். முப்பத்துமூன்று ஆண்டுகள் உயிர்வாழ்ந்த இப்பெரியார் கூரிய அறிவு' ஞாபகசக்தி, நாவன்மை, பாட்டு, சொல்லாற்றல், அஞ்சாநெஞ்சம் ஆகியவற்றால் மாயாவாத தும்சகோளரி, அத்துவித சித்தாந்த மதோத்தாரணர் நகர் தந்த இவ்வித்தகரின் மாணவர் எனும்போது ஈழத் தமிழர் உள்ளம் இறும்பூதெய்தாமல் இருக்குமா? தமிழ்த்தென்றலின் பெருமை பிள்ளையின் சிறப்பை பறைசாற்றிக்கொண்டிருக்கிறது.

''முதன் முதல் எனக்குக் கல்விக்கண் திறந்தவர் யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளை. ஓய்வு கிடைக்கும் எந்த நேரத்திலும் அவர் பாடஞ் சொல்வர். எவ்விடத்திலுஞ் சொல்வர். அவரது வாதப்

மேலைப் புலோலியில் தோன்றி நீலகிரியில் மறைந்த செந்தமிழ் வித்தகர் தம் சிறப்புப் பணிகளால் இன்றும் செந்தமிழர் உள்ளத்தில் நிறைந்து நிற்கிறார். அவரது நினைவு தினத்தில் அவர் நூல்களின் கருத்துக்களை மனதில் பதித்து அவர் பணி தொடர்வோம்.

---

## சௌமிய ஆண்டின் பலன் என்ன?

பிறக்கவிருக்கும் சௌமிய வருஷ பலன்களைக்கொண்ட திருக்கணித பஞ்சாங்கம் வரப்பெற்றோம். யாழ்ப்பாணம் மட்டுவில் சி. சுப்பிரமணிய ஐயரால் கணிக்கப்பெற்று 82-ம் வருடப்பிரசுரமாக இதுவெளிவந்துள்ளது. கிடைக்குமிடம்: 'திருவாசம்', மட்டுவில், சாவகச்சேரி.

விலை: ரூ. 2-00.

வழமையான அம்சங்களுடன்விவாகப் பொருத்த பதகம் இம்முறை புதிதாக இப்பஞ்சாங்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

### சௌமிய வருஷ பலன்

''இவ்வருடத்தில் தேசிய பொருளாதாரம் அதிகரித்தலும் பிறநாடுகளுடன் தொடர்புகளும், கடற்படை தரைப்படை முதலியவற்றில் அதிகசெலவுகளும், வரியேற்றமும், கடற்றொழில் விருத்தியும், பிரயாணத் துறைகளில் வருமான அதிகரிப்பும், ஸ்திரீகள் பலதுறைகளிலும் முன்னேற்றமடைதலும், உயர்கல்வி விருத்தி நடைப்படுதலும், தொழிற் கல்வி விருத்தியும் நன்மழையும், விவசாய முன்னேற்றமும், பிறப்புஅதிகரித்தலும், உணவுக்கஷ்டமும், விவாகரத்துக்களும், மனநோய் அதிகமாதலும், வைத்தியத் துறையில் முன்னேற்றமும், சமயத்துறைகளில் அதிக முரண்பாடுகளும், சமயத் தலைவர்களுக்குத் துன்பமும், அக்கினி பயமும், வர்த்தகர், பயிர்த்தொழிலாளர், அதிகாரிகள் முன்னேறுதலும், திடீர் மரணங்கள் ஏற்படுதலும், அதிசயிக்கும்படியான திருட்டுத்தனங்களும் உண்டாம்'' -என இவ்வருடப்பலன்பற்றி திருக்கணித பஞ்சாங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

-பூரணி-

---

## மகப்பேறு ....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொற்று நோய் அணுகாமல் தடுத்து, பக்கவாத நோயை பக்கத்தில் வராமல் விரட்டுகிறது. பல ஆண்டுகள் தங்கள் காதல் வசீகர சக்தி அதிகரித்து இருப்பதாகச் ''சத்தியம்'' செய்கிறார்கள். அதுவரை மகப்பேறு கிடைக்கப் பெறாத பெண்கள், இத்தண்ணீரை அருந்திய பின்னர் ''தாய்மை'' எய்தியிருக்கிறார்கள்.

ஒரு பெண்ணுக்கு நீண்ட நாளாக சரும வியாதி இருந்தது; அவளுக்கு குழந்தையும் பிறக்கவில்லை. இத்தண்ணீரை அருந்தி வந்தார். ஓராண்டில் சரும நோய் மறைந்தது. என்ன ஆச்சரியம். அதுவரை மலடி என்றே கருதப்பட்டு வந்த அப்பெண் ஓர் அழகிய குழந்தையைப் பெற்றெடுத்தாள். மகப்பேறு தொடர்பான கோளாறுகளை இத்தண்ணீர் குணப்படுத்துகிறது என்பதனை டாக்டர் ரூபர்ட் பேரர் உறுதி செய்தார். இத்தண்ணீரில் பலவித உலோகச் சத்து குறைந்த அளவில் இருக்கின்றன. இது உடலில் பலவித மாறுதல்களைச் செய்கிறது என்று இந்த டாக்டர் கூறியிருக்கிறார். அதிசய ஊற்றுத் தண்ணீரை இன்னும் சோதனை செய்வதில் டாக்டர்கள் முனைந்துள்ளனர்.

---

## தேசிய.......

(2-ம்பக்கத்தொடர்ச்சி)

எனவே, முன்னே கூறியபடி கலைஞர்களின் ஆக்கசக்தியை மத்திய அரசினர் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருமையுணர்வோடு பாடுபடும் பண்பட்ட கலைக் குழுக்களின் பரிமாற்றம் மாநிலங்களுக்கிடையே சீராக நடைபெறவேண்டும். காந்தியடிகள் நமக்குக் கற்றுத்தந்த சீரிய லட்சியங்களை மாநிலங்கள் நேர்மையோடு பின்பற்ற வேண்டும். இதற்கெல்லாம் மத்திய அரசினர் வழிகோல வேண்டும். உணர்வில் ஒருமைப்பாடு தோன்றுவதற்கு இதுவே கலைஞன் என்ற முறையில் நான்கூறும் யோசனை.

---

## காலமெல்லாம்கல்லூரிக்காக வாழ்ந்த அதிபர்

கல்விச்செல்வம் வளம் பெற்று விளங்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரிகளுள் ஒன்றுதான் யாழ். செங்குந்த இந்துக்கல்லூரி. ஒரு சில மாணவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்விக்கூடம்இன்று 'கல்லூரி' என்னும் மெருகு பெற்று, பல கட்டிடங் கொண்டு தலை நிமிர்ந்து நிற்

சந்திரன் போல் சந்தனப் பொட்டு இலங்கும். ஆடம்பரத்தை வெறுத்துஒதுக்கும் அவர், வெள்ளை வெளேரென்ற தேசியஉடையையே என்றும் அணிந்திருப்பார். நடையிலே மிடுக்கு, சொல்லிலே இனிமை, பார்வையில் கனிவு, செயலில் நேர்மை, செருக்கின்மை ஆகியவை கொண்ட உத்தமசீலர் அதிபர் கணபதிப்பிள்ளை அவர்

---

# எண்கள் செய்யும் விந்தைகள்

## எண்களை ஆள்வதன் மூலம் நாம் எத்தனையோ சாதிக்கலாம்

வானத்தில் தலையாய கோள்கள் ஒன்பது. பூமண்டலத்தையும் ஒரு கோள் என்று எடுத்தல்வேண்டு [illegible] விஞ்ஞானிகளின் [illegible]. அப்படியாகச் சேர்த்தால் பூமி 10வது கோள் என்று பெயர்படும்.

எண், தேதியைக்கூட்டின் 2 7=9 என்பதாம். கூட்டு எண் முழு எண்களையும் கூட்டின் 2 7 4 1 9 2 4 = 29. 2+9=11. 1+1=2என்பதாம். எனவே இந்நபரின் பிறப்பு எண் 9, கூட்டு எண் 2 என்பதாம்.

ஸ்தானத்திற்கு இட்டுச் சென்றது. ஆனால் 8 என்ற எண் இவர் ஒரு கடும் உழைப்பாளி என்பதைக் காட்டுகின்றது.

ஆயினும் இத்தலைவர், வாழ்க்கையில் பல சிக்கல்களையும் பின் கொடூர மர

---

வரிவிளம்பரம்!

VACANCY — SALESMAN

Wanted a travelling Sales man for distribution of Confectionary in Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஷிக்கு அளிப்பதற்கு தாதிமார் இருக்கின்றனர். வேறுசிலருடைய வேலைவ தைகளுக்குமெழுகுசெய்வது ஒன்றுதான். தொழிலாளர் களாகிய நாங்கள் மலர்களி லிருந்து கொண்டு போய்க் கொடுக்கும் மகரந்தப் பொடியிலிருந்து தான்இந்த மெழுகும் தயாரிக்கப்படுகி றது. இன்னும் சிலர் ஒரு வேலையும் செய்யாதவர்கள் போல நகரத்துக்குள்ளேயே இருப்பார்கள். இவர்கள் உண்மையில் சோம்பேறிகள் அல்ல அவர்கள்தான் நமது பாதுகாப்புப் பட்டாளம். வேறு சிலருக்கு வேலை கொடிய வெய்யில் காலங்க ளில் நகரவாசலில் இருந்து கொண்டு தங்கள் இறகுகளை வேகமாக ஆட்டி நகருக்குள் சுத்தமான காற்றையும் குளிர்மையையும் உண்டாக் குதல். ஆனால் பெரும்பா லான என்போன்றவர்க ளுக்கு வேலை தேனும் மகரந் தப் பொடியும் சேர்ப்பது தான்.

இப்படியே நகரிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு வேலை கொடுக்கப் பட்டிருக்கிறது. ஒருவராவது தமது கடமையினின் றும் பிறழ்வதில்லை. வதை களில் நாங்கள் சேகரித்து வைக்கும் தேனை எல்லோரும் சமமாகப் பங்கிட்டுப்பகிர்ந்து கொள்வோம். எங்கள்வேலை கள் வெவ்வேருயிருந்த போதிலும் எமக்குள்ளே பெரியவர்- சிறியவர், மேல் சாதி- கீழ்சாதி என்றவேற்று மைகள் கிடையாது. நீங்கள் எப்பொழுது பார்த்தாலும் வாய் ஓயாமல் சமதர்மம், அபேதவாதம், சமத்துவம்.

அம்புகளையும் எடுத்துக் கொண்டானும். தம்பியும் ராமனைப்போலவே வில்லும் வாளியும் எடுத்துப் புறப் படுகிருன் என்பதை எவ்வ ளவு சொற் செட்டோடு கவிஞன் ''**அன்னதம்பியும்**'' என்று கூறிவிடுகிருன் அந் தத் தம்பியும் தானுமாக விடைபெற்றுக்கொள்ளுகின் ருன். சக்கரவர்த்தி எப்ப டித்தான் சகித்துக்கொள் கின்ருனே, ராமலட்சுமண ரின் மனோநிலைதான் எப்படி,

அன்னதம்பியும்
தானும், ஐயனும்
மன்னன் இன்னுயிர்
வழிக்கொண்டாலெனச்
சொன்ன மாதவற்
ருெடர்ந்த சாயைபோல்
பொன்னின் மாநகர்ப்
புரிசை நீங்கினுன்.

ராமன் விடைபெறும்போது சக்கரவர்த்திக்கு எப்படி இருந்தது, அவரது இனிய உயிரே உடம்பிலிருந்து வெளிப்பட்டு எதிரே நின்று நான் போய்வருகின்றேன் என்று சொல்லிப் பயணப் பட்டாற்போல்இருந்ததாம்.

''மன்னன் இன்னுயிர் வழிக் கொண்டாலென்'' தந்தையின் துன்பத்தைப் பாராமல் விஸ்வாமித்திரனை நிழல் போல் தொடருகின் ருர்களாம். அப்படி அவர் கள் கோட்டை வாசலை நோக்கிப் போகின்ருர்கள்.

(தொடரும்)

சகோதரத்துவம் என்றெல் லாம் கூக்குரல் போடுகிறீர் களே! எங்களைப்பார்த்தா வது பழகலாமே!

ரொம்ப நேரமாகிவிட் டது. அடுத்தமுறை வருகி றேன், மீதிக்கதைசொல்ல.

(தொடரும்)

...னைத்தில் உள்ள கல்லூரி களுள் ஒன்றுதான் யாழ். செங்குந்த இந்துக்கல்லூரி. ஒரு சில மாணவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்விக்கூடம்இன்று 'கல் லூரி' என்னும் மெருகு பெற்று, பல கட்டிடங் கொண்டு தலை நிமிர்ந்து நிற் கிறது. இக்கல்லூரிக்குமெரு கேற்றி-புகழ் தேடிக்கொடுத் தவர்தான், மாணவர், ஆசி ரியர், பெற்ரோர் ஆகியவர் களின் இதயங்களிலே சுடர் விடும், அமரர் திரு.நா.கண பதிப்பிள்ளை. தன் உடல், பொருள், ஆவி அத்தனையை யும் கல்லூரியின் வளர்ச் சிக்கே அர்ப்பணித்து வாழ்ந்த அதிபர், 1944-ம் ஆண்டுதொடக்கம் 1968-ம் ஆண்டுவரை 24 ஆண்டுகள் இக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி, அழியாப் புகழைத் தமக்கும் கல்லூ ரிக்கும் தேடிக்கொண் டார். இத்தகைய அதிபர வர்கள் நம்மையெல் லாம் மீளாத்துயரில்ஆழ்த்தி விட்டு இவ்வாண்டு மாசித் திங்கள் 24 ம் திகதி இறைவ னடி சேர்ந்தார். அறிவுக் கும், அன்புக்கும், பண்புக் கும், பக்திக்கும்ஓர் எடுத்துக் காட்டாக விளங்கிய அதிப ரின் உள்ளம் அவர் முகத் தில் பளிச்சிட்டதை அவரு டன் பழகிய யாவரும் அறி வர். ஆம், சேவை உணர்ச்சி மிக்க அவரது வெள்ளையுள் ளத்தை அவரின் கள்ளங் கபடமற்ற முகமே படம் பிடித்துக்காட்டும். அவரின் முகத்தில் என்றும் அறிவுச் சுடர் இலங்குவதைக்காண லாம். நெற்றியிலே பட்டை யாக திருநீறு அணிந்திருப் பார். அதற்குமேல் பூரண

...ரென்ற தேசியஉடையையே என்றும் அணிந்திருப்பார். நடையிலே மிடுக்கு, சொல் லிலேஇனிமை, பார்வையில் கனிவு, செயலில் நேர்மை, செருக்கின்மை இத்தனையும் கொண்ட உத்தமசீலர் அதி பர் கணபதிப்பிள்ளை அவர் கள்.

மாணவர்கள் யாரும் அதி படுக்குக் கோபம்வரக்கூடி தவறு செய்துவிட்டால், கோபத்தின் உந்தலினுல் அவர்களைத் தண்டித்துவிடு வார். ஆனால் மறுநிமிடம் அவரின் கோபம் 'சூரியனைக் கண்ட பனிபோல' மறைந்து விடும். தண்டனை பெற்ற மாணவரைத் தனிமையில் அழைத்து ஆறுதல்வார்த் தையுடன், அறிவுரைகூறும் போது, உருகாத இதயமும் உருகும். என்னே அதிபரின் பண்பு!

இன்று அநேக பாடசாலை களில் புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்குத் தகுதிகாண் பரீட்சை வைப் பது வழக்கம். இதைமுற் ருக வெறுப்பவர் எமது அதிபர். இதற்குரிய கார ணத்தை அவர் சொல்லக் கேட்கும்பொழுது வியப்பாக இருக்கும். ''தகுதிகாண் பரீட்சையில், தகுதியுள்ள மாணவர்களைச் சேர்த்துக் கொண்டால் தகுதியில்லாத பிள்ளைகள் எழுத்தறிவில் லாது, காலமெல்லாம், கண் ணிருந்தும் குருடர்களாக வல்லவா வாழவேண்டும். முன்பு தகுதியற்று இருக் கும் மாணவர்கள் பின்பு தகுதியுள்ளவர்களாக ஆவார்கள் என்று ஏன் சொல்ல முடியாது? திறமை யற்ற மாணவர்களையும் திறமையுள்ளவர்களாக ஆக் குவதுதானே ஆசிரியர்களின் கடமை'' என்பார்.

தமது பாடசாலைக்கு அதி பர் செய்த சேவைகள் அள விடற்கரியன. சுற்றுடலில் வாழ்ந்த வறிய பிள்ளைகளுக் குக் கல்விச் செல்வம் வழங்க அவர்களைத் தன் இரு கரங் களை நீட்டி அழைத்தார். விஞ்ஞானக் கல்வியில் ஆர் வம் காட்டும் பிள்ளைகளின் நலன் கருதி, பல வசதிகள் கொண்ட ஒரு விஞ்ஞான ஆய்வு கூடத்தையும், கலைப் பிரிவு மாணவர்கள் உயர் கல்வி பெற கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பை யும் அதிபர் கணபதிப்பிள்ளை அமைத்து உதவினுர். அதி பரின் இவ்வரிய சேவையி ஞல் மாணவர்கள் பல்கிப் பெருகினர். இதனுல் பாட சாலைக் கட்டிடங்களும் பல் கிப்பெருகியது. அவரின் முயற்சியைப் பிரதிபலித்த வாறு இன்று உருவாகிக் கொண்டிருக்கிறது, ஒருமேல் மாடிக் கட்டடம். இக்கட்ட டம் இன்று பூர்த்தியாகும் நிலையில் இருக்கிறது. இக்கட் டடம் பூர்த்தியாகிவிட்டால் இன்னும் எவ்வளவோ மாணவர்கள் கல்வி கற்க முடியும் என்பது அதிபரின் நம்பிக்கை. இத்தகைய பெருமகன், இன் நம்மி டையேயிருந்து பிரிந்து, திரும்பிவர முடியாத இடத் திற்குச் சென்றுவிட்டார்.

[அன்னுரின் அந்தியேஷ்டி நடைபெறும் இன்று, அவ ரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.]


# தம்பி அன் கோ.,

284, K K S ரோட், வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம்

நிரந்தர சேமிப்புக்கு கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் 8 சத வீதம் |
| 2 வருடத்திற்கு | — | வருடம் 9 சத வீதம் |
| 3 வருடத்திற்கு | — | வருடம் 10 சத வீதம் |

மேற்குறித்த நிரந்தர சேமிப்பை எப்பொழுதும் 30 நாள் அறிவித்தலில் வருடம் 8 சத வீத வட்டியுடன் எடுக்கலாம்.

இந்த மாதிரி 10 விளம்பரம் தருபவர்க்கு ஒரு கவிபி ... இனமாகக் கொடுக்கப்படும்.


**வா**னத்தில் தலையாய கோள்கள் ஒன்பது. பூமண் டலத்தையும் ஒரு கோள் என்று எடுத்தல்வேண்டு மென்பது விஞ்ஞானிகளின் கோரிக்கை. அப்படியாகச் சேர்த்தால் பூமி 10வது கோள் என்று பெயர்படும். ஒன்றும் சைவரும் சேர்ந்த எண் பத்து. 1 + 0 = 1. எனவே பத்து என்ற எண் குறிப்பதும், அதன் பெறுமதி யும் 1 ஆகும். பூமியைக் கோள் என்ற வரிசையில் சேர்க்கமுடியாது. முக்கிய கோள்கள் ஒன்பதேயாகும்.

உலகமக்களிடை 9 எண் கள்தான் நடைமுறையில் உண்டு. ஆங்கிலப்பாஷை உலகத்தில் கூடுதலான மக் களால் பேசப்பட்டுவரும் பாஷையாகும். ஆகையால் ஆங்கிலத்தேதியிலுள்ள எண் கள் பல அற்புதங்களைப் புலப்படுத்துகின்றன.

எண்கள் ஒன்பதும் முறையே ஒன்பது கோள்க ளையும்குறிப்பனவாயுள்ளன. 1- சூரியன். 2- சந்திரன். 3- வியாழன். 4- இராகு. 5- புதன். 6- வெள்ளி. 7- கேது. 8- சனி. 9- செவ் வாய். எண்வரிசையில் மத் தியிலுள்ள எண் 5. இதன திபர் புதன். மின்சக்தி கொண்ட இவ்வெண், பல அற்புதங்களைத் தன்னுள் ளடக்கிநிற்கும்.

ஜெனன ஜாதகத்தில் ஐந்தாம் வீடு விவேகத் தைக் குறிக்கும். எனவே 5 என்ற எண்ணிற்கும், புத னுக்கும் உள்ள ஈடுபாடு மிகப் பொருத்தமானதே யாகும்.

எண்ணின் இயக்கத்தினுல் தான் உலகமே இயங்குகின்ற தெனலாம். எண்கள்சதா ஒலி த்துக்கொண்டிருக்கின்றன. எண்ணின் அற்புதசக்தியைக் கொண்டு, ஒருவர்வாழ்க்கை வரலாற்றை, பலாபலனைத் தத்ரூபமாகக் கூறிவிடலாம். உதாரணமாக27-4-1924ல் பிறந்த ஒருவரின் பிறப்பு எண், தேதியைக்கூட்டின் 2 7=9 என்பதாம். கூட்டு எண் மூழு எண்களையும் கூட்டின் 2 7 4 1 9 2 4 = 29. 2+9=11. 1+1=2என்பதாம். எனவே இந்நபரின் பிறப்பு எண் 9, கூட்டு எண் 2 என்பதாம். இவருக்குத் தொழில் நிர்வா கம் 9 என்ற எண்ணினுலும் முக்கிய வாழ்க்கைச் சக்கரம் 2 என்ற எண்ணினுலும் இயக்கம்பெறுவதைக் காண முடியும்.

விதியை மதியால் ஓரளவு ஜெயிக்கமுடியும். கிரகசாந்தி என்பது இப்பாதையில் ஒரு படி. எண்கள் இவ்விஷயத் தில் முக்கிய பங்குகொள் கின்றன. பிறப்பு எண் கூட்டு எண் ஆகிய இரு எண்களுக்கும் ஒற்றுமை காணப்படல்வேண்டும். இவ் வமைவு இல்லையேல், அவர் ஒரு நாடாள்பவராயிருப்பி னும், சதாசஞ்சலம்குடி கொண்டவராகத்தானிருப் பார். இப்பாதிப்புடன் அன் னரது பெயர் எண்ணும் ஒருமைப்பாடு காணுதுறின், தேடிய குபேரசம்பத்தும் பயனுடைத்தாகமாட்டாது. ஈற்றில் வாழ்வும் திடீர்முடி வுதான்.

ஒருவரின்பிறப்புஎண் இவற் றில் உள்ள பாதிப்பை, அன்னுரின் பெயரில் சிறு மாற்றம் செய்வதால்தவிர்த் துக்கொள்ளமுடியும் என்று நிச்சயமாகச் சொல்லலாம். அதிர்ஷ்ட விஞ்ஞான நூல்களில் கொடுக் கப்பட்டிருக்கும் பெயர் மாற்றுமுறையைப் பிழை யான வகையில் கையாண்டு, அதனுல்மேலும் கஷ்டநஷ்ட மடைந்த பலரை நாம் காணமுடியும். சரியான பெயர் மாற்றுமுறையைக் கையாண்டபலவியாபாரிகள் தங்களது மந்த நிலையான வியாபாரம் பன்மடங்கு இலாபகரமாகப்பெருகக் கண்டுள்ளனர். பலர் தமது வாழ்வு வளமுடைத்தாய், சந்தோஷகரமாய் மிளிரக் கண்டனர்.

இலங்கையின் காலஞ் சென்ற பிரதமர் திரு.எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயகாவின் வாழ்க்கையைக் கவனிப்போம். இவர் 8-1-1889-ல் பிறந்தார்.

பிறப்பு எண்-8.

கூட்டு எண் - 8 1 1 8 8 9 - 35.3 5 - 8.

எட்டு எண்ணிற்கு அதிபதி சனிபகவான்.

ஒருமித்த எட்டு எண்ணின் ஒலி இவரை நாடாளும் ஸ்தானத்திற்கு இட்டுச் சென்றது. ஆனால் 8 என்ற எண் இவர் ஒரு கடும் உழை ப்பாளி என்பதைக் காட்டு கின்றது.

ஆயினும் இத்தலைவர், வாழ்க்கையில் பல சிக்கல் களையும் பின் கொடூர மர ணத்தையும் எதிர் நோக்கி னர். இதற்குரிய காரணம் பெரியாரின் பெயரிலுள்ள ஒற்றுமைக்குறைவேயாகும்.

இப்பெரியாரின் பெயர் மதிப்பு எண்ணைக் கவனிப் போம்.

S. W. R. D. Bandara
3 6 2 4 2154121
nayake.
511525 — -50-5 0-5

எனவே பெயர் மதிப்பு எண் 5 என்பதாம். யோகத் தைக் கொடுக்கும் துறையில்



8-6-9 (சனி - வெள்ளி- செவ்வாய்) ஒரு கூட்டைச் சேர்ந்தவை. ஐந்து என்ற எண்ணிற்கும் 8 என்ற எண் ணிற்கும் அமைவு இல்லை. மன நிம்மதிக் குறைவு திடீர் மரணம் இவற்றை இவ் வெண்களின் தொடர் காட் டும்.

திரு. பண்டாரநாயக்கா அவர்கள், கொடியார் ஒரு வரின் துப்பாக்கிவேட்டுக்கு இலக்காகி 26-9-1959 காலை 8 மணிக்கு இவ்வுலக வாழ்வு நீத்தார். அத்தேதியின் பிற ப்பு எண் 2 6-8. கூட்டு எண்- 2 6 9 1 9 5 9 -41. 4 1-5.

ஐந்து என்ற எண் சம்பந் தப்பட்ட நாட்கள் பெரி யார் வாழ்வில் பாதிப்பைத் தான் கொடுத்தன.

யோகத்தைக் கொடுக்கும் வகையில் 5-4-1 (புதன்- இராகு-சூரியன்) கூட்டாக இயங்கும். திரு. பண்டார நாயக்கா அவர்கள் 12-4-1956-ல் பிரதமராகப் பதவியேற்ருர். அத்தேதி யின் பிறப்பு எண் 3, கூட்டு எண் 1. ஐந்தின் கூட்டைச் சேர்ந்த 1 என்ற எண் பெரியாருக்கு அவ்வளவு முன்னேற்ற நிலைக்கு வழி கோலவில்லை. இலங்கையின் சுதந்திரத்தேதி 4-2-1948. பிறப்பு எண் 4 கூட்டுஎண் 1. நாலு, ஒன்று என்ற எண்கள் 5 ன் கூட்டைச் சேர்ந்த எண் களே. இராசயோகமிருந் தும், அதை அனுபவிக்கும் பலன், பெரியாருக்கு மறுக் கப்பட்டாகிவிட்டது, ஒரு குறிப்பிடக்கூடிய அம்சமா கும்.

... இதுவே கலைஞன் என்ற முறையில் நான்கூறும் யோசனை.


## வரிவிளம்பரம்

**VACANCY — SALESMAN**

Wanted a travelling Salesman for distribution of Confectionary in Jaffna peninsula. Conveyance will be provided. Only those willing to furnish cash security in a sum of Rs. 5000/ need apply. Experience essential. Apply on or befor 31st March, 1969, to Labour & Allied Consultant Service. Mackinnon's Building, (2nd Floor) York Street, Colombo- 1. 772

நம்பிக்கையான மலையாள மாயாஜாலவசீகர பரிகாரத் தைக்கொண்டு, காதல் பிரச்னைகள் 3 நாட்களில் பரிபூரணமாகத்தீர்த்துவைக் கப்படும். இருவர் பெயர்க ளையும் எழுத இலவச விப ரங்களுக்கு எழுதுங்கள். நீலன் கந்தசாமி, குப்தி வித் யாதணய. நிட்டம்புவ. 762

### தேவை

ரூபாய் 10,000/ முதலீடு செய்யக்கூடிய 10 பங்காளர் கள் தேவை. ஹோட்டல், கராஜ், பிஸ் ஏஜன்சி முதலியனவற்றிற்கு நிறுவப் பட்ட ஸ்தாபனம். விண் ணப்பிக்கவும்: அதிபர், யாழ் கல்லூரி, 29, பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம் 784

குறைந்தவட்டிக்கு ரூபாய் 30,000/ தேவை. ஒரு லட் சம் பெறுமதியான வீடு பொறுப்பாக கொடுக்கப் படும். சோ. கனகசபை, 29, பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம். 783

### விற்பனைக்கு

காணி

புங்கங்குளம் - ஈச்ச மொட்டை வீதி சந்திக்கரு கில் பஸ் பாதையுடன், சுண்டிக்குளி ஒரு மைலுக் குள் நாலு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க; H. சத்தியநாதன், 31, செம்மணிவீதி, நல்லூர். 766

காங்கேசன்துறை வீதியில் பொலிஸ் ஸ்டேசனுக்கு அரு காமையில் உள்ள 2 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. வீடு, கடை கட்ட ஏற்றது. விபரங்களுக்கு: த. அ. செல்வராசா, சுன்னு கம் கிழக்கு, சுன்னுகம். 780



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# தேசிய ஒருமைப்பாட்டுக்கு சில யோசனைகள்

இலங்கை- இந்தியா போன்ற சுதந்திரமடைந்த நாடுகளில் இன்னும் ஜனநாயக ஆட்சிமுறை பரீட்சார்த்த நிலையிலேயே இருக்கிறது. இந்தியாவில் சமஷ்டி ஆட்சி அமைப்பும் இலங்கையில் ஒற்றையாட்சி அமைப்பும் உள்ளது. இந்தியாவில் சமஷ்டி ஆட்சி அமைப்புமுறை இருப்பினும் மத்திய அரசாங்கத்திடமே அதிகாரங்கள் குவிந்திருக்கின்றன .இதனுல் அங்கு பல புதிய புதிய பிரச்னைகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்குமிடையில் நெருங்கிய ஒத்துழைப்பு ,இருக்க வேண்டுமென்பதை மத்தியில் ஆட்சி பீடத்திலுள்ளவர்கள் உணர்ந்துள்ளனர். மத்திய மாநில அரசுகளுக்கிடையில் நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கும் வகுப்பு சௌஜன்யத்தை ஏற்படுத்தி தேசிய ஒருமைப்பாட்டையும் தேசிய ஐக்கியத்தையும் நிலைநாட்டுவதற்கும் வழி முறைகளை ஆராயத் தொடங்கியுள்ளனர். மாநிலங்களுக்குள் சுயாட்சி உரிமை வேண்டுமென்ற கோரிக்கை அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது.

இலங்கையில், ஒற்றையாட்சி அமைப்புமுறை இருப்பினும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. ஒரே இடத்தில் அதிகாரங்கள் குவிந்திருப்பது நாட்டின் முன்னேற்றத்துக்கு இடையூறு என்பதை எல்லோருமே ஒப்புக் கொள்கிறார்கள். ஆயினும் நிர்வாகத்தைப் பரித்து அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கு அரசியல் ஆதிக்கப் போட்டியும் வகுப்புவாதப் பிரசாரமும் தடையாக இருக்கிறது.

இன்று இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி அவசிய தேவையாக இருப்பது தேசிய ஒருமைப்பாடுதான். 'வகுப்பு சௌஜன்யத்தை ஏற்படுத்துவதில் பெரும்பான்மைச் சமூகத்திற்கு அதிக பொறுப்பு உண்டு' என்று சில தினங்களுக்குமுன்னர் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இந்திய தேசிய ஒருமைப்பாட்டுச் சபைக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருந்தார். காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் நேருவும் சிறுபான்மையினரின் வகுப்பு வாதத்தை விடப் பெரும்பான்மையினரின் வகுப்பு வாதம் ஆபத்தானது என்று சரியாகச் சுட்டிக் காட்டியிருந்தார்.

எமது நாட்டின் அரசியல் அமைப்பு அமைந்த முறையோ என்னவோ வகுப்பு வாதத்தைக் கிளப்பி சுலபமாக அரசியல் ஆதிக்கப் போட்டியில் வெற்றியீட்டிடவிலாமென்ற நம்பிக்கை இங்கு அரசியல் வாதிகளுக்கிடையில் அதிகரித்து வருகிறது. அதுவும் தேர்தல் காலம் வருகிறதென்றால் வகுப்புவாதத்தை எப்படியும் கிளப்பி விடுவதற்கு பலரும் காத்திருப்பார்கள். அரசியல் வாதிகள் மட்டுமல்ல பொறுப்புள்ள சில பத்திரிகைகளும்கூட இந்தப் பணியில் இறங்குவதற்குத் தயங்குவதில்லை.

எந்த அரசாங்கம் ஆட்சி பீடத்திலிருந்தாலும் அவை எப்படித்தான் ஆட்சிபீடத்துக்கு வந்தாலும் நாட்டின் அமைதியையும் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு தேசிய ஐக்கியத்தையும் வகுப்பு ஒற்றுமையையும் நிலைநாட்டுவதற்கு சில உறுதியான, நிரந்தரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(1) இந்நாட்டில் வாழும் சகல இன, மத மக்களினதும் கல்விமான்கள், அறிஞர்கள், அரசாங்க உயர்தர உத்தியோகத்தர்கள், அரசியல், மத தலைவர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு தேசீய ஒருமைப்பாட்டுச் சபையொன்றை நிறுவ வேண்டும். இந்தச் சபை மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூடி நாட்டில் அவ்வப்போது நிகழும் சம்பவங்களையும் வகுப்பு, இன, மதப் பிரசாரங்களையும் ஆராய்ந்து பொய்ப் பிரசாரங்களை நீக்கி தேசீய ஐக்கியத்தை நிலைநாட்டுவதற்கான யோசனைகளை அரசாங்கத்துக்குத் தெரிவிக்கவேண்டும். இந்தச் சபைக்குப் பிரதம மந்திரியே தலைவராக இருப்பது பொருத்தம்.

(2) பத்திரிகை ஆசிரியர்கள், நிருபர்கள் அடிக்கடி நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று அவ்வப்பகுதி மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அங்குள்ள நிலைமைகளை அறிந்து கொள்ள வசதி செய்து கொடுக்கப்படவேண்டும். சிங்கள, தமிழ், ஆங்கில பத்திரிகைகளின் ஆசிரியர்களும் உதவி ஆசிரியர்களும் நிருபர்களும் இவ்விதம் ஒவ்வொரு இடத்துக்கும் நேரில் சென்று மக்களுடன் தொடர்பு கொண்டு, நேரில் நிலைமையை அறிந்துகொள்ள முடியுமானுல் 'தி. மு. க.' 'நாம் தமிழர் இயக்கம்' என்ற பொய்ப் பிரசாரங்களுக்கும் வீண் பீதியை ஏற்படுத்துவதற்கும் இடமேற்படாது.

(3) தென்னிலங்கையிலுள்ள பாடசாலைகள், கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகள், கல்லூரிகள் ஆகியவைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் தென்னிலங்கைக்கும் உயர் வகுப்பு மாணவர்களுடன் அடிக்கடி அதாவது ஒவ்வொரு தவணை விடுமுறைகாலத்திலும்சென்றுசிலநாட்களாவது தங்கியிருப்பதற்கும், பரஸ்பரம் மனம்விட்டுப் பேசுவதற்கும் வழிவகை செய்யப்பட வேண்டும். இளைஞர்கள்தான் நாளைய தலைவர்கள். அவர்களுக்கிடையில் நல்லெண்ணமும் நட்புறவும் வளர வழிசெய்தால் இன்றைய வகுப்பு, இன வேறுபாடு என்ற சாபத்தீடு இன்றைய சந்ததியுடன் முடிந்துவிடும். இதை முன்வந்து செய்வார்களா? பூனைக்கு மணி கட்டுவது யார்?

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 13-ம் திகதி புதன்கிழமை.

திதி: அட்டமி இரவு 7-31 மேல் நவமி.

நட்சத்திரம்: திருவாதிரை இரவு 10-36 மேல் புனர்பூசம்.

ராகுகாலம்: 12-15 – 1-45

சுபநேரம்: 4-45 – 6-15

இன்று பிறந்தவர்களுக்கு: செய்தொழில் விருத்தியும், சென்ற இடம் சிறப்பும், யந்திர வளர்ச்சியும், வாகன விருத்தியும், சிலர் இரத்த அழுத்த நோயினுல் பாதிக்கப்படலாம். சிறுவர் கல்வி சிறப்பைத்தரும் நல்லாண்டாகும்.

## 'தமிழுலகத்துக்கு ஒரு புது ஒளி'

யாழ்ப்பாணம், புதன்

''தமிழ்மொழிவளர்ச்சியில் காலத்துக்குக் காலம் அறிஞர்கள் தோன்றி அதை வளப்படுத்தியுள்ளார்கள். ஈழத்தில் நாவலர் தோன்றி தமிழ் நடைக்கு புத்துயிர் கொடுத்தார். இதே போன்று நம்காலத்தில் அறிஞர் அண்ணு, கல்கி - திரு. ரா. பி. சேதுப்பிள்ளை இருவரது நடையும் கலந்த ஒரு விறுவிறுப்புக் கொண்ட தமிழ் நடையைத் தந்தார் அவர் ஒரு புது ஒளியைத் தமிழுக்குத் தந்துள்ளார். அண்ணு தமிழ் நடையில்ஏற்படுத்திய புது விறுவிறுப்பு தொடர்ந்து வாழும்.''

இவ்வாறு இரசிகமணி கனகசெந்திநாதன் 'யாழ்வாண'ஞல் தொகுத்து வெளியிடப்பட்டஅறிஞர் அண்ணு கவிதாஞ்சலி நூல் வெளியீட்டுவிழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

திரு.செந்திநாதன்மேலும் பேசுகையில், பத்திரிகைகளும் தமிழ் வளர்ச்சிக்கு உதவமுன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

திரு. வி. கந்தவனம்பேசுகையில், அண்ணு ஓர் ஆறு போன்று மொழியையும் தமிழ் சமூகத்தையும் வளப்படுத்தியவர் என்ருர்.

திரு. புதுமைலோலன் பேசுகையில் அறிஞர் அண்ணுதமிழரால்ஆட்சிநடத்தமுடியும் என்பதை உணர்த்தியவரென்றும் அரசியலுக்கு அப்பால் தமிழர்கள் எல்லோரும் சேர்ந்து தமிழினம் தலைநிமிர்ந்து வாழ ஏதேனும் உருப்படியான ஒன்றைச் செய்தாக வேண்டும் என வேண்டு கோள் விடுத்தார்.

திரு. கிருஷ்ணசாமி முதற் பிரதியைப் பெற்ருர்.

திரு. கனகசுந்தரம் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினுர்.

யாழ்வாணன் தமது நன்றியுரையில் ஈழத்துக் கவிஞர்கள் இயற்றிய கவிதைகள் அண்ணுவுக்கு சிறந்த அஞ்சலியாக அமைந்துள்ளது என்ருர்.

(கா. நி)

## தற்காலிக யாஜிஸ்திரேட்

யாழ்ப்பாணம், புதன்

முடிக்குரிய வழக்கறிஞரான திரு. எஸ். கனகரத்தினம் நேற்றிலிருந்து இம் மாதம் 30-ம் திகதிவரை யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை நீதிமன்றங்களின் தற்காலிக மாஜிஸ்டிரேட்டாககடமை யாற்றுகின்ருர்.

(கா. நி)

## தமிழ் நாட்டுச் செய்திகள்

மார்ச் 25

சென்னை,

பெருந்துறைத் தொகுதியில் நடக்கவிருக்கும் இடைத் தேர்தலில் சோஷலிஸ்ட் கட்சி வேட்பாளருக்கு திராவிட முன்னேற்றக் கழகம், வலதுசாரி கம்யூனிஸ்டு, இடதுசாரி கம்யூனிஸ்டு, சுதந்திரா பி சோ. கட்சி, முஸ்லீம் லீக், தமிழரசுக் கழகம் ஆகிய 7 கட்சிகளும் ஆதரவு கொடுக்க முன்வந்துள்ளன. இத்தொகுதியில் சோஷலிஸ்ட் சார்பில் சண்முகசுந்தரமும் காங்கிரஸ் கே. பி. முத்துச்சாமியும் போட்டியிடுகின்ருர்கள்.

### எம். ஜி. ஆர். ரசிகர்களுடன் மோதல்

பெங்களூருக்கு அருகிலுள்ள பத்ராவதி என்ற இடத்தில் எம். ஜி. ஆர். ரசிகர்களுக்கும், கன்னடர்களுக்கும் இடையே நடைபெற்ற கைகலப்பைத் தடுக்க பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர் இதில் சிலருக்குப் படுகாயமும் ஏற்பட்டது.

### புளியம்பழம் பலிவாங்கியது

புளியம்பழச் சண்டை வாலிபர் ஒருவரின் உயிரைப் பலிவாங்கியது. இந்தச் சம்பவம் பூந்தமல்லி என்ற இடத்தில் நடைபெற்றது. நாகப்பன் என்ற இந்த வாலிபனை ஈட்டியால் குத்திக் கொன்ற சந்தேகத்தில் நால்வரை பொலிஸார் தேடிவருகின்றனர்.

### ஐவர் பலி

கம்புகள் ஏற்றிவந்த லொறியொன்றும், கார் ஒன்றும் ஒசூர் அருகே மோதுண்டதால் ஐவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மாண்டனர். 23 பேர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கலைப்பட்டதாரிகள் பிரச்னை

பெரிதாகக் கருதக்கூடாது

கோட்டை, செவ்.

''முப்பது வருடங்களுக்கு முன்னர் நான் கலைப்பட்டதாரியாக வெளிவந்த போதும் வேலை கிடைப்பது கஷ்டமாக இருந்தது. இதே நிலையில் அன்று கஷ்டப்பட்ட பட்டதாரிகளே அரசாங்க அதிகாரிகளாகவும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களாகவும், அரசாங்க இலாகாத் தலைவர்களாகவும், உயர் உத்தியோகஸ்தர்களாகவும்

## அச்சுவேலிகுடியேற்றத்திட்டம் 26குடும்பங்கள் வெளியேறின

யாழ்ப்பாணம் செவ்வாய்

அச்சுவேலி குடியேற்றத் திட்டத்தில் குடியேறிய ஐம்பத்தினுன்கு குடும்பங்களில் சுமார் 26 குடும்பங்கள் குடி தண்ணீர் கஷ்டம் ஏற்பட்டதினுல் குடியேற்றத் திட்டத்தை விட்டு வெளியேறி விட்டதாக அறியப்படுகிறது.

இக் குடியேற்றத்திட்டத்துக்காக ஏழு கிணறுகள் வெட்டப்பட்டுபோதும், இதுவரைகாலமும் இரண்டே இரண்டு கிணறுகளில்தான் தண்ணீர் இருந்து வருவதாகவும் தற்போது அந்த இரண்டு கிணறுகளிலுமிருந்த தண்ணீர் வற்றிவிட்டதாகவும் இதனுல் மக்கள் குடியேற்றத்திட்டத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலையேற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

குடியேற்ற வாசிகளின் வெளியேற்றத்துக்கு காரணமாயுள்ள தண்ணீர்பற்றி கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு எஸ். கதிரவேலுப்பிள்ளைக்கும் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் குடியிருப்பு பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு வின்ஸ்லோவுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனுல் குடியிருப்பு பாதுகாப்பு உத்தியோகத்தர் தண்ணீர் பெற வசதி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து மீதியாகவுள்ள 28 குடும்பங்களையும் வெளியேற வேண்டாமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### விவசாயிகளுக்கு உதவி

கோட்டை, செவ்.

விவசாய அபிவிருத்தியில் ஈடுபட்டிருக்கும் சகல திணைக்களங்களைச் சேர்ந்த பல்வேறு உத்தியோகத்தர்களை ஒரு முகப்படுத்த வேண்டிய அவசியத்தைக் காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வா இன்று அசசாங்க அதிபர்கள் மகாநாட்டில் வற்புறுத்தினுர்.

மூன்று நாள் அரசாங்க அதிபர்கள் மகாநாட்டின் இறுதி நாளான இன்று காணி நீர்ப்பாசன மந்திரி அரசாங்க அதிபர்களுக்கு விவசாயிகளுக்கு எவ்விதத்தில் உதவி அளிகலாம் என்பது குறித்து விரிவாக எடுத்துக் கூறினுர்.

விவசாயிகளுக்கு நவீன முறையில் விவசாயம் சம்பந்தமான அறிவைப் புகட்டுவதற்கு அரசாங்க அதிபர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று திரு. சி. பி. டி. சில்வா கேட்டுக் கொண்டார்.

குடியேற்றத்திட்டம் சம்பந்தமானபிரச்னைகள் குறித்தும் அரசாங்க அதிபர்கள் கலந்துரையாடினுர்கள்.

உணவு அமைச்சர் திரு. எம். டி. பண்டாவும் உரை நிகழ்த்தினுர்.


ராஜா 72வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45p.m
Pre-Poya, Poya 10-30 a.m
John Wyne, Dean Martin
in
SONS OF KACIELDER

REGAL at Jaffna
Daily 4-45, 7& 9-45 p.m
Muga Takewaki,
Jitsuko Yoshimura
in
SECRET AGENT 101
(color)

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - கல்பனு
நடித்த
மதருஸ் To பாண்டிச்சேரி

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெய்சங்கர் - எல். விஜயலக்ஷ்மி
நடித்த
சபாஷ் தம்பி

ராணி
யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்.
கல்யாணகுமார்,
முத்துராமன், தேவிகா
நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

செய்தொழில் விருத்தியும், சென்ற இடம் சிறப்பும், யந்திர வளர்ச்சியும், வாகன விருத்தியும், சிலர் இரத்த அழுத்த நோயினுல் பாதிக்கப்படலாம். சிறுவர் கல்வி சிறப்பைத்தரும் நல்லாண்டாகும்.

[illegible] வாதிகள் மட்டுமல்ல பொறுப்புள்ள சில பத்திரிகைகளும்கூட இந்தப் பணியில் இறங்குவதற்குத் தயங்குவதில்லை.

எந்த அரசாங்கம் ஆட்சி பீடத்திலிருந்தாலும் அவை

[illegible] சென்று மக்களுடன் தொடர்பு கொண்டு, நேரில் நிலைமையை அறிந்துகொள்ள முடியுமானுல் 'தி. மு. க.' 'நாம் தமிழர் இயக்கம்' என்ற பொய்ப் பிரசாரங்களுக்கும் வீண் பீதியை ஏற்

[illegible] வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

திரு. வி. கந்தவனம்பேசுகையில், அண்ணு ஓர் ஆறு போன்று மொழியையும் தமிழ் சமூகத்தையும் வளப்படுத்தியவர் என்ருர்.

[illegible] ரான திரு. எஸ். கனகரத்தினம் நேற்றிலிருந்து இம் மாதம் 30-ம் திகதிவரை யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை நீதிமன்றங்களின் தற்காலிக மாஜிஸ்டிரேட்டாககடமை யாற்றுகின்ருர். (கா. நி

[illegible] நிலையில் அன்று கஷ்டப்பட்ட பட்டதாரிகளே அரசாங்க அதிகாரிகளாகவும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களாகவும், அரசாங்க இலாகாத் தலைவர்களாகவும், உயர் உத்தியோகஸ்தர்களாகவும் இன்று விளங்குகிருர்கள் ஆகவே இன்று பட்டதாரிகளிடையே நிலவி வரும் வேலையில்லாப் பிரச்னையை சமூகம் பெரும் பாரமாக மதிக்கக்கூடாது. அவர்களை நாட்டின் செல்வங்களாகக் கருதவேண்டும்.''

பட்டதாரிகளிடையே வேலையில்லாப் பிரச்னை என்னும் பொருள் பற்றிக் கோட்டை வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய கொழும்பு கலைப்பிரிவுப் பேராசிரியர் கே. குலரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# 6000 மக்கள் வாழும் அங்குய்லா தீவுக்கு ஆபத்தா?

அங்குலா, அங்குல்லா, அங்கியூலா, அங்குய்லா.

இதென்ன கீலா. மாலா என்று யோசிக்கிறீர்களா?

இப்படிப் பெயர்ச்சிக்கல் இடையிடையே ஏற்படுவதுண்டு.

உள்நாட்டுச் சண்டை, ஆதிக்கப் போட்டி, அந்நிய அரசுகளின் தலையீடு, ஆக்கிரமிப்பு போன்ற சம்பவங்கள் நிகழும்போதுதான் உலகில் எங்கோ ஒரு மூலையிலிருக்கும் சிறிய நாட்டின் பெயரும் பெரிதாக உலகில் அடிபடத் தொடங்குகிறது.

அங்குய்லா தீவின் பெயரும் இப்போது அடிபடத் தொடங்கியிருப்பதற்கும் இது போன்ற சம்பவம் தான் காரணம். அங்குய்லா தீவின் பெயர்மட்டும் அடிபடவில்லை. பிரிட்டனின் பெயரும் சேர்ந்தே இழுக்கப்பட்டுள்ளது. இதில் யாருக்கு நற்பெயர் கிடைக்கும். யாருக்கு அவப்பெயர் கிடைக்கும் என்பதுதான் இப்போதுள்ள நிலைமை. நிச்சயம் பிரிட்டனின் நற்பெயர் பாதுகாக்கப்படுமென்று சொல்வதற்கில்லை.

கரிபியன் தீவுகளில் ஒன்று தான் அங்குய்லாதீவு. 36 மைல் சதுர பரப்பளவைக் கொண்ட இத்தீவின் மக்கள் தொகை ஆருயிரம் தான். அதாவது நமது நெடுந்தீவை விடச் சிறிது பெரியதீவு அங்குய்லா. நெடுந்தீவின் ஜனத்தொகையை விடக் குறைவு தான்.

ஒரு சிலரிடம் துருப்பிடித்த பழைய காலத் துப்பாக்கியைத் தவிர ஆயுதமெதுவுமில்லாத அங்குய்லா மக்களை அடக்கியொடுக்குவதற்காக பிரிட்டன் பாராதுருப்புக்களைக் கொண்டுபோய் இறக்கியதுதான், அத்தீவின் பெயர் உலகில் பெரிதாக அடிபடத் தொடங்கியதற்கு காரணம். கரிபியன் தீவுகளிலுள்ள தோட்டங்களில் வேலை செய்வதற்கு ஆபிரிக்கர்களை அடிமைகளாகக் கொண்டுவந்து சேர்த்தனர் பிரிட்டிஷார் பின்னர் இத்தீவுகளின் ஆதிக்கம்பற்றி பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது. பின்னர் 1667-ம் ஆண்டிலும் 1814-ம் ஆண்டிலும் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி இத்தீவுகள் பிரிட்டனின் ஆதிக்கத்துக்குள்ளானதென ஒப்புக்கொள்ளப்பட்டது. பிரிட்டிஷாரின் நேரடி ஆளுகைக்கு நீண்டகாலம் உட்பட்டிருந்த கரிபியன் தீவுகளை அன்ரிகுவா, சென்ட்கிட்ஸ், அங்குய்லா ஆகியவைகளை 1967-ல் ஒன்ருக இணைத்து காமன்வெல்த்துக்குட்பட்ட 'சுயாட்சி' அமைப்பாக மாற்றப்பட்டது. ஆயினும் வெளிவிவகாரமும் பாதுகாப்பும் பிரிட்டனிடமே இருந்தது. இந்த இணைப்பை அங்குய்லா மக்கள் விரும்பவில்லை. தாம் சுதந்திரமாக சுயாதிபத்திய உரிமைகளுடன் வாழவேண்டுமென விரும்பினர். இதற்குப் பிரிட்டன் இடமளிக்கவில்லை. ஆனுல் அங்குய்லா தீவு மக்களின் சுதந்திரவேட்கையை அடக்க முடியவில்லை.

அங்குய்லாதீவைசுதந்திரக் குடியரசாக பிரகடனப்படுத்தி அதன் அதிபராஞர் அத்தீவு மக்களின் தலைவர் வெப்ஸ்டர் இந்தக் குடியரசுப் பிரகடனத்தின் பின்னர் பிரிட்டனுடன் பேச்சு நடத்த தயார் என்றும் அறிவித்தார்கள்.

இச் சமயத்தில் அங்கு படைகளைக் கொண்டுபோய் பிரிட்டன் இறக்கியிருக்கிறது. அதாவது தானே சுதந்திரம் வழங்கிய ஒரு தீவுக்கு அந்தத் தீவு மக்கள் பூரண சுதந்திரத்தை நாடியதால் மீண்டும் அதைக் கைப்பற்ற பிரிட்டன் துணிந்திருக்கிறதா? இது அங்குய்லாதீவுடன் மட்டும் நிற்காது பல ஹின மாயுள்ள இதர சிறிய நாடுகள் மீதும் தீவுகள் மீதும் பிரிட்டன் மீண்டும் ஆதிக்கம் செலுத்த வழி வகுக்காதா உதாரணமாக இலங்கை சுதந்திரமடைந்துள்ளபோதிலும் இன்னும் இலங்கைக்கு பிரிட்டிஷ் அரசிதான் மகாராணி. இலங்கை மீதும் படைகளை அனுப்பி பிரிட்டன் தனது ஆதிக்கத்தை

## உலக மேடை

**எஸ். எம். ஜி.**

நிலை நாட்ட அங்குய்லா ஒரு பரிசோதனைக் களமாகப் பயன் பட மாட்டதெ பது என்ன நிச்சயம்?

ஆனுல் வெள்ளையர்கள் கறுப்பர்களை அடக்கி ஆள்வதற்கும் அவர்களைச்சுரண்டி வாழ்வதற்கும் ஒரு தலைப்பட்சமாக 'சுதந்திர' பிரகடனம் செய்தால் நிச்சயம் அங்கு பிரிட்டன் தனது படைகளைக் கொண்டுபோய் இறக்கமாட்டாது. 'அகிம்சை' பேசும் பொருளாதாரத் தடை நடவடிக்கைகள் பற்றி நியாயம் சொல்லும் இதற்கு ரொடீஷியா உதாரணம்

சுமார் நாற்பது லட்சம் சுதேசிய ஆபிரிக்கர்களின் நடான ரொடீஷியாவில்குடியேறி வாழும் இரண்டு லட்சம் வெள்ளையர் (பிரிட்டிஷ் பரம்பரையினர்) அயன் ஸ்மித்தின் தலைமையில் ஒரு தலைப்பட்சமாக 'சுதந்திர' பிரகடனம் செய்து பிரிட்டிஷ் அரசாங்கத்தையே அவமானப்படுத்திய போதிலும் அந்த வெள்ளையரின் ஒரு தலைப்பட்ட செயலுக்கு எதிராகப்படைகளை அனுப்பி நடவடிக்கை எடுக்க பிரிட்டனின் வில்சன் அரசாங்கம் இன்னமும் தயாராக இல்லை.

அல்ஜீரியாவில் இப்படி 'வெள்ளையர்' சண்டித்தனம் செய்ய முனைந்த போது அவர்களின் வாலை ஒட்ட நறுக்கிய பிரஞ்சு அதிபர் ஜெனரல் டிகாலின் துணிச்சலும் நேர்மையும் பிரிட்டனுக்கு இல்லையா?

ஏடனில் சுதேசிய மக்கள் சுதந்திரக் கோரிக்கை விடுத்ததும் அதைப் படை பலம் கொண்டு அடக்க முடியும், நிராயுத பாணிகளான சிறிய அங்குய்லா மக்களை படை பலத்தைக் காட்டி பயமுறுத்த முடியும் ஆனுல் ரொடீஷியாவில் பெரும் பான்மையினரான ஆபிரிக்க மக்களை அடக்கி ஒடுக்கும் சிறுபான்மையினரான வெள்ளையருக் கெதிராக நடவடிக்கை எடுக்க பிரிட்டனுக்கு மனமில்லை.

அங்குய்லாவின் நிலைமையை எடுத்துக் கூறி நியாயம் வழங்கும்படி கேட்பதற்காக ஐ. நா.வுக்குச் சென்றிருக்கிருர் அங்குய்லா தீவின் அதிபர் வெப்ஸ்டர். அப்பாவிகளான ஆருயிரம் அங்குய்லா மக்களுக்கு ஒருவல்லரசிடமிருந்து பாதுகாப்பளித்து அவர்களுக்கு நியாயம் கிடைக்க பிரிட்டன் வழி செய்ய முடியவில்லையாயின் உலக மன்றம் இருந்துதான் என்ன பயன்?


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பீச்ரோட்டில் 6 பரப்புக்காணி கூடிய விலைக்குக் கேட்போருக்குக் கொடுக்கப்படும். திருமதி சி.எஸ்.பி. குமாரகுலசிங்கி, 30 A, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 791

சலப்பற்ற உயர் ஜாதி 3 வார அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ஆண் ரூபா 125/-, பெண் ரூபா 100/- மேதர், 18 சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 792

## ஏல விற்பனை

சந்தை, ஆஸ்பத்திரி, கல்லூரிகள் முதலியவை 1/2 — 3/4 மைல் தொலைவுக்குள்ளும், திருநெல்வேலி குழாய்நீர் மிக அருகாமையில் கிடைக்கக் கூடியதாகவும் அமைந்துள்ள 20 அடி பாதையுடன் கூடிய 20 கட்டடக்காணித்துண்டுகள் — 43 பரப்புகள் ஏலத்தில் விற்கப்படும்

1 1/2—2 பரப்புத்துண்டுகளாகவும் பெறலாம்.

விற்பனைக்கான திகதியை எதிர்பாருங்கள்.

யாழ்ப்பாணத்தில் எமது பிரதிநிதி:

சி. கனகரட்ணம், 3-ம் மைல், கொக்குவில்.

**அவ்லோன் ட்ரேட்ஸ்**

றியல் எஸ்டேட் ஏஜன்ட்ஸ்

குருநாகல்.

டெலி: 6179 1199



இப்பத்திரிகை, ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம்ஆண்டு மார்ச் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


### தமிழரசுக் கிளை புதிய நிர்வாகிகள்

அளவெட்டி, செவ்.

தெல்லிப்பளை தமிழரசுக் கட்சிக் கிளைக் கூட்டம் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-திரு. வ. சரவணமுத்து, உபதலைவர்கள்:- திருவாளர்கள் வே. சந்தையா, வே. சண்முகம், நா. பாலசுந்தரம், கா. சுப்பிரமணியம். இணைச்செயலாளர்கள்:- திருவாளர்கள் க. சிவபாலசுந்தரம், சி. சித்தியானந்தன். பொருளாளர்:- தி. க. இராஜசேகரன்.

### ''ஆசிரியர் பகடைக் காய்களல்லர்''

பருத்தித்துறை செவ்வாய்

ஆசிரியர் பகடைக் காய்களாகக் கருதப்பட்டால் கல்வி வளர்ச்சி வெறும்பேச்சளவில் மட்டுந்தான் இருக்கும். பலஆண்டுகளாக தாங்கள் இருதய பூர்வமாக திரிகரண சுத்தியுடன் கட்டி வளர்த்த பாடசாலைகளை விட்டு வேறு பாடசாலைகளில் ஓர் ஆசிரியன் கடமையாற்றும்படி பணிக்கப்பட்டால் அவனது வேலை கடமை வேலையாகவே இருக்கும்.

இவ்வாறு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து இடமாற்றம் பெற்ற திருவாளர்கள்; கே. எஸ். குலசிங்கம் ஆர். இராதா கிருஷ்ணன் ஆகியோருக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்தின் போது திரு. கே. எஸ். குகதாசன் கூறினுர்.


[illegible] பாண்டிச்சேரி | [illegible] சபாஷ் தம்பி

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்.

கல்யாணகுமார், முத்துராமன், தேவிகா நடித்த

**நெஞ்சில் ஓர் ஆலயம்**

யாழ்ப்பாணம்

**வின்ஸர் திரையில்**

தினசரி 4 காட்சிகள்

முத்துராமன், ராஜ் ஸ்ரீ, நாகேஷ், சுந்தரராஜன், ஜெயபாரதி

நடித்த

**அனுபவி ராஜா அனுபவி**

கெப்பிட்டல் பிளாஸா மைலன்

ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹற்றன்)

மற்றும் சினிமாஸ் திரைகளில்


எஸ். வி. ரங்கராவ், பானுமதி முத்துராமன், பாரதி, ஏ. வி. எம். ராஜன், நாகேஷ் நடித்த

வாசு பிலிம்ஸ் அளிக்கும்

**பூவும் பொட்டும்**

டைரக்ஷன்: தாதாமிராசி

இங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி, விஜயா, முத்துராமன், எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், குமாரிசச்சு

இன்னும் பலர் நடித்த

ஸ்ரீதரின்

**ஊட்டி வரை உறவு**

(ஈஸ்ட்மென் கலர்)

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணுநிதியின் விமர்சனத்துடன்

எஸ். எஸ். வாசன் அவர்களால்

ஈஸ்ட்மன் கலரில் படமாக்கப் பட்டு சென்னையில் நடைபெற்ற

இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு கோலாகல காட்சியையும்

மற்றும்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணு ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org